RESTAURANT VIGNESHWAR
முற்றிலும் வேறுபட்ட சுவையான பல புதிய உணவு வகைகள்
விக்னேஷ்வர் உணவகம்
உங்கள் கொண்டாட்டங்கள் அனைத்திற்குமான உணவுகளை வேண்டுகை செய்து பெற்றுக்கொள்ளலாம்
Tel: 0142052179 / 0620440537
14, Rue Perdonnet , 75010 Paris
Métro: La Chapelle/Gare du Nord

1.50 Euro ஜேர்மனி

# ஈழமுரசு

ஐரோப்பா

POOBALAM WEEKLY


2004 26 Mai - 01 Juin 2004 15

சம்யுக்தா
Credits Immobiliers
வீடு வாங்க கடன் உதவி
அரச அங்கீகாரம் பெற்ற நிறுவனம்
SAM-YUKTHA
Credits-Finances-Investssements
6, Rue Cail -75010 Paris
Tél/Fax: 01 40 34 03 24
(M°: La Chapelle/Gare du Nord)

# பேச்சுவார்த்தை எப்போது ?

## சந்திரிகாவின் சந்திப்பின் பின்னரே தெரியும்

சூல்கைம்



(24.05.04)

பேச்சுவார்த்தைக்கான உத்தரவாதங்களை ஜனாதிபதி எழுத்து மூலம் தருவாரா இல்லையா என்பது பற்றி ஜனாதிபதியை சந்தித்த பின்னரே கூறமுடியும் என்று கொழும்புக்கு விஜயம் செய்துள்ள சமாதானத்துாதுவர் எரிக் சொல்ஹெய்ம் தெரிவித்துள்ளார். இன்று பிற்பகல் கொழும்புக்கு வந்த அவர் கட்டுநாயக்கா விமான நிலையத்தில் வைத்து தமிழ் ஊடகவியலாளர் ஒருவரிடம் கருத்து தெரிவிக்கையில் இவ்வாறு தெரிவித்திருக்கின்றார்.

3 ▶

## கிழக்குப் பல்கலைக்கழக விரிவுரையாளர் சுட்டுக் கொலை



4


(24.05.04)

கிழக்குப் பல்கலைக்கழகத்தின் சிரேஷ்ட விரிவுரையாளர் குமாரவேலு தம்பையா இனந்தெரியாதோரால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார். இன்று திங்கள்கிழமை மாலை 4.30 மணியளவில் இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

# பாரிஸ் விமான நிலையக் கட்டடம் இடிந்து விழுந்தது

(24.05.04)

பிரான்சின் மிகப் பெரிய விமான நிலையங்களில் ஒன்றான சாள்ஸ் து கோல் விமான நிலையத்தின் 2வது E பிரிவு கட்டடம் கடந்த ஞாயிற்றுக் கிழமை காலை ஏழு மணிக்கு திடீரென்று இடிந்து விழுந்துள்ளது.



3

விடுதலைப்புலிகளின் விமான அச்சுறுத்தல்களை எதிர்கொள்ள சிறீலங்கா அரசு தயாராகின்றது

25

Orient Textilien & Schmuck
Koenigswall 16 (AM hbf),
44137 Dortmund-
Tel: 0231-162377
Fax:49-231-147836
தரம் உத்தரவாதம் அதிகதேர்வு மலிவோ மலிவு!!

* அனைத்து ஜவுளி வகைகள்
* கனம், தரம் மிக்க எவர்சில்வர் பாத்திரங்கள்
* அழகிய அன்பளிப்புப் பொருட்கள், அலங்கார ஆபரணங்கள், பரதநாட்டிய உடைகள்
* வாத்தியக் கருவிகள், கைக்கடிகாரங்கள்
* நவீன வண்ணங்களில் தரமான தங்காபரணங்கள், தாராள தேர்வில் 916/22K உத்தரவாதத்துடன் சிங்கப்பூர் விலையில் விற்பனையாகிறது.



உரிமையாளர்: ச.ஜெகதீஸ்

உண்மையின் முன்னால் நடுநிலைமை என்பது இல்லை - கப்டன் கஜன்



# V.T.Cash & Carry

900g யாழ்ப்பாணம் மிளகாய்தூள் ஒரு போத்தல் 1Euro - மட்டக்களப்பு முறையில் தயாரிக்கப்பட்ட கட்டா கருவாடு 250g 1euro - 350 ச.மீற்றரில் அமைந்துள்ள ஸ்தாபனம்

Tél: 01 40 05 07 18
Fax: 01 40 05 06 92

15, Rue Cail, 75010 Paris.
M°: La Chapelle-Gare du Nord


# `நாசகார படையணி'யை பிடிக்கும் நடவடிக்கையில் விடுதலைப் புலிகள்

(24.05.04)

`நாசகார படையணி'யை பிடிக்கும் நடவடிக்கையில் விடுதலைப் புலிகள் இறங்கியுள்ளதாக தெரிய வருகிறது. அண்மைக் காலத்தில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியினுள் நடத்தப்பட்ட மூன்றுக்கும் மேற்பட்ட ஊடுருவல் தாக்குதலில் ஏழு போராளிகள் கொல்லப்பட்டதுடன் பலர் காயமடைந்துள்ளனர். இந்தத் தாக்குதல்களை, தமிழ் குழுக்களின் உதவியுடன் படையினரே மேற்கொண்டு வருவதாக விடுதலைப் புலிகள் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிடம் தொடர்ச்சியாக முறைப்பாடுகளைச் செய்து வருகின்ற போதிலும் படையினர் இதனை மறுத்து வருகின்றனர்.

இந்த நிலையில் இந்த ஊடுருவல் படையணியை பிடிக்கும் நடவடிக்கைகளில் விடுதலைப் புலிகள் தீவிரமாக இறங்கியுள்ளனர். இதற்காக பொதுமக்களின் உதவியையும் அவர்கள் நாடியுள்ளனர். தங்கள் புலனாய்வுப் பிரிவை துரிதமாக மீளக் கட்டியெழுப்பி வரும் அவர்கள், தங்கள் கட்டுப்பாட்டுப் பகுதிகளினுள் இந்தப் படையணி ஊடுருவுவதை தடுக்கும் திட்டங்களையும் தீட்டியுள்ளனர். இதேநேரம், தங்கள் கட்டுப்பாட்டுப் பகுதியினுள் தங்களின் முக்கியஸ்தர்களின் நடமாட்டங்களையும் மாற்றியமைப்பதுடன் இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதியினுள்ளும் தங்கள் உறுப்பினர்களின் நடமாட்டங்கள் தொடர்பாகவும் திட்டங்களை வகுத்துள்ளார்கள்.


## Meubles Europeens

உங்கள் வீட்டுத் தளபாடத் தேவைக்கு ஜேர்மன், பெல்ஜியம் தயாரிப்பு புதிய பழைய வீட்டுத் தளபாடங்கள் மலிவு விலையில்.
லெதர் சோபாக்கள் 3+ 2+1 சோகேஸ்
சாப்பாட்டு மேசைகள் கட்டில்
அலுமாரி குசின செட் மற்றும் அனைத்துவகை வீட்டுத் தளபாடங் களையும், வீட்டுப் பாவனைப் பொருட்களையும் உங்கள் விருப்பம் போல் தெரிவு செய்துகொள்ள நாடுங்கள்.

Meubles Europeens
4, Rue Des Villas
94800 Villejuif
Mo -Villejuif Louis Aragon (N°: 7)
Tél: 01 46 77 19 40 - 06 64 42 42 62

**திறக்கும் நேரம்**
திங்கள் முதல் சனி வரை - 14H - 20H
ஞாயிறு - 10H - 18H

## துயர்துடைப்பு நாட்கள்-2004
ஜுன் 01 முதல் ஜுலை 05 வரை

தமிழர் புனர்வாழ்வுக் கழகம் - பிரான்சு
Organisation Pour La Réhabilitation Des Tamouls
26, Rue Du Département, 75018 Paris, France.Tél/Fax:01 40 38 30 74
e-Mail:trofrance@trofr.com - web:http://www.trofr.com

## TCN Films, Music Indian இணைந்து வழங்கும்

பாரிஸ் வெண்திரையில்
மணிரத்தினம் இயக்கத்தில்
2வது வெற்றி வாரமாக

ஆய்த எழுத்து




நடிகர்கள்
மாதவன்
சூர்யா
சித்தார்த் (Boys புகழ்)
இஷாதியோல்
த்ரிஷா
மீரா ஜாஸ்மின் மற்றும் பலர்

காலம்:
சனி: 29.05.04 – 20.15
ஞாயிறு: 30.05.04 – 18:00 – 21:00
திங்கள்: 31.05.04 – 20:15

இசை: A.R. ரஹ்மான்

தொடர்புகட்கு:
www.tamilcine.net
TCN Films: 06 10 35 77 19 (Ramesh)
Music Indien: 01 40 05 18 22 (Jeya)

இடம்: ESPACE CINEMA
Quatre Chemins, Aubervilliers.

## வீடு வாடகைக்கு

STUDETTE - Métro La Courneuve லிருந்து 5 நிமிட தூரம். Petit Meuolé, Wc, Douche, Lavabo, Evier, chauffage tous confor et Neuf, centre commerciale carrefour மற்றும் சந்தைக்கு அருகில் உள்ளது.
**வாடகை: மாதம் 395 ஈரோ** (Charges உட்பட).
தொடர்புகளுக்கு: 0674395902

## EUROCONSULT SARL TRADUCTIONS

**மொழி பெயர்ப்பு நிலையம்**
அனைத்துவித மொழி பெயர்ப்பு, இலவச சட்ட ஆலோசனை, வர்த்தக - கணக்காய்வு - தொழிலாளர் பிரச்சனைகள், நிர்வாக கடிதம் போன்ற உங்கள் தேவைகளுக்கு
24, Rue Perdonnet , 75010 Paris
Tel: 0153267010 - Fax: 0153267502

## போட்டோ பாலா

மங்கலகரமான உங்கள் விழாக்கள் மற்றும் அனைத்து நிகழ்வு போட்டோ அல்பங்களை பாதுகாப்பான முறையில் Lamination செய்துகொள்ளலாம்
உங்கள் அனைத்து தொடர்புகளுக்கும்:
Photo Bala
87 Rue de Clignancourt, 75018 Paris
Tel&Fax: 01.42.23.39.15 / 06 18 35 40 77

## Errances Travels

55, Rue Louis Blanc,
75010 Paris.
M°: La Chapelle ou Louis Blanc

Tel: 01 42 09 70 00
Fax: 01 42 09 53 39

மற்றைய நாடுகளுக்கும் எமது சேவை விஸ்தரிக்கப்பட்டுள்ளது

*à partir de*

| | | |
|---|---|---|
| Bombay | - | 560 Eu |
| Delhi | - | 560 Eu |
| Bangkok | - | 550 Eu |
| Colombo | - | 660 Eu |
| Singapour | - | 660 Eu |
| Madras | - | 658 Eu |
| New york | - | 550 Eu |
| Montreal | - | 540 Eu |
| Oslo | - | 315 Eu |
| Toronto | - | 540 Eu |

# பாரிஸ் விமான நிலையக் கட்டடம் இடிந்து விழுந்தது

## புதிய தொழில் நுட்பத்திற்குக் கிடைத்த தோல்வி

(24.05.04)

பிரான்சின் மிகப்பெரிய விமான நிலையங்களில் ஒன்றான சாள்ஸ் டு கோல் விமான நிலையத்தின் 2வது E பிரிவு கட்டடம் கடந்த ஞாயிற்றுக்கிழமை காலை ஏழு மணிக்கு திடீரென்று இடிந்து விழுந்துள்ளது. அமெரிக்கா நியூ யோர்க் நகரத்தில் இருந்து ஒரு விமானமும் தென்னமரிக்காவின் ஜோன் ஸ்பேர்க் நகரத்தில் இருந்து மற்றொரு விமானமும் தரை யிறங்கி தரிக்க எத்தனித்த வேளை யில் இந்த கட்டடத்தின் ஒரு பகுதி இடிந்து விழுந்துள்ளது.


இது இடிந்த வேளையில் செக் குடியரசின் தலைநகர் பிராக் நோக்கி ஒரு விமானம் புறப்படத் தயாராக இருந்தது. இச்சம்பவத்தில் ஐந்து பேர் உயிரிழந்ததாகவும் மூன்று பேர் படுகாயங்களுக்கு உள்ளானதாகவும் பாரிஸ் விமான நிலைய அதிகார சபைப் பேச்சாளர் தெரிவித்துள்ளார். இந்த கட்டடம் இடிந்து விழுந்ததற்கு நாச வேலைகள் ஏதும் காரணமாக இருக்கலாமோ என்று முதலில் அஞ்சப்பட்ட போதிலும் கட்டுமானக்கோளாறே இதற்கு காரணம் என்று முதற்கட்ட விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது.

கடந்த வருடம் யூன் மாதம் 17ம் திகதி திறக்கப்பட்ட இந்தப் புதிய 2 E பிரிவு உலகில் எங்கும் இல்லாத நவீன கட்டடக்கலை வடிவமைப்போடு அனைத்து நவீன வசதிகளையும் கொண்டதாக அமையவேண்டும் என்று பிரான்ஸ் அரசு திட்டமிட்டுக் கட்டிய ஒரு கட்டடமாகும்.




பத்திரிகையாளர்களுக்கு பதலளிக்கும் விமான நிலைய அதிகாரி

பொல் ஆந்ரு என்ற கட்டக் கலைஞரால் வடிவமைக்கப்பட்ட இந்த கட்டடம் 450 மீற்றர் நீளமுடையது. இது 650 மீற்றர் நீளமான கம்பிகளால் தாங்கும் விதத்தில் அமைக்கப்பட்டிருந்தது. 17 விமானங்கள் ஒரேதரத்தில் தரிக்கக்கூடிய வசதியையும் இது கொண்டிருந்தது. தற்போது பிரான்சினால் புதிதாக உருவாக்கப்படும் உலகில் அதி பெரிய விமானமான A380 ரக விமானமும் இங்கு தரித்து நிற்கக்கூடியதற்கு ஏற்ற வகையிலேயே இந்தக்கட்டடம் அமைக்கப்பட்டது. வித்தியாசமான கட்டக்கலையை கொண்டுவர வேண்டும் என்பதற்காக பலவேறு நிறுவனங்களுக்கு கட்டுமானப்பணியில் மாற்றிமாற்றி சந்தர்ப்பம் கொடுத்தமை முறைகேடுகள் நடப்பதற்கு சாத்தியக் கூறுகள் இருந்திருக்கலாம் என்பதை விமான நிலைய அதிகாரிகள் ஒத்துக்கொண்டுள்ளனர். கடந்த வருடம் யூன் மாதம் 17ம் திகதி இந்தக்கட்டடம் திறக்கப்பட்டபொழுது விமான நிலைய பாதுகாப்பு அதிகார சபை இதைத்திறப்பதற்கு எதிர்ப்புத் தெரிவித்திருந்ததாக கூறப்படுகிறது. இந்தப் பகுதியில் பயணிகளுக்கு போதிய பாதுகாப்பு வசதிகள் இல்லையென்றும் பல தொழில்நுட்பக்கோளாறுகள் இருப்பதாகவும் கூறியே இந்தத் தடையை விதிக்கக் பாதுகாப்பு அதிகாரசபை கோரியது. இந்தத் தடையை மீறி இந்தக்கட்டடம் திறக்கப்பட்ட சில தினங்களில் மின் விளக்கு கம்பமொன்று சாய்ந்து விழுந்ததையும் மின் விளக்குகள் எரியாமல் போனதையும் ஊடகங்கள் சுட்டிக்காட்டியுள்ளன. இந்தக் கட்டடத்தின் கூரைப்பகுதியே முதலில் இடிந்து விழுந்ததாகவும் இது விழுந்த நேரத்தில் மக்கள் அதிகளவிற்கு உள்ளே அனுமதிக்கப்படாததால் பெரிய அனர்த்தம் நிகழாமல் தவிர்க்கப்பட்டதாகவும் விமான நிலைய ஊழியர் ஒருவர் தெரிவித்துள்ளார். ஐந்து நிமிட இடைவெளியின் பின் இந்தக் கட்டடம் விழுந்திருந்தால், அமெரிக்க, தென்னமெரிக்க விமானங்களில் இருந்து இறங்கிவந்த பயணிகள் இந்த இடிபாடுகளுக்குள் சிக்கியிருப்பார்கள் என்றும் அந்த ஊழியர் தெரிவித்துள்ளார்.



கட்டடக் கலைஞர் பொல் ஆந்ரு

இந்த கட்டட விபத்து தொடர்பாக கருத்துத் தெரிவித்த விமான நிலைய அதிகாரசபை, இந்தக் கட்டடத்தை மறுபடி பயன்படுத்துவதற்கு முடியாவிட்டால் முழுமையாக இடித்துவிட்டு புதிததாக கட்டுவதற்கு தீர்மானித்துள்ளதாக தெரிவித்துள்ளது.

# பேச்சுவார்த்தை எப்போது ? சந்திகாவின் சந்திப்பின் பின்னரே தெரியும்

## - சூல்கைம்

(01ம் பக்கத் தொடர்ச்சி)

மேலும் அவர் கூறுகையில், அரசாங்கத்திற்கும் புலிகளுக்கும் இடையேயான பேச்சுவார்த்தைகள் விரைவில் ஆரம்பிக்கும் என்றும் ஜனாதிபதியையும் தமிழ்ச்செல்வனையும் சந்தித்த பின்னரே பேச்சுவார்த்தைக்கான திகதியை அறிவிக்க முடியும் என்றும் சொன்னார். இரு தரப்பும் பேச்சுவார்த்தைக்கான திகதியை மிக கிட்டியதாக தீர்மானிக்க வேண்டும் என்பதில் ஆர்வமாக இருப்பதாகவும் இம்முறை தனது விஜயத்தின் போது பேச்சுவார்த்தைக்கான திகதிகள் தீர்மானிக்கப்படும் என தான் நம்புவதாக தெரிவித்த அவர், கணிசமான அளவு சில எழுத்து மூலமான உறுதிமொழிகளை ஜனாதிபதி வழங்குவார் என தாம் எதிர்பார்ப்பதாகவும் கூறினார்.

இதேவேளை, போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் அதிகாரங்களை அதிகரிப்பது குறித்து சமாதானத்தூதுவர் எரிக் சூல்கைம் ஜனாதிபதியுடனும் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுத்தலைவருடனும் பேசுவார் என கண்காணிப்புக்குழுவின் பேச்சாளர் அக்னெஸ் தெரிவித்திருக்கின்றார். வடக்கு கிழக்குப் பகுதிகளில் விடுதலைப் புலிகளுக்கும் இராணுவத்திற்கும் இடையேயான அவ்வப்போது இடம் பெறும் போர் நிறுத்த மீறல்கள் தொடர்பாக உடனடி நடவடிக்கை எடுப்பதற்கு கண்காணிப்புக்குழுவிற்கு கூடுதலான அதிகாரங்கள் தேவைப்படுகின்றன. சில சமயங்களில் புலிகளின் தலைமைப்பீடத்திற்கும் இராணுவத் தலைமைப்பீடத்திற்கும் மீறல் சம்பவங்கள் தொடர்பாக அறிவித்த பின்னரே நடவடிக்கைகளை எடுக்க முடிகின்றது என சுட்டிக்காட்டிய அக்னெஸ், தன்னிச்சையான சில முடிவுகளை எடுக்கக்கூடிய அதிகாரங்கள் போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழவிற்கு தேவையென்று சொன்னார். இது பற்றி ஜனாதிபதியுடன் பேசியுள்ளதாகவும் அதற்கு அவர் கொள்கையளவில் இணங்கியிருந்ததாகவும் அவ்வாறே விடுதலைப் புலிகளும் அதற்கு விருப்பம் தெரிவித்திருந்ததாகவும் அக்னெஸ் தெரிவித்தார். இவ்விடயம் தொடர்பாக எரிக் சூல்கைம் இம்முறை அரசாங்கத்துடனும் விடுதலைப் புலிகளுடனும் பேசி தீர்க்கமான முடிவை எடுப்பார் என்றும் அக்னெஸ் மேலும் தெரிவித்தார்.

# இடைக்கால நிர்வாகம் ஜே.வி.பி. கடும் எதிர்ப்பு

அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் மீண்டும் சமாதானப் பேச்சுக்கள் ஆரம்பமாகும் போது இடைக் கால நிர்வாகக் கட்டமைப்புத் தொடர்பாகவே முதலில் ஆராயப்படவேண்டும் என்ற விடுதலைப்புலிகளின் நிலைப்பாட்டுக்கு ஜேவிபியினர் கடும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர்.

பேச்சுவார்த்தை மீளவும் ஆரம்பிக்கப்படும் போது அதில் அனைத்து தரப்பினரையும் உள்ளடக்க வேண்டும் என்றும் விடுதலைப் புலிகளை தமிழ் மக்களின் ஏகப் பிரதிநிதிகளாக ஏற்றுக் கொண்டு பேச்சுவார்த்தை நடத்தக் கூடாதென்றும் ஜே.வி.பி.யின் பிரச்சாரச் செயலர் விமல் வீரவன்சா தெரிவித்துள்ளார். இனப்பிரச்சினைக்கு இறுதித் தீர்வு காணும் பேச்சுக்களையே முதலில் நடத்தவேண்டும் என்றும் அவர் கூறியுள்ளார்.

"SHELVA" "ZUG"
Credit and Insurance
குறைந்த வட்டியில் அதிகூடிய
வங்கிக்கடன்
30% வீதத்தில் வாகனக் காப்புறுதி
சாரதிப் பத்திரம் இல்லாவிட்டாலும் 30 மட்டுமே...
வீட்டுக்காப்புறுதி, ஆயுட்காப்புறுதி
இலங்கையிலிருந்து சுவிஸ் வருபவர்களுக்கான மருத்துவக் காப்புறுதி
(Visa கிடைக்காவிட்டால் பணம் திருப்பிக் கொடுக்கப்படும்)
"SHELVA" "ZUG"
T.Thangarajah
Buonaserstr. 2
6343 Rotkreuz
Switzerland
Telefon
041 790 64 63
041 790 64 66
Fax
041 790 64 68
Natel
079 514 64 28

# ஆயுதங்களை கைவிட வேண்டுமென அமெரிக்கா கூறியிருப்பதை ஏற்றுக் கொள்ள முடியாது

## - சிங்கள ஊடகவியலாளர்

வடக்கு, கிழக்கு இடைக்கால தன்னாட்சி அதிகார சபையை அமைப்பதற்கு முன் தமிழீழ விடுதலைப் புலிகள் ஆயுதங்களை கைவிட வேண்டுமென அமெரிக்கா கூறியிருப்பதை ஏற்றுக் கொள்ள முடியாதென பிரபல சிங்கள ஊடகவியலாளர் ஒருவர் தெரிவித்துள்ளார். திருகோணமலையில் கடந்த செவ்வாய்கிழமை 'சமாதானமும், ஊடகங்களும்' எனும் தலைப்பில் நடைபெற்ற கருத்தரங்கு ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே, 'ஹராயா' பத்திரிகையின் ஆசிரியர் குழுவில் ஒருவரான ரனத் குமாரசிங்க இதனைத் தெரிவித்துள்ளார். இலங்கையின் சமாதானப் பேச்சுவார்த்தைகளின் ஊடாக தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையையும், தாயகத்தையும் ஏற்றுக் கொள்ளக்கூடிய வகையில் அரசியல் தீர்வொன்று காணப்படும் போது இயல்பாகவே விடுதலைப் புலிகள் ஆயுதங்களைக் கைவிடுவார்கள் என ரனத் குமாரசிங்க குறிப்பிட்டுள்ளார்.



அத்துடன், இலங்கையின் இனப்பிரச்சினையை தென்னிலங்கை ஊடகங்கள் சரியான கண்ணோட்டத்துடன் அணுகாமை குறித்தும், அவ்வூடகங்களின் ஒருபக்கச் சார்புத் தன்மை குறித்தும் இவர் தனதுரையில் கவலை தெரிவித்துள்ளார். வடக்கு, கிழக்கு இடைக்கால தன்னாட்சி அதிகார சபையை அமைப்பதற்கு முன் தமிழீழ விடுதலைப் புலிகள் ஆயுதங்களை கைவிட வேண்டுமென அமெரிக்காவின் தெற்காசிய விவகாரங்களுக்கான பிரதி இராஜாங்க அமைச்சர் கிறிஸ்டினா றொக்கா அண்மையில் கொழும்பில் நடாத்திய செய்தியாளர் மாநாட்டில் கூறியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# வெளிநாட்டவர் சிறீலங்காவில் காணி வாங்கத் தடை

சிறீலங்காவின் கரையோரப் பகுதியிலுள்ள நிலங்களை வெளிநாட்டவர் கொள்வனவு செய்வதற்கும், கரையோரப் பகுதிகளிலுள்ள புராதன இடங்களில் வெளிநாட்டவர்கள் குடியிருப்பதற்கும் தடை விதிப்பதென காணி அமைச்சு முடிவெடுத்துள்ளது.

சிறீலங்காவின் கரையோரப் பகுதியிலுள்ள நிலங்களை வெளிநாட்டவர்களுக்கு விற்கும் நடவடிக்கைகள் அதிகரித்து வருவதால் அதற்கெதிரான ஆர்ப்பாட்டங்கள் அண்மையில் பொது மக்களால் மேற்கொள்ளப்பட்டிருந்தது. இலங்கையில் நிலங்களை வெளிநாட்டவர் ஒருவர் வாங்குதாயின் முன்னைய காலங்களில் அவர் 100 வீதமான வரியினை செலுத்த வேண்டிய தேவையிருந்தது. ஆனால் 2003 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தின்கீழ் எதுவித வரிகளையும் செலுத்தாமலே பெருந்தொகையான நிலங்களை வாங்கும் நடவடிக்கையில் வெளிநாட்டவர்கள் ஈடுபட்டு வருவதாகவும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. இந்நிலையில் வெளிநாட்டவர்களின் இத்தகைய நிலச் சுவீகரிப்புக்களை இல்லாதொழிக்கும் வகையிலேயே இந்தச் டைச்சட்டத்தினை அமுல்படுத்துவதென சிறீலங்காவின் காணியமைச்சு தீர்மானித்துள்ளது.

## கிழக்குப் பல்கலைக்கழக விரிவுரையாளர்...

(01ம் பக்கத் தொடர்ச்சி)

(24.05.04)

மட்டக்களப்பு ஞானசூரியர் சதுக்கத்தில் உள்ள விரிவுரையாளரின் வீட்டிற்குச் சென்ற இனந் தெரியாதோர் இந்த துப்பாக்கிச் சூட்டை மேற்கொண்டுள்ளனர்.

உயிரிழந்தவரின் சடலம் மட்டக்களப்பு வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. இந்த சம்பவம் தொடர்பான விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன. மேற்படி விரிவுரையாளர் கருணாவின் அச்சுறுத்தல் காரணமாக மட்டக்களப்பில் இருந்து வெளியேறி, பின்னர் கருணா அங்கிருந்து அகற்றப்பட்டதன் பின்னர் மீளவும் வந்து கடமையாற்றியதாக தெரியவருகிறது.

## கொக்கட்டிச்சோலை சூத்திரதாரி கைது

கொக்கட்டிச்சோலையில் அமைந்துள்ள தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் பிரிவு மாவட்ட செயலகத்தில் இம்மாதம் 5ம் திகதி இடம்பெற்ற கைக்குண்டு வீச்சு சம்பவத்தின் சூத்திரதாரியை தமிழீழ விடுதலைப் புலிகள் கைது செய்துள்ளனர். பட்டிப்பளையைச் சேர்ந்த நடராஜா கண்ணன் என்பவரே இச்சம்பவம் தொடர்பாக தேடப்பட்டு தற்போது கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டு இவர் விசாரணைக்கு உட்படுத்தப் பட்டுள்ளார்.

## 41வது நாள் நினைவு அஞ்சலி

அன்னை மடியில்: 11.04.1958



ஆண்டவன் அருகில்: 17.04.2004

**அமரர் சந்தியாப்பிள்ளை ஜேசுதாசன்** (ஜெயம்)

ஆற்றிடவே முடியவில்லை துயரமதை
நேற்றுவரை அருகிருந்து நிழல்தந்தாய்.
இன்று துடுப்பிழந்த படகாகத் தவிக்கவிட்டுத்
தூரம்தான் போனதென்ன தனியாக.
உங்கள் நினைவிருக்கும்வரை இங்கே
நானிருப்பேன், நானிருக்கும்வரை
தினமும் உங்களுக்காய் ஜெபிப்பேன்

இவரின் பிரிவால் வாடும்
மனைவி, பிள்ளைகள், சகோதர சகோதரிகள், மைத்துனர் மைத்துனிகள், மருமகன், மருமக்கள்.

தகவல் கருணாவதி (மனைவி)
03 84 79 10 03 / 01 39 93 85 62
06 64 88 38 02 / 06 60 34 08 74

29.05.2004 பி.பகல் 16.50 அன்று நடைபெறும் அன்னாரின் நினைவு அஞ்சலி கிரிகைகளிலும், இரவு போசன விருந்திலும் கலந்து, அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்குமாறு அனைவரையும் தாழ்மையோடு அழைக்கின்றோம்.

**Eglise**

**Le Vieux Pays Eglise St Martin**
Garges -les -Gonesse
Direction Rer D
Gare Sarcelle

**மண்டப முகவரி**
**Aubait de la rue de Verdun**
**4 Rue de derdun**
**95140 presbybere**


லாச்சப்பலில் ஒரு புதிய உதயம்



தரமான கூடவே சுவையான
இறைச்சித் தெரிவுகளுக்கு நீங்கள்
நாடவேண்டிய ஒரே இடம்
லாச்சபலில் யாழ்ப்பாணம் இறைச்சிக்கடை
5, Rue Perdonnet, 75010 Paris.
Métro - La Chapelle / Gare du Nord
Tél: 01 40 05 92 91

எமக்கு வேறு கிளை நிறுவனங்கள் இல்லை

யாழ்ப்பாணம் இறைச்சிக்கடை
YALPPAANAM BOUCHERIE



ஆட்டு இறைச்சி - மாட்டு இறைச்சி
கோழி இறைச்சி
மான் இறைச்சி - மரை இறைச்சி
காட்டுப் பன்றி - காட்டுக் கோழி
இன்னும்...! இன்னும்...! பலவகை.



Pub-Fr

ஈழமுரசு
ஐரோப்பா
POOBALAM WEEKLY

# தடை நீங்குமா?

தமிழீழ விடுதலைப் புலிகள் மீது விதித்துள்ள தடையை மேலும் இரண்டு வருடங்களுக்கு நீடிப்பதற்கு இந்திய அரசு தீர்மானித்துள்ளமை, ஈழத் தமிழ் மக்களின் மனதில் வேதனையை ஏற்படுத்தியுள்ளது. இந்திய நாடாளுமன்றத் தேர்தல் முடிவுகள் வெளியாகி, புதிய அரசு பதவியேற்பதற்கு முன்பாக, மத்திய அரசு அறிக்கையை வெளியிட்டிருந்ததாக தெரிவித்து, தமிழக அரசு அவசர அவசரமாக அதனை பிரசுரித்திருந்தது.

1991ம் ஆண்டு இடம்பெற்ற ராஜீவ் காந்தியின் படுகொலையைத் தொடர்ந்து, 1992ம் ஆண்டு இந்திய அரசு தமிழீழ விடுதலைப் புலிகளை தமது மண்ணில் தடை செய்தது. இதனை இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை என நீடித்து, இதுவரை 12 வருடங்கள் நிறைவடைந்துள்ளன. இந்த 12 வருட காலப்பகுதியில் விடுதலைப் புலிகள் பெற்ற வளர்ச்சி, விடுதலைப் புலிகள் வேறு தமிழ் மக்கள் வேறு அல்ல என்பதை உலகுக்கு உணர்த்தியுள்ளது.

அத்துடன், கடந்த இரண்டு ஆண்டுகளுக்கு மேலாக சமாதானத்தின் மூலம் தீர்வொன்றைக் காண்பதற்காக விடுதலைப் புலிகள் பெரும் அர்ப்பணிப்புக்களுடன் தமது அமைதி முயற்சியைப் பேணி வருகின்றனர். போர்க் காலத்தில் இருந்ததைவிட, இந்த சமாதானகாலத்தில் விடுதலைப் புலிகள் சந்தித்த நெருக்கடிகளும், அவர்களின் பலத்தை சிதைத்துவிடுவதற்கு மேற்கொள்ளப்பட்ட மறைமுகமான பல்வேறு சதி முயற்சிகளும் ஏராளம். எனினும் அவற்றிற்கு மத்தியிலும் அமைதியைப்பேணி, சமாதானத்தின் மீதுள்ள தமது உண்மையான அக்கறையை விடுதலைப் புலிகள் வெளிக்காட்டி வருகின்றனர்.

இவ்வேளையில், விடுதலைப் புலிகளை இந்தியாவில் தடைசெய்வதற்கு ‘வன்முறை மற்றும் இந்திய எதிர்ப்பு நிலைப்பாட்டினை விடுதலைப் புலிகள் கைவிடாத நிலையில், அவர்களது நடவடிக்கைகள் காரணமாக, இந்தியாவின் இறையாண்மைக்கு ஆபத்து ஏற்படக்கூடும்’ என்று கூறி மீண்டும், மீண்டும் ஒரு பயங்கரவாத அமைப்பாக விடுதலைப் புலிகளை காண்பிக்க இந்தியா முற்பட்டுள்ளமையானது ஒரு பொருத்தமற்ற செயற்பாடாகவே இருக்கின்றது.

சிறீலங்கா வெளிவிவகார அமைச்சர் கதிர்காமரின் பொய்யான பிரச்சாரங்களைத் தொடர்ந்து, விடுதலைப் புலிகளை தடை விதித்த சில நாடுகள் கூட, தமது தடையை மீள் பரிசீலனைக்கு உட்படுத்தியுள்ளதுடன், வன்னிக்கு சென்று புலிகளின் தலைமையுடன் பேச்சுக்களையும் நடாத்தி வருகின்றன. இந்நிலையில், கடந்த காலத்தைப்போல தொடர்ச்சியான ஒரு இறுக்கமான நிலைப்பாட்டிற்கு, புதிதாகப் பதவியேற்ற காங்கிரஸ் அரசு வந்துள்ளமையானது, அந்த அரசின் மீது தமிழ் மக்கள் கொண்டிருந்த நம்பிக்கைக்கு ஏமாற்றம் அளிப்பதாக அமைந்துள்ளது.

கடந்த காலத்தில் ஈழத் தமிழ் மக்கள் விடயத்தில், இந்திய அரசைத் தவறான முடிவை எடுப்பதற்குத் தூண்டி, தமிழக மக்களுடனான தொப்புள்கொடி உறவை சிதைக்கவைத்தது சிங்களத் தலைமை. இப்போது ஜே.வி.பி. போன்ற சிங்கள இனவாத சக்திகள் வஞ்சக நோக்கத்தோடு, இந்தியாவை இந்தப்பிரச்சினைக்குள் இழுத்துவிட்டு, மீண்டும் ஒரு கசப்புணர்வை இரு தரப்பிற்குள்ளும் ஏற்படுத்த முனைகின்றன. ஆனால், விடுதலைப் புலிகளும், தமிழ் மக்களும் இந்தியாவை ஒரு நேச சக்தியாகவே பார்க்கின்றனர். இந்தியாவுடன் நட்புறவைப் பேணவே விரும்புகின்றனர்.

எனவே, இன்றைய யதார்த்த நிலையை உணர்ந்து கொண்டு, விடுதலைப் புலிகள் மீதான தடையை நீடிப்பதற்கு எடுத்துள்ள முடிவை, இந்தியாவின் புதிய அரசு மறுபரிசீலனைக்கு உட்படுத்த வேண்டும். இதுவே, தமிழ் மக்கள் அனைவரினதும் எதிர்ப்பார்ப்பாக உள்ளது.

# விடுதலைப் புலிகள் மீதான தடையை இந்தியா மேலும் இரண்டு ஆண்டுகள் நீடித்தது – தமிழக அரசு அறிவிப்பு –

(24.05.04)

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் மீதான தடையை இந்திய அரசு மேலும் இரண்டு ஆண்டுகளுக்கு நீடித்திருக்கிறது. மத்திய அரசின் இந்தத் தீர்மானத்தை தமிழக அரசு கடந்த 21ம் திகதி வெளியிட்டிருக்கின்றது.

சமீபகாலமாக விடுதலைப் புலிகள் தமிழகத்தினுள் ஊடுருவி உள்ளனர். அவர்கள் சட்டத்துக்குப் புறம்பான நடவடிக்கைகளில் ஈடுபடக்கூடும் என்று நம்புவதற்கு இடமிருப்பதாக மத்திய அரசு வெளியிட்ட அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டிருப்பாதாகக் கூறப்படுகின்றது. கடந்த பன்னிரெண்டு வருடங்களாக புலிகள் இயக்கம் இந்தியாவில் தடைசெய்யப்பட்டிருப்பினும் அதற்கு விசுவாசமானவர்கள் அதனை ஆதரித்து வருகின்றனர். விடுதலைப் புலிகள் தமிழ்நாட்டை ஒரு தளமாக வைத்துக்கொண்டு பெற்றோல், டீசல் ஆகியனவற்றைக் கடத்திச் செல்கின்றனர். அந்த இயக்கம் மிகவும் வலிமையான பயங்கரவாத இயக்கமாகச் செயற்பட்டு வருகின்றது. இதன் காரணமாக இந்தியாவில் பிற சக்திகளுக்கு ஊக்கம் கொடுக்கும் என மத்திய அரசு நம்புகிறது. தனது வன்முறை மற்றும் இந்திய எதிர்ப்பு நிலைப்பாட்டினை விடுதலைப் புலிகள் கைவிடாத

நிலையில் அவர்களது நடவடிக்கைகள் காரணமாக இந்தியாவின் இறையாண்மைக்கு ஆபத்து ஏற்படக்கூடும். இவ்வாறு மத்திய அரசின் அறிக்கையில் கூறப்பட்டிருப்பதாக தமிழக அரசு வெளியிட்ட அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

இதேவேளை, மத்தியில் புதிய பிரதமரும் அமைச்சரவையும் பதவியேற்ற நாளில் புலிகள்மீதான தடை பற்றிய அறிவிப்பு வெளியிடப்பட்டமை மத்திய அரசின் பங்காளிக் கட்சிகளான திராவிடமுன்னேற்றக் கழகம், மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகம் ஆகிய கட்சிகளுக்கு தர்மசங்கடமான ஒரு நிலையை உருவாக்கியிருக்கும் என்று அவதானிகள் குறிப்பிட்டுள்ளனர்.

விடுதலைப் புலிகள் மீதான தடை உத்தரவை நீடிக்கும் அறிவிப்பு, இந்தியப் பொதுத் தேர்தல் முடிவுகள் வெளியிடப்பட்ட மறுநாள் புதுடில்லியிலிருந்து தமிழக அரசுக்கு கிடைத்தது என்று தெரிவிக்கப்படுகிறது. தமிழக அரசு அந்த அறிக்கையை முன்னாள் பிரதமர் ராஜீவ்காந்தியின் நினைவு தினமான மே 21ம் திகதியிட்டு வர்த்தமானியில் வெளியிட்டிருக்கிறது.

# அரசியலமைப்பு திருத்தம் விடுதலைப் புலிகளையும் இணைக்க வேண்டும்

– பேராசிரியர் நிஹால் ஜெயவிக்கிரம –


சிறீலங்காவின் அரசியலமைப்பில் திருத்தம் மேற்கொள்ளப்படும் போது விடுதலைப் புலிகளையும் ஒரு தரப்பினராக இணைத்துக் கொள்ள வேண்டுமென பேராசிரியர் நிஹால் ஜெயவிக்கிரம தெரிவித்துள்ளார்.

கொழும்பில் கடந்த வியாழக்கிழமை நடைபெற்ற கருத்தரங்கு ஒன்றில் ‘மக்களும் அரசியலமைப்பும்’ என்ற தொனிப்பொருளில் உரையாற்றிய போதே அவர் இதனைக் குறிப்பிட்டார். இனப் பிரச்சினைக்குத் தீர்வு காணப்படாத நிலையில் பொதுத் தேர்தல் முடிவுகளானது, அரசியலில் மாற்றம் கொண்டு வரச் சிறந்த சூழலை ஏற்படுத்தியுள்ளது.

இடம்பெற்ற பொதுத் தேர்தல் மூலம் விடுதலைப் புலிகளுக்கு அரசியல் அங்கீகாரம் கிடைக்கப் பெற்றுள்ளது என்றும், சகல இன மக்களினதும் தேவைகளையும் நிறைவேற்றும் வகையில் உருவாக்கப்படும் அரசியலமைப்பே சிறந்ததாகவும், பெரும்பான்மையினரது நலனை மட்டும் குறிக்கோளாகக் கொண்டு அவை இயக்கப்படக் கூடாதென்றும் அவர் கூறினார்.

# பதினோராவது ஆண்டில் தமிழீழ வைப்பகம்

தமிழீழ வைப்பகம் தனது பத்தாவது ஆண்டை நிறவு செய்து பதினோராவது ஆண்டில் காலடி எடுத்து வைத்துள்ளது. 1994ம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் ஆரம்பிக்கப்பட்ட இந்த வைப்பகம் பின்னர் வன்னிக்கு இடம்பெயர்ந்து தனது சேவையினை மக்களுக்கு வழங்கி வந்தது. தற்போது 16 வகையான கணக்குகளையும், பல கடன் திட்டங்களையும் தன்னகத்தே கொண்டுள்ளது. வன்னிப் பகுதியில் 7 கிளைகளை உடைய தமிழீழ வைப்பகம் 35,000 வாடிக்கையாளர்களை கொண்டு இயங்குகின்றது என்பது குறிப்பிடத்தக்கது.



# மக்கள் ஆட்சிக்குச் சிறீலங்கா கொடுக்கும் வேடிக்கையான விளக்கம்

மக்கள் ஆட்சி, ஜனநாயகம், சுதந்திரம், சமத்துவம் என்றெல்லாம் அரசியல்வாதிகள் நாளொருமேனி பொழுதொரு வண்ணமாக பொருள் கூறி வருகின்றனர். அது பற்றிய அடிப்படை விளக்கம் ஏதுமின்றி வெறுமனே இந்தச் சொற்களைப் பிரயோகிக்கின்றார்கள். விடுதலைப் புலிகள் ஏகபிரதிநிதிகள் அல்ல என்பதை அடித்துக் கூறுவதற்காக மக்களாட்சி, ஜனநாயகத்தின் பன்முகத்தன்மை என்றெல்லாம் கதை விடுகின்றார்கள். ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கம், மக்களாட்சி என்றும் இந்த அரசாங்கத்தின் பதவிக் காலத்தில் ஏகபிரதிநிதித்துவம் என்ற கோட்பாட்டிற்கு இடமில்லை என்றும் ஜே.வி.பி. அரசியல் தத்துவம் பேசுகின்றது. மக்களாட்சி என்பதற்குப் பலரும் பலவிதமாய்ப் பொருள் கூறியுள்ளனர். எல்லோராலும் ஒப்புக்கொள்ளக் கூடிய வகையில் ஒவ்வொரு விளக்கமும் அமையவில்லை. மக்களாட்சி பற்றிய சில விளக்கங்கள் குறுகிய நோக்கம் உடையதாகவே இருக்கின்றன. மக்கள் சக ஆட்சி மக்களாட்சி. ஆக மக்களுடைய அரசாங்கமே மக்களாட்சி என இலகுவாகக் கூறிவிடலாம். ஆனால் இந்த விளக்கம் திருப்திகரமானதாக இல்லை. ஏனெனில் வரலாற்றில் எந்தவொரு காலகட்டத்திலும் தம்முடைய அரசாங்கத்தைத் தாமே தேர்தெடுத்துக்கொள்ளும்



உரிமை ஒரு சமுதாயத்தின் அனைத்து மக்களுக்கும் அளிக்கப்பட்டதில்லை. அரசியல் உரிமைகளைப் பெறுவதற்கு எப்பொழுதுமே சில நிபந்தனைகள் விதிக்கப்பட்டுத்தான் இருந்துள்ளன. சில விருப்பு வெறுப்புக்களின் அடிப்படையில் ஒரு சிலருக்கு அரசியல் உரிமைகள் மறுக்கப்படுகின்றன. இதற்குச் சில இனக்குழுமங்களும் விதிவிலக்கல்ல.

சாதாரணமாக மக்கள் ஆட்சி என்றவுடன் மக்களால் மக்களுக்காக இயங்கும் அரசாங்கம் என்ற ஏபிரகாம் லிங்கனின் விளக்கமே எங்கள் நினைவுக்கு வந்துவிடுகின்றது. இந்த விளக்கத்தை அப்படியே ஏற்றுக்கொள்ள முடியாது. ஏனெனில் மக்களுடைய அரசாங்கம் எனும் பொழுது, அதற்கு மக்களுடைய ஆதரவு இருப்பதாகவே பொருள்படும். ஆனால் மக்கள் ஆதரவு இருந்தால் மட்டும் போதாது. வரலாற்றில் எத்தனையோ மன்னர் ஆட்சிகளும் பிரபுக்கள் ஆட்சிகளும் கூட மக்கள் ஆதரவைப் பெற்றிருக்கின்றன. பாகிஸ்தானில் இராணுவத் தளபதி முஷாரப், இராணுவச் சதிப்புரட்சி மூலம் ஆட்சியைக் கைப்பற்றி விட்டு பின்னர் மக்கள் ஆதரவோடு தொடர்ந்தும் ஜனாதிபதியாக இருக்கின்றார். அதேவேளை தேர்தல்கள் மூலம் மக்களுடைய ஆதரவின்றி ஆட்சிக்கு வந்துவிட்ட அரசாங்கங்கள், தம்மைத்தாமே அரசாங்கங்கள் என அழைத்துக்கொண்டதற்கும் சான்றுகள் உண்டு. உதாரணமாகச் சிறீலங்காவின் ஆட்சி முறையைக் கூறலாம். தற்போதைய ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கத்தைக்கூட அவ்வாறே கருதமுடியும். இவ்வாறு மக்களாட்சி முறையில்லாத ஆட்சி முறைகள் கூட, மக்களுடைய அரசாங்கம் எனப்பெயர் பெறுகின்றன. மக்களின் ஆதரவு இல்லாத ஆட்சிகளும் இப்பெயரால் தம்மை அழைத்துக் கொள்கின்றன.

சிறீலங்காவின் தற்போதைய அரசாங்கம் மக்கள் ஆட்சி என்பதற்குக் கொடுக்கும் பொருள் விளக்கம் வேடிக்கையானது. குறிப்பாக ஜே.வி.பி. மக்கள் ஆட்சியின் பன்முகப்படுத்தப்பட்ட தன்மைகள் குறித்துப் பேசும் அளவிற்குச் சிறீலங்காவின் அரசியலை என்னென்று சொல்வது? அரசியல் சிந்தாந்தங்கள், கோட்பாடுகள் என்பதற்குள் ஏகபிரதிநிதித்துவம் என்பதற்கும் ஏற்றுக்கொள்ளக்கூடிய யதார்த்தமான பொருள் விளக்கத்தை ஏற்றுக் கொள்ள மறுப்பது, மக்கள் ஆட்சியின் மறுபக்கக் குறைபாடாகும். அக்காலத்தில் ஐரோப்பிய நாடுகளில் வேறுமாற்றுக் கருத்துக்கள் இன்றி தமது தேசியம், நாடு என்பவற்றை வென்றெடுப்பதற்காக ஏகபிரதிநிதித்துவம் என்பது மக்களால் ஏற்கப்பட்டிருந்தது. அமெரிக்க சுதந்திரப்போரும், பிரெஞ்சுப்புரட்சியுமே 17ம், 18ம் நூற்றாண்டுகளில் ஒருமித்த மக்களின் குரல் என்ற அடையாளத்தின் ஊடாகப் பிற்காலத்தில் ஜனநாயகம் தனிமனித சுதந்திரம் போன்ற கருத்துக்கள் வளர்வதற்கு வழிவகுத்தன. எழுதப்பட்ட அரசியல் அமைப்புக்கள் ஒப்புக்கொள்ளப்பட்ட மக்கள் இறைமைக்கருத்தைப் பிரதிபலிக்கும் அரசாங்க முறைகள் தோன்றவும் வழிவகுத்தன. அமெரிக்கச் சுதந்திரப் பிரகடனமும் பிரான்சின் மனித மற்றும் குடிமகனின் உரிமைகள் பிரகடனமும் மனித சமத்துவத்தையும் மக்கள் இறைமையையும் நிலைநாட்டியிருந்தன. தேசிய உணர்வுக்கான ஏகபிரதிநிதித்துவத்தை அடையாளப்படுத்துகின்ற தேசிய உணர்வு, ஐரோப்பாவில் மாத்திரமன்றி ஆபிரிக்கா, ஆசியாவிலும் உலகப்போருக்கு பின்னர் ஏற்பட்டது. இந்திய சுதந்திரப்போருக்கும் காந்தியை தலைமையாகக் கொண்ட தேசிய காங்கிரஸ் முன்னின்று போராடியது. இந்தியாவின் பல மாநிலங்களில் சுதந்திரத்திற்காகப் போராடிய ஏனைய அமைப்புக்கள் கட்சிக்கள், தனி நபர் குழுக்கள் கூட இந்திய தேசியம் என்ற அடிப்படையில் காந்தியின் பின்னால் ஒருங்கிணைந்து சென்றன. சுதந்திரம் பற்றிய பேச்சுக்கள் கூட காந்தியோடுதான் நடந்தது. இன்று இந்திய பன்முகப்பட்ட சனநாயக நாடு என்று கூறுவதற்கு, அன்றிருந்த காந்திய ஏகாதிபத்தியம் வழிவகுத்தது.

> குறித்த ஒரு சமூகத்தின் அபிலாசைகள் ஒரு தலைவனால் அல்லது ஒரு கருத்தியல் சார்ந்த அமைப்பினால் உறுதிப்படுத்துகின்ற பொழுதும், பாதுகாப்பிற்கு உத்தரவாதம் கிடைக்கின்ற போதும் அந்த தலைவன் அல்லது ஓர் அமைப்பு ஜனநாயகத்தன்மை வாய்ந்தது

வரலாற்று அணுகுமுறைகளை நோக்குமிடத்து தற்போதைய ஐரோப்பிய நாடுகளில் உள்ள நவீன அரசுகள் பின்பற்றுகின்ற மக்களாட்சி, ஜனநாயகம் என்ற கருத்துக்கள் எல்லாமே அன்று ஒருமித்த கருத்தின் அடிப்படையில் மக்கள் குழுமி நின்று பெற்ற சுதந்திரத்தின் பயனாகக் கிடைத்தவை. ஆனால் சிறீலங்காவில் அவ்வாறு இல்லை. தமிழ், சிங்களம் என்ற இருவேறுபட்ட தேசிய அடையாளங்களுடன் முரண்பட்ட நிலையிலேயே சிறீலங்காவிற்குச் சுதந்திரம் கிடைத்தது. அதனால்தான் சிங்களப்பேரினவாதம் கூறுகின்ற மக்கள் ஆட்சியில் குறைபாடுகளையே காணமுடிகின்றது. சிங்களவர்கள் அல்லாத இனம் அதிகமாக இருக்கும்போது (இதனை சிங்கள அரசியல்வாதிகளின் மொழியில் கூறுவதனால், சிறுபான்மையினர் எண்ணிக்கையில் அதிகமாக இருக்கும்போது) அரசியலில் தமது கீழ்நிலைப்பாங்கோடு என்றுமே திருப்தியுற மாட்டார்கள். சட்டங்களை எளிமையாகவும் நேரான வழிகளிலும் இயற்றுவதற்கு பதிலாக பல்வேறு ஆதிக்கக் குழுக்களின் நலன்களைச் சார்ந்து இயற்றவேண்டி இருக்கின்றது. சிங்களம் அல்லாத இனத்தவர்களைப் பொறுத்தவரை பெரும்பான்மை என்று சொல்லப்படுகின்ற சிங்களவர்களை எதிர்த்து நிற்கும் அபாயம் அவர்கள் கூறும் மக்கள் ஆட்சியில் உள்ளது.

டாக்வெல் என்பவரின் கூற்று சிறீலங்காவின் மக்களாட்சிக்குப் பொருத்தப்பாடாக இருக்கின்றது. அதாவது அவரின் கூற்றுப்படி மக்களாட்சிக்கு எதிரானதொரு மாபெரும் குற்றச்சாட்டு என்னவென்றால் அது மக்களை ஓர் அரைகுறை நிலைக்கு இட்டுச்செல்கின்றது என்பதாகும். ஒரு பொருள் பரவலாக்கப்படும் பொழுது அதன் தரம் குறைகின்றது. ஒருசிலர் மட்டும் கொண்டிருப்பதைப் பலரோடு பகிர்ந்துகொள்ளும் போது ஒவ்வொருவருக்கும் குறைந்தளவே கிட்டும். சிறீலங்காவில் உள்ள மக்களாட்சியில் உட்பொதிந்துள்ள தீங்கு என்னவென்றால் ஒரு சிலர் மட்டுமே ஆட்சியைக் கைப்பற்ற வழிவகுக்கின்றது. ஒரு தேசிய அரசின் பிரதிநிதித்துவ முறையானது மொழி, கலாசாரம், பிரதேசம் என்ற ரீதியில் வேறுபட்டிருக்கும் போது விசேட ஏற்பாட்டுச்சட்டங்களின் மூலம் உறுதிப்படுத்தப்பட வேண்டும் என டைசி கூறுகின்றார். குறித்த ஒரு சமூகத்தின் அபிலாசைகள் ஒரு தலைவனால் அல்லது ஒரு கருத்தியல் சார்ந்த அமைப்பினால் உறுதிப்படுத்துகின்ற பொழுதும், பாதுகாப்பிற்கு உத்தரவாதம் கிடைக்கின்ற போதும் அந்த தலைவன் அல்லது ஓர் அமைப்பு ஜனநாயகத்தன்மை வாய்ந்தது என லொக் என்ற அறிஞன் கூறுகின்றான். ஆகமொத்தம் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஏக பிரதிநிதித்தும் என்பது பன்முகத்தன்மை கொண்ட ஜனநாயகத்திற்கு எதிரானதல்ல. ஜனநாயகத்தின் மறு பக்கம் சமூகத்திற்குத் தீங்கிழைக்கும் என்பது உண்மையே. ஆனால் நாம் ஜனநாயகத்தின் சரியான பக்கத்தையே எடுத்துக்கொள்ளவேண்டும். அவ்வாறே ஏகபிரதிநிதித்துவம் என்பதன் மறுபக்கமும் டைசி, லொக் போன்றோரின் கருத்துப்படி ஜனநாயகத்தன்மை கொண்டதுதான்.

எமக்கு எது தேவையோ எமது சமுதாயத்திற்கு எது பொருந்தக்கூடியதோ அதனை நடைமுறைப்படுத்த



பர்வேஷ் முஷாரப்

வேண்டியது தான் ஒருதலைவனின் அல்லது ஓர் இயக்கத்தின் கடமையாகின்றது. ஐரோப்பாவில் அன்று சொல்லப்பட்ட மக்களாட்சிக்கு மாறான மக்கள் ஆட்சி சிறீலங்காவில் இருக்கின்றது என்பதை ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும். அதேபோன்று தமிழ் ஈழ பிரதேசத்தில் வரலாற்று ரீதியான அரசியல் அனுபவங்களுடன் அன்றைய அறிஞர்களின் கூற்றுக்கேற்ப மக்கள் பிரதிநிதித்துவம் தழைத்தோங்கி நிற்கின்றது. இலங்கை தமிழரசுக்கட்சியின் வெற்றி அதனை உறுதிப்படுத்திவிட்டது. சிறீலங்காவின் அரசியல் தலைமைகளுக்கு குறிப்பாக ஜே.வி.பிக்கு அரசியல் வரலாற்று பாடத்தையும் அரசியல் யதார்த்தங்களையும் நோர்வே அல்ல இந்தியா கற்பிக்கவேண்டும். அப்போதுதான் 'ஏகபிரதிநிதித்துவத்தின் மகிமை' தெரியவரும்.

- கொழும்பிலிருந்து ஊரோடி

# பேச்சுக்களுக்கான பேச்சுக்களே சிக்கலில்!

சிறீலங்கா அரசாங்கத்திற்கும், விடுதலைப் புலிகளுக்குமிடையில் தற்போது நடைபெறும் பேச்சுக்களுக்கான பேச்சுக்கள் (Talks for talks) ஆரோக்கியமானதாக இல்லை என்பதே பலராலும் உணரப்படுகின்ற கருத்து.

இரு தரப்பினருக்குமிடையிலான சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிப்பதற்கான தகவல் பரிமாற்றங்களே தற்போது நடைபெற்றுவருகின்றன. நோர்வே அனுசரணையாளர்கள் அரசாங்கத்திடமிருந்து தகவல்களைப் பெற்றுக்கொண்டு கிளிநொச்சிக்கு வருவதும், பின் விடுதலைப் புலிகளின் பதில்களைப் பெற்றுக் கொண்டு கொழும்புக்குச் சொல்வதுமாக நாட்கள் நகர்கின்றன.



சனாதிபதி சந்திரிகா குமாரணதுங்காவின் தலைமையிலான ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி ஆட்சியமைத்த பின்னர் புதிய அரசாங்கத்தின் அழைப்பின் பேரில் கடந்த 2ம் திகதி நோர்வேயின் சமாதானத்தூதுவர் திரு. எரிக் சொல்ஹெய்ம் நோர்வே நாட்டின் பிரதி வெளிவிவகார அமைச்சர் விதார் ஹெல்கேசன் ஆகியோர் இலங்கை வந்து சனாதிபதி சந்திரிகாவுடன் பேச்சுக்கள் நடத்தினர், அதன் பின்பு 3ம் திகதி கிளிநொச்சிக்கு வந்து எரிக் சொல்கெய்ம், சிறீலங்காவிற்கான நோர்வே தூதுவர் திரு. ஹான்ஸ்பிறஸ்கர் ஆகியோர் தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் திரு. சு.ப.தமிழ்செல்வனுடன் உரையாடினர். இச்சந்திப்பு மீண்டும் சமாதானப் பேச்சுவார்த்தைகள் ஆரம்பமாவதற்கான ஒரு நம்பிக்கையினை உருவாக்கியதெனலாம். அதன் பின்பு 11ம் திகதி நோர்வே வெளிவிவகார அமைச்சர் திரு. ஜான் பீட்டர்சன், பிரதி வெளிவிவகார அமைச்சர் திரு. விதார் கெல்கிசன் ஆகியோர் கொண்ட உயர்மட்டக்குழுவினர் தமிழ்த் தேசியத்தலைவர் வே. பிரபாகரன் அவர்களைக் கிளிநொச்சியில் சந்தித்துப்பேச்சுவார்த்தை நடத்தினர். இது ஒரு முக்கியமான சந்திப்பாக அமைந்தது.

தேசியத்தலைவருடன் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் அவர்களும், அரசியற்துறைப் பொறுப்பாளர் திரு. சு.ப.தமிழ்செல்வன் அவர்களும் விடுதலைப் புலிகளின் சார்பில் கலந்து கொண்டனர். இச்சந்திப்பின்போது, சமாதானப் பேச்சுவார்த்தைகள் தொடர்பான சிறீலங்கா அரசாங்கத்தின் நிலைப்பாடுகளை நோர்வே குழுவினர் தலைவர் பிரபாகரனிடம் தெரிவித்தபோது, தலைவர் பிரபாகரன் தனது நிலைப்பாட்டினைத் தெளிவாகவும்



உறுதியுடனும் நோர்வே குழுவினரிடம் தெரியப்படுத்தினார்.

- தொங்கு நாடாளுமன்றில் சிறுபான்மைப்பலத்துடன் இருக்கும் புதிய அரசுடன் இறுதித்தீர்வு குறித்து இப்போது பேசுவதில் பயனில்லை.

- தமிழ் மக்களின் அன்றாடப் பிரச்சினைகளைத் தீர்க்கும் வகையில் புலிகள் சமர்ப்பித்த இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை தொடர்பான விடயங்கள் குறித்தே முதலில் பேசவேண்டும்.

இவ்விரண்டு கோரிக்கைகளையும் சிறீலங்கா அரசிற்கு நோர்வே அனுசரணையூடாகத் தலைவர் பிரபாகரன் தெரியப்படுத்தினார். ஆரம்பத்தில் சந்திரிகா அரசு சமாதானப் பேச்சுவார்த்தைகள் நடத்துவது குறித்துத் தெரிவித்திருந்த யதார்த்தமற்ற சில நிலைப்பாடுகளிலிருந்து விலகி, சற்று நெகிழ்ச்சியான போக்கினைக் கொண்டிருப்பதாக நோர்வே குழுவினர் தெரிவித்திருந்த சில விடயங்களில் அமைந்திருந்தன.

- விடுதலைப் புலிகளே தமிழ்மக்களின் ஏகப்பிரதிநிதிகள் என்பதை ஏற்றுக்கொண்டு அரசாங்கம் பேச்சுவார்த்தைகளுக்கு வரவேண்டும்.

- *பேச்சுக்களில் இருதரப்பும் சம பங்காளிகளாகப் பங்குபற்றவேண்டும்.*
- *பேச்சுக்கள் இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபை தொடர்பாகவே அமைய வேண்டும்.*
- *பேச்சுவார்த்தைகள் முன்னர் நடைபெற்றது போன்று வெளிநாடுகளில் நடைபெற வேண்டும்.*

ஆகிய மேற்படி சில வழிமுறைகளை ஏற்கனவே நோர்வே அனுசரணையாளர்களூடாக விடுதலைப் புலிகள் சந்திரிகா அரசாங்கத்திற்குத் தெரிவித்திருந்தனர். விடுதலைப் புலிகளின் இக்கோரிக்கைகள் பலவற்றிற்குச் சனாதிபதி சந்திரிகா இணங்கியிருந்தார். ஆனால், இடைக்கால நிர்வாகசபை குறித்துப்பேசும் சமகாலத்திலேயே இறுதித்தீர்வு குறித்தும் பேசவேண்டும் என்கிற அவரது நிலைப்பாட்டில் மாற்றம் ஏற்படவில்லை. இதன் காரணமாகவே தலைவர் பிரபாகரன் அவர்கள் மிகத்தெளிவான முறையில் தனது கருத்தை நோர்வேயுடனூடாகத் தெரிவித்தார்.

விடுதலைப் புலிகளுடன் நடைபெற்ற பேச்சுக்களின் விரபங்களோடு கொழும்பு சென்று சனாதிபதி சந்திரிகாவைச் சந்தித்துவிட்டு மீண்டும் 13ம் திகதி நோர்வேப் பிரதி வெளிவிவாகார அமைச்சர் விடார் ஹெல்கிசன், நோர்வே தூதுவர் ஹான்ஸ் பிறஸ்கர் ஆகியோர் கிளிநொச்சிக்கு வந்து புலிகளைச் சந்தித்தனர். இச்சந்திப்பின் பின்னர் விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் ஊடகவியலாளர்களுக்கு விளக்கமளிக்கையில், அரசாங்கத்திற்கும் விடுதலைப் புலிகளுக்கும் முக்கியமான சில விடயங்களில் இணக்கப்பாடுகள் ஏற்பட்டுள்ளதாகவும், சமாதானப் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பதற்கான சுமூகமான புறநிலை தோன்றியுள்ளதாகவும் தெரிவித்தார். இருதரப்பும் இணக்கம் கண்ட விடயங்கள் தொடர்பாக இரண்டொரு தினங்களில் நோர்வே ஓர் அறிக்கையினை வெளியிடும் என்றும் அவர் சொன்னார்.

ஆனால், பத்து நாட்களுக்கு மேலாகியும் அவ்விதமான அறிக்கை எதுவும் இன்னும் வெளியிடப்படவில்லை.

விடுதலைப் புலிகளுடன் தொடர்புகொண்டு அவர்களின் இணக்கமான ஒரு பதிலைப் பெற்றுவிட வேண்டும் என்பதில் சந்திரிகா காட்டிய ஆர்வம் கடந்த 18ம் திகதியுடன் நின்று போனது என்றுதான் கூறவேண்டியுள்ளது. 18ம் திகதி சிறீலங்கா நாடாளுமன்றத்துப் பிரதி சபாநாயகர், நாடாளுமன்ற குழுவினர்களின் தலைவர் ஆகியோரது தெரிவுகள் எதிர்கட்சியான ஐ.தே. முன்னணியிடம் நடைபெற்ற இரகசிய உடன்பாடொன்றினை அறிந்து சுமுகமாக நடந்தேறியதன் பின்னர், சனாதிபதி சந்திரிகாவின், அவசரம் சற்று நிதானமடைந்துள்ளதென்றே உணரமுடிகிறது. அதேவேளை சமாதானப் பேச்சுவார்த்தைகள் எங்கே, எப்போது, எவற்றினடிப்படையில் நடைபெறப் போகிறதென்ற ஒரு நிகழ்ச்சி நிரலொன்றினைத் தயாரிக்க முடியாத சிக்கல்களும் ஏற்பட்டுள்ளன.

சனாதிபதி சந்திரிகாவின் ஆலோசகரும் சிறீலங்காவின் வெளிநாட்டலுவல்கள் அமைச்சருமான லக்ஸ்மன் கதிர்காமரது சமீபகாலத்துக் கருத்துக்கள், அரசின் பங்காளிக்கட்சியான ஜே.வி.பி. தெரிவித்துவரும் கருத்துக்கள் என்பனவும் இச்சிக்கல்களுக்குக் காரணியாக அமைந்துள்ளது. ரணில் தலைமையிலான ஐக்கிய தேசிய முன்னணி அரசுடன் புலிகள் பேச்சுவார்த்தை நடாத்திக் கொண்டிருந்த சமயத்தில் அதனைக்குழப்பும் வகையிலும், புலிகளுக்கெதிரான முறையிலும் பேசிவந்த கதிர்காமர் புதிய அரசு பதவியேற்ற சில நாட்களில் விடுதலைப் புலிகளே தமிழ் மக்களின் ஏகப்பிரதிநிதிகள் என்பதை உணர்ந்து வருகிறோம் எனத் தெரிவித்த கருத்து பலரை ஆச்சரியமடையச் செய்தது. அந்த ஆச்சரியம் மனங்களிலிருந்து அகலுமுன்பே மீண்டும் புலிகளுக்கெதிரான கருத்துக்களை முன்னர்போலவே பரப்பத் தொடங்கி விட்டார். சற்று மௌனம் சாதித்து வந்த ஜே.வி.பி இப்போது சமாதானத்தைக் குழப்பும் பரப்புரைகளை நிகழ்த்தத் தொடங்கிவிட்டது.

இவர்களின் செயற்பாடுகள் குறித்த விளக்கங்கள் எவற்றையும் சனாதிபதி இன்றுவரை அளிக்கவில்லை.

**சனாதிபதி சந்திரிகாவுடனான முன்னைய பேச்சுவார்த்தைகள் குறித்த அனுபவங்களும், இன்றைய அரசிலுள்ளவர்களின் குழப்பமான கருத்துக்களும், தமிழ்மக்களுக்கும், விடுதலைப் புலிகளுக்கும் எச்சரிக்கையுணர்வினை தூண்டிவிடுவது தவிர்க்கவியலாத ஒன்றுதான் !**

இவற்றிற்கெல்லாம் மத்தியில், விடுதலைப் புலிகள் சமாதானக் கதவுகளைத் திறந்தே வைத்துள்ளனர். சமாதானத்துடன் தொடர்புடைய வெளிநாட்டு தூதுவர்களையும் இராஜதந்திரகளையும் தொடர்ந்தும் வரவேற்று கலந்துரையாடியும் வருகின்றனர். விடுதலைப் புலிகளைச் சந்தித்துச் செல்லும் வெளிநாட்டுப் பிரமுகர்கள் எங்கே சிக்கல்கள் உள்ளன என்பதை யதார்த்தமாக உணர்ந்தவண்ணமே வந்து செல்கின்றனர். புலிகளின் பொறுமையும், சமாதானம் தொடர்பான அக்கறையும் அவர்களுக்கு ஆச்சரியத்தைக்கூட ஏற்படுத்தலாம்.

ஆயினும், நோர்வே அனுசரணையாளர்களுடனான எதிர்வரும் சந்திப்பின்போது, சமாதானப்பேச்சுவார்த்தைகள் குறித்த சனாதிபதி சந்திரிகாவின் நிலைப்பாடுகளை, உறுதிமொழிகளை எழுத்தில் பெற்றுக்கொள்ள விடுதலைப் புலிகள் அக்கறை செலுத்துவார்கள் என்றே எதிர்பார்க்கப்படுகிறது.

சனாதிபதி சந்திரிகாவுடனான முன்னைய பேச்சுவார்த்தைகள் குறித்த அனுபவங்களும், இன்றைய அரசிலுள்ளவர்களின் குழப்பமான கருத்துக்களும், தமிழ்மக்களுக்கும், விடுதலைப் புலிகளுக்கும் எச்சரிக்கையுணர்வினை தூண்டிவிடுவது தவிர்க்கவியலாத ஒன்றுதான் !.

— வன்னியிலிருந்து **விவேக்**

# எமது மக்களுக்காகவே எமது காவல்துறை



தமிழீழக் காவல்துறை புதிதாக மேலும் இரண்டு காவற்துறைப் பணிமனைகளைக் கடந்த வாரம் அமைத்துள்ளது. இவற்றில் ஒன்று மட்டக்களப்புப் பிராந்தியத்தில் பழுகாமம் பகுதியிலும் மற்றையது மன்னாரில் அடம்பன் பகுதியிலும் அமைக்கப்பட்டுள்ளன. இவை தவிர, நடமாடும் பணிமனைகள் மேலும் பலவற்றை ஏற்படுத்தத் தாம் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. தமிழீழக் காவல் துறையின் பொறுப்பாளர் திரு. நடேசன் அவர்கள் சிங்கள ஏடொன்றிற்கு வழங்கியுள்ள செவ்வியின் சில பகுதிகள்:-

**கேள்வி:-** விடுதலைப் புலிகள் அமைப்பின் காவல்துறையின் பிரதானமான செயற்பாடுகள் பற்றிச் சற்று விளக்குவீர்களா?

**பதில்:-** இதுவரை எமது காவல்துறை 25 பிரதேசங்களில் செயற்பட்டு வருகின்றது. இவை தவிர பாதுகாப்பு தேவை எனக்கருதப்படும் சில பகுதிகளில் நாம் நடமாடும் காவற்பிரிவு மற்றும் காவல் நிலைகள் போன்றவற்றை அமைப்பது பற்றியும் ஆலோசித்து வருகின்றோம். புதிதாக நாம் பணிமனைகளை அமைப்பதானது, எமது பகுதிகளில் வாழும் மக்களின் பாதுகாப்பு மற்றும் நம்பிக்கை போன்றவற்றை உறுதிப்படுத்துவதற்கே. மக்கள் தேவைகளுக்கு ஏற்ற வகையிலேயே எமது செயற்பாடுகள் அமைகின்றன. எமது மக்கள் மத்தியில் சமாதானமும் சட்டமும் உறுதிப்படுத்தப்பட்டிருக்க எமது செயற்பாடுகள் அவசியமானவையே.

**கேள்வி:-** ஒன்றிணைந்த சிறீலங்கா என்கின்ற கட்டமைப்பிற்குள் பிரச்சினைகள் தீர்க்கப்படலாம் என்ற எண்ணம் வலுப்பெற, நீங்கள் தனியான காவல் துறை ஒன்றினைச் செயற்படுத்துவதும் அதனைப் பலப்படுத்துவதும் இனப்பிரச்சினைத் தீர்வில் பாரிய பிரச்சினைகளைத் தோற்றுவிக்கும் எனச் சிங்களப் பகுதிகளில் ஓர் அச்சம் நிலவுகிறதே?

**பதில்:-** எமது கட்டுப்பாட்டிற்குள் வாழும் மக்களின் பாதுகாப்பினை உறுதிப்படுத்தும் கடமை எமக்குள்ளது. அக்கடமையில் இருந்து நாம் விலகிப்போக முடியாது. அப்படிப்போனால் எமது விடுதலைப் போராட்டத்தில் அர்த்தமில்லை. எமது கட்டுப்பாட்டுப் பகுதிகளில் மக்களுக்குப் பிரச்சினை ஒன்று ஏற்பட்டால் அவர்கள் அதைத்தீர்ப்பதற்கு வெளிப்பகுதிகளுக்குச் செல்லமுடியாது. நாமே எமது மக்களுக்கான பிரச்சினையைத் தீர்க்க வேண்டும். இதுதான் உண்மை.

**கேள்வி:-** கருணாவின் பிரச்சினையின் பின் கிழக்கு மாகாணத்தில் தமிழீழக் காவல் துறையின் செயற்பாடுகள் இல்லை எனக் கூறப்படுகிறதே?

**பதில்:-** அது பொய். கருணாவின் பிரச்சினை ஆரம்பமாகிய முதல் காலகட்டத்தில் அப்படி இருந்தது. ஆனால், இப்போது முன்னரைவிட அதிகமான செயற்பாடுகள் அங்கு இடம்பெறுகின்றன.

**கேள்வி:-** பேச்சுவார்த்தையின் மூலம் தீர்வு காணப்படும் எனக்கூறும் அதேவேளை, மறுபுறம் உளவுத்துறை அதிகாரிகளைக் கொலை செய்யும் செயற்திட்டமும் நடைபெற்று வருகிறது. இது உங்களது அமைப்பிற்கு எதிரான ஒரு குற்றச்சாட்டைத் தோற்றுவிக்கிறது. இது பற்றி என்ன கூறுகின்றீர்கள்?

**பதில்:-** நாம் அப்படியான ஒரு செயற்பாட்டை நிச்சயமாக மறுக்கின்றோம். அப்படியான செயற்பாடுகளை மேற்கொள்வதில் எமக்குத் தொடர்புகள் கிடையாது. இருபது வருட போராட்ட காலத்தில் யுத்தம் நிறுத்தப்பட வேண்டும் என்கின்ற சமயங்களில் நாம் பல விட்டுக்கொடுப்புகளை மேற்கொண்டு வந்திருக்கிறோம். எமது மக்களின் விடுதலைக்காக இப்படி விட்டுக்கொடுப்புகள் எம்மால் மேற்கொள்ளப்பட்டது உண்மையானது.

பிரச்சினையைச் சமாதான அடிப்படையில் தீர்க்க முயற்சிகள் மேற்கொள்ளப்படும் இவ்வேளை, அதனைத் தவிடுபொடியாக்க மூன்றாம் தரப்பொன்று இவ்வாறான செயற்பாடுகளை மேற் கொண்டு வருவதாகவே நாம் கருதுகிறோம். இதில் எமக்கு எவ்விதத் தொடர்புகளும் கிடையாது என்பதை மீண்டும் நாம் கூறிக்கொள்ள விரும்புகிறோம்.

நடந்து முடிந்த உளவுத்துறை அதிகாரியின் கொலை சம்பந்தமாக நாம் இராணுவ அதிகாரிகளுடன் கூடத் தொடர்பு கொண்டுள்ளோம். இப்படியான சம்பவங்கள் தடுத்து நிறுத்தப்பட வேண்டும் என்பதில் நாம் உறுதியாக இருக்கின்றோம்.

# தளபதிச் சண்டை மீண்டும் தொடங்கியது

வடக்கில் யுத்தம் எதுவும் தற்போது இடம்பெறாது போனாலும் இன்னும் மூன்று வாரங்களில் முப்படைத் தளபதி கதிரைக்கான மோதல் ஒன்று மேஜர் ஜெனரல்களுக்கு இடையே ஆரம்பமாகலாம் என வெகு ஆவலாக எதிர்பார்க்கப்படுகிது. இன்னும் மூன்று வாரங்களில் தற்போதுள்ள இராணுவத் தளபதியின் பதவிக்காலம் முடிவடைகின்றது. இவற்றிகுப் பிறகு யார் அவரது கதிரையில் அமர்வது என்பதில் ஏற்கனவே வாயாடல்கள் தொடங்கிவிட்டன. இப்போது ஆரம்பித்துள்ளதை ஒரு யுத்தம் என்று கூறாது விட்டாலும், இதனைப் பிடுங்குப்பாடு என்று கூறலாம். இதன் இறுதி, தற்போது உயர் பதவிகளில் உள்ள எத்தனை தளபதிகள் வீடு செல்கின்றனர், யார் யார் வேறு வேறு பதவிகளுக்கு மாற்றப்பட உள்ளனர் என்பதனைத் தெரிவிக்கும்.



சிறீலங்காவின் யுத்தத் தளபதி அல்லது கூட்டுப்படைத் தலைமையகப் பொறுப்பாளர் என உள்ள லெப்.ஜெனரல் லயனல் பலகல்ல ஏற்கனவே பதவியில் இருந்து சென்றிருக்க வேண்டியவர். இவருக்கு ஆறு மாதங்கள் பதவி நீடிப்பு வழங்கப்பட்டு அதுவும் யூன் மாதம் 14ம் திகதி முடிவடைகின்றது. இவர் விட்டுச் செல்லும் இடத்திற்கு அனுபவத்தில் அடுத்தபடியாக உள்ள மேஜர் ஜெனரல் சரத் பொன்சேகாவே நியமிக்கப்பட வேண்டும். அப்படியாயின் மேஜர் ஜெனரல் சாந்த கொட்டகொட, மேஜர் ஜெனரல் சூலா செனவிரத்தின போன்றோர் தற்போதிருக்கும் பதவிகளில் இருந்து ஓய்வு பெறவேண்டியவர்கள் ஆகின்றனர். அவ்விருவரது ஓய்வின் பின்னரேயே மேஜர் ஜெனரல் சரத் பொன்சேகா கூட்டுப் படைத் தலைமையகப் பொறுப்பாளர் பதவிக்கும் அவருக்கு உதவியாக யாழ்ப்பாணப் படைகளுக்குப் பொறுப்பாக உள்ள மேஜர் ஜெனரல் சுசில் சந்திரபால போன்றவர்கள் நியமிக்கப்படலாம்.

தளபதிக் கதிரையைக் காட்டிக் காட்டி, அதனைப் பெறாதநிலை, பதவியில் இருந்து ஓய்வு பெற முன்னிலையில் இருந்த இரண்டு தளபதிகளுக்கும் நேர்ந்துள்ளது. இதேபோன்றதொரு நிலை உயர் நிலையில் உள்ள மற்றும் சில மேஜர் ஜெனரல்களுக்கும் இதற்கு முன் ஏற்பட்டது குறிப்பிடத்தக்கது. முன்னாள் பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பன தனக்கு நெருங்கிய அதிகாரிகளைச் சேவையில் வைத்துக்கொள்வதற்காக வேறு சில அதிகாரிகள் 55 வயது வரை பதவியில் நிலைத்திருக்க வசதிகள் ஏற்பட்டன. இராணுவச் சட்ட விதிகளுக்கு அமைய மேஜர் ஜெனரல் பதவிக்கு நியமிக்கப்பட்டவர் அதைத்தொடர்ந்து இருக்க வேண்டிய காலம் மூன்று வருடமே. அதன்பின்பு அவர் லெப்.ஜெனரல் என்ற பதவிக்கு மாறவேண்டும். அப்படி மாற்றம் கிடைக்காதுவிடின் அவர் ஓய்வுபெற்றுச் செல்ல வேண்டியது அவசியமாகின்றது. ஆனால், திலக் மாரப்பன கொண்டுவந்த ஆலோசனைகளின்படி உயர் மட்டத்தில் இருந்த ஏழு தளபதிகளும் 55 வயது வரை அதே பதவியில் இருக்க அனுமதிக்கப்பட்ட போதிலும் இராணுவச் சட்ட விதிகளின்படி அது ஏற்றுக்கொள்ள முடியாத ஒன்றாக இருந்தது. இதன் காரணமாக அந்த ஏழு பேரும் பெரும் சட்டச் சிக்கல்களுக்கு உள்ளானார்கள். இதன் பின்னர் இவ்விடயத்தில் சனாதிபதி தலையிட்டு அவர்கள் ஏழு பேரும் 55 வயது வரை பதவியில் இருக்க விசேட அனுமதிகளை வழங்கினார்.

இராணுவச் சரித்திரத்தில் இராணுவத் தளபதிக்கான பதவி ஆசை காட்டப்பட்டுப் பின்னர் ஓய்வூதியத்தில் சென்ற மூன்றாமவர் கடந்த வருட இறுதியில் ஓய்வுபெற்ற லொகான் குணவர்த்தன ஆவார். இதற்கு முன்னர் மேஜர் ஜெனரல்களாக இருந்த ஜானகபெரேரா, நீல் டயஸ் பொன்றோர்களே ஏனைய இருவரும் ஆவர். மேஜர் ஜெனரல் ஜானகபெரேராவுக்குத் தளபதிப் பதவி வழங்கப்படும் சமயத்தில், லயனல் பலகலவுக்குப் பதவி நீடிப்பை அறிவித்து ஜானகபெரேராவின் தளபதிக் கனவைக் கலைய வைத்தவர் சனாதிபதி சந்திரிகாவாவார்.

இப்போது மூன்றாவது இடத்தில் இருக்கும், ஆனால், அனுபவம்மிக்க தளபதியான சரத் பொன்சேகாவிற்கு இராணுவத் தளபதி பதவியை வழங்குவதற்காக அவருக்கு முன்னால் இருக்கும் சாந்த கொட்டக்கொட, சூல செனவிரத்தின போன்றோர்கள் பதவியில் இருந்து ஓய்வுபெற நிர்ப்பந்திக்கப்படுவார்கள் என இராணுவத் தரப்பில் தற்போது கிளம்பியுள்ள சர்ச்சைகள் கீழ்மட்டத்திலும் எதிரொலிக்கத் தொடங்கியுள்ளன. இராணுவத் தலைமையகத்தில் அதிகாரிகள் மட்டத்தில் தினமும் இது சம்பந்தமான வாக்குவாதங்கள், வாயாடல்கள் இடம்பெறுகின்றன. அடுத்த மாத நடுப்பகுதிக்கு முன் இராணுவ முப்படைத் தளபதியாக உள்ள சனாதிபதி இவ்விடயத்தில் தலையிடுவார் என இராணுவப் பிரதானிகள் நம்புகின்றனர்.





விசேட விலைக் கழிவு

RHYTHM

Website rhythmentertainment.com

- Tamil, English, Hindi Movies for Sale
- Tamil, English, Hindi Movies for Rent
- Tamil, Hindi Audio Cd's, Audio Cassette

790 Harrow Road, Wembley, HA0 3EL
Tel : 02089049040
Fax: 02089049070
e-mail
info@rhythmentertainments.com


- Telephone Cards
- Party Shop
- Video Filming
- Photography

# இலங்கையின் அமைதி முயற்சிக்கு இந்தியா உதவவேண்டும்

## மன்மோகன்சிங்கிடம் வைகோ வேண்டுகோள்

(22.05.04)

இலங்கையின் அமைதி முயற்சிக்கு இந்தியா உதவவேண்டும், 'பொடா' சட்டத்தை வாபஸ் பெறவேண்டும் என்பது உள்பட 17 செயற் திட்டங்களை ம.தி.மு.க. சார்பில் மன்மோகன்சிங்கைச் சந்தித்து வைகோ வழங்கினார். ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ டெல்லியில் மன்மோகன் சிங்கின் இல்லத்தில் அவரைச் சந்தித்து பேசினார். ஜனநாயக முற்போக்குக் கூட்டணியின் குறைந்தபட்சச் செயல் திட்டத்தில் இடம்பெறுவதற்கான ம.தி.மு.க.வின் கருத்துக்கள் அடங்கிய அறிக்கையினை மன்மோகன் சிங்கிடம் வைகோ வழங்கினார்.



அந்த அறிக்கையில் ம.தி.மு.க. சார்பில் தெரிவிக்கப்பட்டுள்ள கருத்துக்கள் வருமாறு:

* நாட்டின் ஜனநாயகத்துக்கும், தேச ஒற்றுமைக்கும் ஆபத்தை விளைவிக்கும் மதவாதச் சக்திகளை ஒடுக்கி மதச் சார்பின்மையைக் காக்கத் தேவையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.
* 8வது அட்டவணையில் இடம்பெற்றுள்ள அனை-த்து மொழிகளையும் மத்தியில் ஆட்சி மொழியாக அறிவிக்க வேண்டும். முதற்கட்டமாகத் தமிழை ஆட்சி மொழியாக அறிவிக்க வேண்டும்.
* தமிழ்மொழியை உடனடியாக செம்மொழியாக அறிவிக்க வேண்டும்.
* தமிழ் நாட்டில் சேதுசமுத்திரத் திட்டத்திற்கு தேவையான நிதியை உடனடியாக ஒதுக்கி அந்தத் திட்டத்தை நிறைவேற்ற வேண்டும்.
* காவிரி நீர்ப் பிரச்சினைக்கு உடனடி தீர்வு காணவேண்டும்.
* மாநிலங்களுக்கு இடையேயான நதிகளை இணைத்துத் தேசிய மயமாக்க வேண்டும்.
* பெண்களுக்கான 33 சதவீத இடஒதுக்கீடு மசோதாவை நிறைவேற்ற வேண்டும்.
* அரசு செலவில் பொது சுகாதாரத்துக்குக் கூடுதலாக 5 சதவீதம் நிதி ஒதுக்க வேண்டும்.
* நாடாளுமன்றத்தில் பொடா சட்டத்தை வாபஸ் பெறவேண்டும்.
* இலங்கையில் அமைதி திரும்ப நோர்வே அரசு எடுத்து வரும் அமைதிப் பேச்சுவார்த்தைக்கு ஐரோப்பிய நாடுகள், ஜப்பான், தாய்லாந்து உதவுவது போல் மத்திய அரசும் பேச்சு வார்த்தைக்கு உதவவேண்டும்.
* மத்திய தேர்வாணையம் நடத்தும் தேர்வுகளில் மாநில மொழியிலும் தேர்வு எழுத அனுமதிக்க வேண்டும். கூடுதலாக ஆங்கிலம் மற்றும் இந்தி மொழிகளிலும் எழுத அனுமதிக்கலாம்.

மேற்கண்ட திட்டங்கள் உட்படப் பல்வேறு கருத்துக்கள் அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளன.

# இது காது குடையும் குச்சிபோலும்..!



சோனியா காந்தி தலைமை அமைச்சராகப் பதவியேற்பார் என்று எதிர்பார்க்கப்பட்ட நிலையில், இறுதி நேரத்தில் அவரது நிலைப்பாட்டை விளக்கி, பதவியை ஏற்றுக்கொள்ள மறுத்ததையடுத்து, காங்கிரஸ் கட்சியின் பல பிரமுகர்கள் தமது கவலைகளை வெளிப்படுத்தினார்கள். இங்கே ஒரு நபர் அவற்றை எல்லாம் கடந்து சோனியா காந்தி பதவியேற்காவிட்டால் தான் தற்கொலை செய்யப்போவதாக, அவரது வீட்டிற்கு முன்னால் நின்று தனது காதில் துப்பாக்கியை வைத்து எச்சரித்துள்ளார். இத்தனைக்கும் இவர் ஒன்றும் சாதாரண நபருமில்லை. கங்கா சரண்ராஜ் என்ற உத்தரப் பிரதேசத்தின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்.


# இப்போது நான் நிம்மதியாக இருக்கிறேன் - வாஜ்பாய்



'இப்போது நான் நிம்மதியாக இருக்கிறேன்' என்று வாஜ்பாய் கூறினார். ஜனாதிபதி மாளிகையில் சனியன்று நடந்த, காங்கிரஸ் கூட்டணி பதவி ஏற்பு விழாவில் வாஜ்பாய் கலந்து கொண்டார். அவரது அமைச்சரவையில் இடம்பெற்றிருந்த அத்வானி, முரளி மனோகர் ஜோஷி, ஜஸ்வந்த்சிங், ஜோர்ஜ் பெர்னாண்டஸ், திக் விஜய் சிங், சாகிப்சிங் வர்மா உள்ளிட்டோரும் பதவி ஏற்பு விழாவில் கலந்துகொண்டிருந்தனர்.

மன்மோகன்சிங் பிரதமராக பதவி ஏற்றதும் அவருக்கு வாஜ்பாய் வாழ்த்து தெரிவித்தார். அத-ற்கு நன்றி கூறிய மன்மோகன் சிங், 'எனது பணிகளை திறம்பட செய்ய உங்களுடைய ஆசி தேவை' என்றார். பதவி ஏற்பு விழா முடிந்து வெளியே வந்த வாஜ்பாயிடம் 6 ஆண்டுகள் பிரதமராக பதவி வகித்த நீங்கள் இப்போது மிகவும் ஓய்வாக இரு-ப்பதாகக் கருதுகிறீர்களா? என்று கேட்டதற்கு 'ஆம், இப்போது நான் நிம்மதியாக இருக்கிறேன்' என்று பதில் அளித்தார். உங்கள் எதிர்கால திட்டம் என்ன? என்று கேட்டதற்கு 'தற்போது கொஞ்சம் ஓய்வு எடுக்க விரும்புகிறேன்' என்றார். 'நான் பிரதமர் ஆகும் முன் 43 ஆண்டுகள் எதிர்க்கட்சித் தலைவராகப் பணியாற்றி இருக்கிறேன். அது நீண்ட காலமாகும்' என்று மற்றொருகேள்விக்கு பதில் அளிக்கையில் வாஜ்பாய் தெரிவித்தார்.

# எதிர்க்கட்சித் தலைவர் பதவியையேற்க வாஜ்பாய் மறுப்பு



வாஜ்பாய்

சோனியா காந்திக்கெதிரான பிரச்சாரங்களால் கோபமடைந்த இந்தியாவின் முன்னாள் தலைமை அமைச்சர் வாஜ்பாய், எதிர்க்கட்சித் தலைவர் பதவியை ஏற்பதற்கு மறுப்புத் தெரிவித்துள்ளார். பா.ஜ.க. தலைவர்களான சுஸ்மா சுவராயும் உமா பாரதியும் நடத்திய போராட்டங்களே வாஜ்பாய்க்கு எரிச்சலை ஊட்டியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் பதவியை அத்வானியே ஏற்கட்டும் என்று வாஜ்பாய் கூறியுள்ளார். எனினும் தேசிய ஜனநாயகக் கூட்டணிக் கட்சியின் தலைவராகப் பதவியில் நீடிக்க வாஜ்பாய் இணங்கியுள்ளார்.

இதற்கிடையில், சோனியா காந்தி பிரதமராக வந்திருந்தால், காங்கிரஸ் ஆட்சியை விரைவாக விழுத்தியிருக்கலாம் என்று கருதும் சங் பரிவார் உட்பட பா.ஜ.க.வினர் பலர், அவர் பிரதமராக வருவதற்குக் கடுமையான எதிர்ப்பு தெரிவித்து உமா பாரதியும் சுஷ்மா சுவராயும் காரியத்தைக் கெடுத்து விட்டதாகக் கருதுவதாகச் செய்திகள் கூறுகின்றன.

வாஜ்பாய் எதிர்க்கட்சித் தலைவராகப் பதவியேற்காவிடில், அத்வானியின் பொறுப்பில் பா.ஜ.க. விரைவில் பிளவுபட்டுவிடும் என்று அரசியல் ஆய்வாளர்கள் கருத்துக் கூறியுள்ளார்கள்.

## மத்திய அமைச்சர்கள் ஒரு பார்வை

இந்தியாவின் 13வது நாடாளுமன்றத்திற்கான அமைச்சர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். தலைமை அமைச்சராகப் பதவியேற்றுள்ள மன்மோகன் சிங் விண்வெளி ஆராய்ச்சி அமைச்சுப் பொறுப்பைத் தம்வசம் எடுத்துள்ளார்.

ஏனைய முக்கிய அமைச்சுக்கள்....

1. நட்வர்சிங் - வெளிவிவகாரம்
2. சிவ்ராஜ் பட்டீல் - பாதுகாப்பு
3. பிரணாப் முகர்ஜி - உள்துறை
4. அர்ஜூன்சிங் - மனிதவள மேம்பாடு
5. கபில்சிபல் - சட்டம்
6. குலாம்நபி ஆசாத் - விமானப் போக்குவரத்து
7. லல்லுப் பிரசாத் யாதவ் - தொடருந்துப் போக்குவரத்து
8. ஜெய்பால் ரெட்டி - செய்தி ஒளிபரப்பு
9. மணிசங்கர் அய்யர் - ஊரக வளர்ச்சி
10. அமகது படேல் - எரிபொருள்
11. வகேலா - புடவை
12. சந்திரசேகர்ராவ் - நீர்ப்பாசனம்
13. பிரிய ரஞ்சன்தாஸ் முன்கூஷி - நாடாளுமன்ற விவகாரம்
14. கமல்நாத் - தொழில்
15. ப.சிதம்பரம் - நிதி
16. சரத்பவார் - உணவு மற்றும் விவசாயம்
17. பிரபுல் படேல் - உள்நாட்டு விமானப் போக்குவரத்து
18. சிபுசோரன் - நிலக்கரி மற்றும் சுரங்கம்

தி.மு.கவுக்கு 3 அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சர்கள் - 4 இணை அமைச்சர் பதவிகள் கிடைத்துள்ளன.

தயாநிதிமாறன் - தொலைத் தொடர்பு மற்றும் தகவல் தொழில் நுட்பம்,
டி.ஆர். பாலு - தரைவழிப் போக்குவரத்து
ஏ.ராஜா - வனம் மற்றும் சுற்றுச் சூழல்
ரகுபதி - உள்துறை (இணை அமைச்சர்)
பழனிமாணிக்கம் - நிதி (இணை அமைச்சர்)
க.வேங்கடபதி - சட்டம் (இணை அமைச்சர்)
சுப்புலட்சுமி ஜெகதீசன் - சமூகநலம், பெண்கள் மேம்பாடு (இணை அமைச்சர்)
டாக்டர் அன்புமணி (பா.ம.க) - சுகாதாரத்துறை (இணை அமைச்சர்)

TRISTAP ALLIANCE

வீட்டுக் காப்புறுதி, மருத்துவக் காப்புறுதி, வாகனக் காப்புறுதி, ஆயுட் காப்புறுதி, அனைத்துக் காப்புறுதிகளையும் ஒரே இடத்தில் பெற்றுக்கொள்ள நீங்கள் நாடவேண்டிய இடம்

TRISTAR ALLIANCE

தமிழில் உரையாடி உங்கள் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ளவும் மேலும் விமானச் சீட்டுக்களை குறைந்த கட்டணத்தில் பெற்றுக்கொள்ளவும்

BYBA TOURISME


*18, Rue Démarquai, 75010 Paris*
*Tél: 01 42 09 06 66 / Fax: 01 42 09 15 05*
*Métro: Gare du nord*
*www.tristarassurance.com*

Pub-Fr-40

# RESTAURANT HARIHARAN

## குறைந்த விலையில் சிறந்த உணவுகள்

25 அல்லது 50 சாப்பாடுகள் உடனுக்குடன் தயார் செய்து கொடுக்கப்படும்



**இறைச்சிச் சாப்பாடு**

பிரியாணிச் சோறு
ஆட்டிறைச்சிக் கறி
கோழிக்கறி
கத்தரிக்காய்க் கறி
பருப்பு
வெங்காயச் சம்பல்
கோழிப் பொரியல்
நண்டு வறை
Salade ஜெலி பலவகை கலர்கள்

**சைவச் சாப்பாடு**

1. Basumathi அரிசியில் சோறு
3. கத்தரிக்காய் கறி
4. கரணைக்கிழங்கு பிரட்டல் கறி
5. பருப்பு பால் கறி
6. கோவா அல்லது வெங்காயப்பூ சுண்டல்
7. வெங்காயச் சம்பல்
8. அச்சாறு
9. வடை
10. பாயாசம்
11. அப்பளம்
12. மிளகாய்ப் பொரியல்
13. வாழைக்காய் பொரியல்

**சிற்றுண்டிகள்**

| | |
|---|---|
| வடை | 00 € 50 |
| Rol | 00 € 60 |
| Samusa | 00 € 60 |
| Samusa மரக்கறி | 00 € 60 |
| கடலைவடை | 00 € 50 |
| பகோடா | 4 € 70 |
| மிக்சர் | 5 € 20 |
| கேசரி | 00 € 50 |



**அன்பளிப்பு**

* 200 சாப்பாடுக்கு
20 சாப்பாடு இலவசம்
* 300 சாப்பாடுக்கு
30 சாப்பாடு இலவசம்

**அன்பளிப்பு**

* 500 சாப்பாடு எடுத்தால் T.T.N தொலைக்காட்சி பார்ப்பதற்கான ஒரு அட்டை அன்பளிப்பு
* பிறந்தநாள் கொண்டாட்டமாக இருந்தால் - பிறந்தநாள் நடைபெறுபவரின் பிறந்தநாள் வாழ்த்து T.T.N இல் இலவசமாக எம் மூலம் ஒளிபரப்பப்படும்.

- 100 க்கு மேல் சாப்பாடு எடுத்தால் இல்லம் தேடி கொடுக்கப்படும்
- எம்மிடம் சாப்பாடு எடுத்தால் சாப்பாடு பரிமாறும் சில்வர் தட்டுக்களை நாங்கள் தருவோம். (500 சாப்பாட்டுக்கு 500 தட்டு)
- கறிகள் போடும் சில்வர் பாத்திரங்கள் எம்மிடம் வாடகைக்கு உண்டு

**உரிமையாளரின் நேரடி கவனிப்பில் இன்றே நாடுங்கள்**

# ஹரிகரன்

**20, Rue Perdonnet, 75010 Paris. M°: La Chapelle.**
**Telephone: 01 42 09 06 30 / Portable: 06 67 14 46 39 - Mahendran**

# சிரியா மீது அமெரிக்கா பொருளாதாரத் தடை: சொத்துக்கள் முடக்கப்பட்டன

(16.05.04)

சிரியா மீது பொருளாதாரத் தடையை அமெரிக்கா கொண்டு வந்தது. தீவிரவாதிகளுக்கு ஆதரவு கொடுத்து வருவதால், அந்த நாட்டின் மீது அமெரிக்கா பொருளாதாரத் தடையை விதித்துள்ளதாகக் கூறப்படுகிறது.

அத்துடன் தன் நாட்டில் உள்ள சிரியாவின் சொத்துக்களை அமெரிக்கா முடக்கி உள்ளது. ஈராக் அருகே உள்ள சிரியா வெளிநாட்டுத் தீவிரவாதிகள் ஈராக்குக்குள் நுழைய வசதி செய்து கொடுப்பதாகவும், தீவிரவாதிகளுக்கு ஆதரவு கொடுப்பதாகவும் அமெரிக்கா குற்றஞ்சாட்டி வந்தது.

சிரியா, தன் போக்கை மாற்றிக் கொள்ள வேண்டும் என்று அமெரிக்கா அந்த நாட்டுடன் பேச்சுவார்த்தை நடத்திப் பார்த்தது. அமெரிக்காவின் கவலையைச் சிரியா சனாதிபதியிடம் அமெரிக்க வெளிநாட்டு மந்திரி காலின்பாவெல் மிகவும் வலியுறுத்தினார். ஆனால் சிரியா தன் போக்கை மாற்றிக் கொள்ளவில்லை. இதனால் அந்த நாட்டின் மீது பொருளாதாரத்தடையைப் பிரகடனம் செய்வது என்று அமெரிக்கா தீர்மானித்தது. அது எப்போது என்பது மட்டும் தீர்மானம் ஆகாமல் இருந்தது.

இந்த நிலையில் கடந்த சில நாட்களாகவே சிரியா மீது அமெரிக்கா பொருளாதாரத் தடையை அறிவிக்கும் என்ற செய்தி உலவி வந்தது. இதை உண்மையாக்கும் விதத்தில் சிரியா மீது அமெரிக்கா கடந்த 12ம் திகதி பொருளாதாரத் தடையைப் பிரகடனப்படுத்தியது.

அமெரிக்காவில் தயாரிக்கப்படும் பொருட்களைச் சிரியாவுக்கு ஏற்றுமதி செய்வதற்கும், சிரியா விமானங்கள் அமெரிக்காவுக்குள் தழைவதற்கும் தடை விதிக்கப்பட்டுள்ளது. உணவுப் பொருள்கள், மருந்து ஆகியவற்றின் ஏற்றுமதிக்கு மட்டும் விலக்கு அளிக்கப்பட்டுள்ளது. அமெரிக்காவில் உள்ள சிரியா நாட்டின் அரசாங்கச் சொத்துக்கள் மற்றும் சில குறிப்பிட்ட தனி நபர்களின் சொத்துக்கள் ஆகியவை முடக்கப்படும் என்றும் வெள்ளை மாளிகை அறிவித்துள்ளது. தீவிரவாதிகளைச் சிரியா ஆதரித்து வந்ததும், லெபனானில் இராணுவத்தை தொடர்ந்து நிறுத்தி வருவதும், பேரழிவு ஆயுதங்களை பதுக்கி இருப்பதும், ஈராக்கில் அமைதி ஏற்படுத்த அமெரிக்கா எடுத்து வரும் முயற்சிகளுக்குத் தடையாக இருப்பதும்தான் இந்த நடவடிக்கைக்கு காரணம் என்று வெள்ளை மாளிகை அறிவித்துள்ளது.

அத்துடன், முஸ்லிம் தீவிரவாதிகளான ஹமாஸ், ஹெஸ்பொல்லா இயக்கத்தினருக்கு அளித்து வரும் ஆதரவைச் சிரியா கைவிடாவிட்டாலும், லெபனானில் இருந்து இராணுவத்தை விலக்கிக் கொள்ளாவிட்டாலும் பொருளாதாரத் தடை மேலும் கடினமாக்கப்படும் என்றும் வெள்ளை மாளிகை அறிவித்துள்ளது. இந்தத் தடை எவ்வளவு காலம் நீடிக்கும் என்பது சிரியா நடந்து கொள்ளும் முறையைப் பொறுத்து தீர்மானிக்கப்படும் என்றும் அமெரிக்கா கூறி உள்ளது.

இதேவேளை, அமெரிக்காவின் பொருளாதாரத் தடை அநீதியானது என்றும், சிரியா மீது எந்தப் பாதிப்பையும் இது ஏற்படுத்தாது என்றும் சிரியாப் பிரதமர் முகமது நஜோ ஒட்டேரி கூறினார்.




பிரான்சின் கான் நகரில் நடைபெற்று நிறைவடைந்த 57வது உலகத் திரைப்பட விழாவில் கலந்துகொண்டுள்ள சீன நடிகை ஹோங் லீ, இந்திய நடிகையும் முன்னாள் உலக அழகியுமான ஐஸ்வர்யராய், பிரான்சு நாட்டின் -மாடல்- அழகி லத்தீசியா ஆகியோர் நிழற்படக்கார்களுக்குக் காட்சி கொடுக்கின்றனர். இத் திரைப்பட விழா கடந்த 12ம் திகதி தொடங்கி 23ம் திகதி நிறைவடைந்தது.

இதேவேளை, பிரெஞ்சு திரைப்பட இயக்குநர் ஆன்ஞ் யவிஸ் இயக்கிய 'Comme Une Image' (ஒரு படத்தைப் போல) என்னும் திரைப்படத்தை பார்வையிடுவதற்கு பிரித்தானியாவின் சர்ச்சைக்குரிய எழுத்தாளர் சல்மான் ருஷ்டியும் அவரது புதிய மனைவி பத்மா லக்சுமியும் சிறப்பாக அழைக்கப்பட்டிருந்தனர்.

## வளைகுடா நட்பு நாடுகள் அமெரிக்காவுக்கு கண்டனம்


அமெரிக்காவின் நட்பு நாடுகளான சவுதி அரேபியா, குவைத், ஓமன், பகரைன், கத்தார் ஐக்கிய அரபு எமிரேட்ஸ் ஆகியவற்றின் தலைவர்கள் கூட்டாக வெளியிட்டுள்ள அறிக்கையில் அமெரிக்காவைக் கண்டித்துள்ளனர். இந்த 6 நாடுகளைக் கொண்ட வளைகுடா ஒத்துழைப்பு கவுன்சிலின் உச்சி மாநாடு சவுதி அரேபியாவில் நடந்தது. இதன் முடிவில் வெளியிடப்பட்ட கூட்டறிக்கையில், ஈராக் சிறைக் கைதிகளை அமெரிக்கர்கள் சித்திரவதை செய்ததற்குக் கண்டனம் தெரிவிக்கப்பட்டது. இப்படிச் சித்ரவதை செய்ததன் மூலம், ஜெனீவா மாநாட்டுத் தீர்மானத்தை அமெரிக்கா மீறிவிட்டது என்றும் அந்த அறிக்கை கூறியது. இஸ்ரேலின் அரச பயங்கர வாதத்தையும் இந்த 6 நாடுகளும் கண்டித்துள்ளனர். பாலஸ்தீனியர்களின் வீடுகளை இஸ்ரேல் இடிப்பதை சர்வதேச சமுதாயம் தடுத்து நிறுத்த வேண்டும் என்றும் இந்த 6 நாடுகளும் கேட்டுக் கொண்டன.

## கமீலாவை கை பிடிக்கிறார் சாள்ஸ்!

இலைமறை காயாக இருந்த சாள்ஸ்-கமீலா காதல் வாழ்க்கை விரைவில் வெளிச்சத்திற்கு வருகின்றது. அடுத்து ஓரிரு மாதங்களில் இங்கிலாந்து இளவரசர் சாள்ஸ் காதலி கமீலாவை மணந்து கொள்கிறார்.

இளவரசர் சாள்ஸ் டயானாவை மணப்பதற்கு முன்பே, திருமணமான கமீலா பார்க்கர் என்ற பெண்ணைக் காதலித்தார். திருமணத்துக்குப் பிறகும் சாள்ஸ் காதலைக் கைவிடவில்லை. இது டயானாவுக்குத் தெரியவந்ததும் அவரும் பாதை மாறத் தொடங்கினார். இந்த நிலையில், பிரான்ஸ் தலைநகர் பாரிசில் இடம்பெற்ற விபத்து சம்பவம் ஒன்றில் டயானா இறந்து போனார். அவருடன் அவரது காதலரும் இறந்தார்.

இந்நிலையில் சாள்சைத் திருமணம் செய்து கொள்வதற்காகக் கமீலா, தன் கணவரை விவாகரத்துச் செய்தார். கமீலாவைத் திருமணம் செய்து கொள்வதைச் சாள்சின் தாயார் ராணி எலிசபெத் முன்பு விரும்பவில்லை. இப்போது அவர் சாள்ஸ் விருப்பத்துக்குத் தடையாக இருக்கப்போவதில்லை என்று தெரியவந்துள்ளது. இதைத் தொடர்ந்து இருவரும் விரைவில் மறுமணம் செய்து கொள்வார்கள் என்று தகவல்கள் வெளியாகி உள்ளன.



சார்ளஸ் - கமீலா

வரும் செப்டம்பர் மாத இறுதியில் ஸ்கொட்லாந்தில் உள்ள சிறிய தேவாலயத்தில் சாள்ஸ் - கமீலா திருமணம் நடக்க உள்ளது என ஊடகங்கள் செய்திவெளியிடத் தொடங்கியுள்ளன. இதற்கு அரச குடும்பத்தில் இருந்து மறுப்பு எதுவும் வராதமையால், இது உண்மையாக இருக்கலாம் எனவும் அவ்வூடகங்கள் உறுதிப்படுத்துகின்றன.

## ஆட்சி மாற்றத்தால் இந்தியாவுடன் உள்ள நல்லுறவு பாதிக்காது


*அமெரிக்கா - ரஷியா அறிவிப்பு*

(16.05.04)

'ஆட்சி மாற்றத்தினால் இந்தியாவுடன் உள்ள நல்லுறவில் எந்த பாதிப்பும் இருக்காது' என்று, அமெரிக்காவும், ரஷியாவும் அறிவித்துள்ளன. இந்திய நாடாளுமன்றத் தேர்தலில் காங்கிரஸ் கட்சி வெற்றி பெற்றதற்கு அமெரிக்காவின் வெளியுறவுத்துறைச் செய்தித் தொடர்பாளர் ரிச்சர்ட் பவுச்சர் வாழ்த்து தெரிவித்துள்ளார். தேர்தல் முடிவுகளை ஏற்றுக் கொண்ட பிரதமர் வாஜ்பாய்க்குப் பாராட்டு தெரிவித்த அவர், எந்த அளவுக்கு ஜனநாயகம் வலுவாகவும், ஆழமாகவும் வேரூன்றி இருக்கிறது என்பதை இந்தியா மீண்டும் ஒரு முறை உலகுக்கு உணர்த்தி விட்டது என்றார்.

இந்தியாவுடன் இருந்துவரும் வலுவான பரஸ்பர நல்லுறவு, ஆட்சி மாற்றத்தினால் எந்த பாதிப்பும் அடையாமல் தொடர்ந்து நீடிக்கும் என்றும் பவுச்சர் தெரிவித்தார். இந்தியா-பாகிஸ்தான் இடையே அமைதி பேச்சுவார்த்தை தொடர அமெரிக்கா தொடர்ந்து ஊக்குவிக்கும் என்று நிருபர்களின் கேள்வி ஒன்றுக்கு பதில் அளித்த ரிச்சர்ட் பவுச்சர் உறுதி அளித்தார்.

'தேர்தல் முடிவுகளினால் இரு நாடுகளுக்கும் இடையில் உள்ள நல்லுறவில் எந்த பாதிப்பும் இருக்காது' என்று ரஷியாவும் அறிவித்துள்ளது. இதுபற்றி அதிகாரபூர்வமான அறிக்கை எதுவும் இதுவரை வெளியிடப் படவில்லை என்றாலும்,



*சோனியா காந்தியுடன் புதிய தலைமை அமைச்சர்*

'40 ஆண்டுகால காங்கிரஸ் ஆட்சி காலத்தின்போது இருநாட்டு நல்லுறவுக்கான அடித்தளம் போடப்பட்டதாகவும், எந்த மாற்றமும் இன்றி அந்த நல்லுறவு தொடர்ந்து நீடிக்கும் என்றும் ரஷிய அதிபர் மாளிகை தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்தியாவில் ஆட்சிமாற்றம் ஏற்பட்டு இருப்பது பற்றி ரஷிய பத்திரிகைகள் பெரிய அளவில் செய்தி வெளியிட்டு இருந்தன. இந்திரா (காந்தி) குடும்பத்தினருக்கு முக்கியத்துவம் அளிக்கும் விதத்தில் 'மீண்டும் காந்தி ஆட்சி' என்பது போன்ற தலைப்புகள் அந்த பத்திரிகைகளில் இடம்பெற்று இருந்தன.

## 2005-இயற்பியல் ஆண்டு!

இயற்பியல் (பவுதீகம்) துறையில் பல சாதனைகளைச் செய்த ஆல்பர்ட் ஐன்ஸ்டீனின் நூற்றாண்டு விழா 2005ம் ஆண்டு கொண்டாடப்படுகிறது. இதையொட்டி அந்த ஆண்டை இயற்பியல் ஆண்டாகவும் கொண்டாடப்பட உள்ளது.

இது தொடர்பாக பிரான்சு, பிரேசில், இங்கிலாந்து, மொனாகா, போர்ச்சுகல் ஆகிய நாடுகள் ஐ.நா. சபைக்குக் கடிதம் மூலம் விடுத்த வேண்டுகோள்களைத் தொடர்ந்து ஐ.நா. சபையும் 2005ம் ஆண்டை சர்வதேச இயற்பியல் ஆண்டாகக் கொண்டாடும்படிக் கேட்டுக் கொண்டுள்ளது.

# இந்தியாவிலேயே அதிகம் படித்தவர் தலைமை அமைச்சரான கதை!

இந்தியாவில் அதிகம் படித்தவர் என்பது மட்டுமல்ல, முதல் சீக்கிய தலைமை அமைச்சர் என்ற பெருமையோடும் மன்மோகன் சிங் கடந்த சனிக்கிழமை பதவியேற்றுள்ளார். தலைமை அமைச்சர் பதவியைக் காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தி ஏற்றுக் கொள்ள மறுப்புத் தெரிவித்ததையடுத்து, அதற்கு நான், நீ எனக் கடும்போட்டி அக்கட்சிக்குள் மறைமுகமாக எழுந்திருந்த நிலையிலும், காங்கிரசின் சார்பில் இந்தியாவின் தலைமை அமைச்சர் பதவியை மன்மோகன் சிங் ஏற்றுள்ளார். மன்மோகன் சிங்கிற்கு கிடைத்திருக்கும் இ ந் த



வாய்ப்பிற்கு அவருடைய தனித் திறமை மட்டுமே காரணம். தாராளமயமாக்கலின் தந்தை என்று போற்றப்படும் மன்மோகன்சிங்குக்கு 72 வயதாகிறது. 1932 செப்டெம்பர் 26ல் மேற்குப் பஞ்சாபில் கா என்னும் கிராமத்தில் ஓர் ஏழை விவசாயக் குடும்பத்தில் பிறந்தவர் மன்மோகன் சிங். இன்று தனது திறமையால் இந்தியாவின் உயர் பதவியை எட்டிப்பிடித்துள்ளார்.

இந்தியாவிலேயே அதிகம் படித்த தலைமை அமைச்சர் மன்மோகன் சிங்காகத்தான் இருக்க வேண்டும். இவருக்கு மொத்தம் 17 கலாநிதிப் (டொக்டர்) பட்டங்கள் வழங்கப்பட்டுள்ளன. அவற்றில் ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகத்தில் பெற்ற பட்டமும் அடங்கும். வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்களும், இந்தியப் பல்கலைக்கழகங்களும் அவருக்கு கௌரவ கலாநிதிப் பட்டம் அளித்துக் கௌரவித்துள்ளன.

1991 இல் நரசிம்மராவ் தலைமையிலான காங்கிரஸ் அரசில் இவர் நிதி அமைச்சராகப் பொறுப்பேற்றதிலிருந்து அவரது அரசியல் வாழ்க்கை தொடங்குகிறது. மன்மோகன் சிங், தனது அணுகுமுறையாலும், திறமையாலும் இந்தியப் பொருளாதாரத்தின் வளர்ச்சிக்குத் தடையாக இருந்த கட்டுகளை அறுக்கத் தொடங்கினார். அவர் தொடங்கிய அந்தச் சீர்திருத்தத்தின் தொடக்கம்தான் இன்றுவரை இந்தியாவை வழிநடத்தி வருகிறது.

நிதியமைச்சராகப் பதவியேற்ற அவர், அரசு இயந்திரத்தில் சிவப்பு நாடா முறையை ஒழிக்க முயற்சி மேற்கொண்டார். வரி முறையை எளிதாக்கினார். அதனால், பொருளாதாரம் வேகம் பிடித்தது. முடங்கி இருந்த தொழில்துறையில் வேகம் ஏற்பட்டது. மன்மோகன்சிங் தலைமையில் 7 சதவீத வளர்ச்சியை இந்தியா கண்டது. கலப்புப் பொருளாதாரத்தில் இவருக்கு நம்பிக்கை உண்டு. தனியார்மயமாக்கல், உலக மயமாக்கல் என்று சீர்திருத்தப் பாதையில் சென்றவர். ஆந்திராவில் புதிதாகப் பதவியேற்ற ராஜசேகர் ரெட்டி அரசு விவசாயிகளுக்கு இலவச மின்சாரம் மீண்டும் அளித்ததை எதிர்த்தார். இவருடைய ஆட்சிக்காலத்தில் இலவசங்கள் மற்றும் மானியம் என்பதைப் பெரிதாக எதிர்பார்க்க முடியாது. 'மன்மோகன் பிரித்தானிய பிரதமர் மார்க்ரெட் தட்சர் கையாளும் பொருளாதார நடவடிக்கைகளைக் கண்டு வியந்தவர். இந்தியாவில் பெரும்பாலானோர் தட்சரைக் கண்டு வியப்பதுண்டு. நானும் அவரைக் கண்டு பெரிதும் வியந்ததுண்டு' என்று கூறியுள்ளார்.

இந்தியாவின் எந்தப் பொருளாதார நிபுணருக்கும், ஒரு முன்மாதிரியாக விளங்கும் அறிஞராக விளங்குகிறார் மன்மோகன்சிங். அவரது சிந்திக்கும் ஆற்றல், மாண்பு, நடந்து கொள்ளும் விதத்தில் நேர்மை, சுயநலம் இன்மை போன்றவை அவரைச் சிறந்த தலைவராக உயர்த்தின. இன்று வரை இலஞ்சக் குற்றச்சாட்டுக்கள் சுமத்தமுடியாமல் உள்ள ஒருவராகவும் இவர் இருக்கின்றார் என்பது குறிப்பிடப்பட வேண்டிய ஒரு விடயம்.

இதேவேளை, இந்தியாவில் தலைமை அமைச்சர்களாக வந்துபோன பெரும்பாலானோர் உத்தரப் பிரதேசத்திலிருந்து லோக்சபாவுக்குத் தேர்வு செய்யப்பட்டவர்கள் தான். அவர்களில் மொரார்ஜி, நரசிம்மராவ், தேவகௌடா மற்றும் குஜ்ரால் விதிவிலக்கு. தேவகௌடா கர்நாடகாவிலிருந்தும், குஜ்ரால் பஞ்சாபியிலிருந்தும் தேர்வு செய்யப்பட்டவர்கள். அசாமிலிருந்து ராஜ்யசபாவுக்குத் தேர்வு செய்யப்பட்டுள்ள மன்மோகன் சிங் அசாமிலிருந்து நாடாளுமன்றில் இடம்பெறுகிறார். எனினும், பஞ்சாபில் பிற-ந்து பிரதமரானவர்களில் குஜ்ராலுக்கு அடுத்து மன்மோகன் சிங் இடம்பெறுகிறார்.

நேரு காலத்திலிருந்து காங்கிரஸ் கட்சியிலிருந்து அரசியல் புரிபவர்கள் ஏராளம். ஆனால், மன்மோகன் சிங் நேரு குடும்பத்தில் எந்தப் பிரதமருடனும் பணியாற்றியதில்லை. குறிப்பாக, நரசிம்மராவ் அமைச்சரவையில் மட்டுமே அவர் பணியாற்றிய அனுபவம் உண்டு. மன்மோகன்சிங்கைப் பொறுத்தவரையில் தற்போது சோனியாவின் குடும்பத்தினருடன் நெருங்கிப் பழகும் வாய்ப்பைப் பெற்றுள்ளார். மேலும், சோனியாவின் நம்பிக்கைக்குப் பாத்திரமானவராகவும் உள்ளார்.



ஜெயில் சிங்குக்குப் பிறகு (*ஜெயில் சிங் 1982 முதல் 1987 வரை ஜனாதிபதியாக இருந்தவர். சனாதிபதியாக பதவி வகித்த ஜியானி ஜெயில் சிங்குக்கும் அப்போதைய பிரதமர் ராஜீவுக்குமிடையே முரண்பாடான சூழ்நிலை நிலவியது. ராஜீவைப் பிரதமர் பதவியிலிருந்து நீக்கிவிட ஜெயில் சிங் முயற்சிக்கிறார் என்றும் அப்போது கூறப்பட்டது.*) நாட்டின் மற்றொரு உயர்பதவியை அடையும் சீக்கியர் என்ற பெருமையை மன்மோகன் பெற்றுள்ளார்.

ஆனால், அடித்தட்டு மக்களைப் பாதிக்கும் முடிவுகளை எடுக்கக் கூடிய பிரதமர் பதவி இவருக்குப் பெரிய மாற்றத்தையே தரும். இவரது கொள்கைகளுக்கு முற்றிலும் முரண்பட்ட இடதுசாரிகளை 'வலப்பக்கத்தில்' வைத்து ஆட்சி நடத்துவது பெரிய சவால்தான். எனினும் பொருளாதார ரீதியில் இந்தியாவை மேலும் முன்னோக்கி நகர்த்த இவருக்குக் கிடைத்துள்ள தலைமை அமைச்சு பொறு-ப்பு, பயனுள்ளதாக இருக்கும் என்பதே அனைவரினதும் கணிப்பாக இருக்கிறது.

*அவரது சிந்திக்கும் ஆற்றல், மாண்பு, நடந்து கொள்ளும் விதத்தில் நேர்மை, சுயநலம் இன்மை போன்றவை அவரைச் சிறந்த தலைவராக உயர்த்தின.*

ஒரே பார்வையில்

## ஒரு வாழ்க்கை பயணம்



*மன்மோகன்சிங்*

- பஞ்சாப் மாநிலம் அமிர்தசரசில் 1932ம் ஆண்டு செப்டம்பர் மாதம் விவசாய குடும்பத்தில் பிறந்தார்.
- பஞ்சாப், கேம்பிரிட்ஜ், ஒக்ஸ்போர்டு பல்கலைக்கழகங்களில் பொருளாதாரம் படித்தார்.
- பஞ்சாப் பல்கலைக்கழகத்தில் 1957ம் ஆண்டு முதல் 1965ம் ஆண்டு வரை பேராசிரியர்.
- 1969 முதல் 1971 வரை டெல்லி பல்கலைக்கழகத்தில் பேராசிரியர்
- 1976ம் ஆண்டு டெல்லி ஜவகர்லால் நேரு பல்கலைக்கழகத்தின் கவுரவப் பேராசிரியர்.
- 1976 முதல் 1980 வரை இந்திய நிதி அமைச்சகத்தின் செயலாளர்.
- 1980 முதல் 1982ம் ஆண்டு வரை திட்டாக்க ஆணையக உறுப்பினர் செயலாளர்.
- 1983, 84ம் ஆண்டுகளில் மத்திய அரசின் அணுசக்தி ஆணையக, விண் வெளிக்கழக, பொருளாதார ஆலோசனைக் குழுக்களின் தலைவர்.
- 1982ம் ஆண்டு முதல் 1985ம் ஆண்டு வரை (ரிசர்வ்) வங்கி ஆளுநர்.
- 1985, 1987ம் ஆண்டு வரை திட்ட ஆணையக துணைத் தலைவர்.
- 1987 முதல் 1990 வரை தெற்கு ஆணையக (செகரட்டரி ஜெனரல்) (ஜெனீவா) பொறுப்பு.
- 1990, 91ம் ஆண்டுகளில் பிரதமரின் பொருளாதார ஆலோசகர்.
- 1991ம் ஆண்டு காங்கிரஸ் கட்சி சார்பில் டெல்லி மேல் சபைக்கு தேர்ந்தெடுக்கப்பட்டார்.
- நரசிம்மராவ் தலைமையிலான மந்திரி சபையில் மத்திய நிதி மந்திரியாக நியமனம். *(5 ஆண்டுகால பதவிக் காலத்தில் 3 தடவைகள் தனது பதவியை ராஜினாமா செய்ய முன் வந்தார். ஆனால் அதை பிரதமர் நரசிம்மராவ் ஏற்கவில்லை)*
- 1999ம் ஆண்டு நாடாளுமன்றத்துக்கு நடந்த தேர்தலில் தெற்கு டெல்லி தொகுதியில் போட்டியிட்டுத் தோல்வியைத் தழுவினார்.
- 2001ம் ஆண்டு ஜுன் மாதம் அசாம் மாநிலத்தில் இருந்து டெல்லி மேல் சபைக்குத் தேர்ந்து எடுக்கப்பட்டார். பிறகு மேல்சபை எதிர்க்கட்சித் தலைவராக அவர் தேர்ந்து எடுக்கப்பட்டார்.
- 2004ம் ஆண்டு பிரதமர் பதவிக்கு உயர்ந்துள்ளார்.

*சிறந்த பொருளாதார நிபுணர்களில் ஒருவரான மன்மோகன் சிங்கின் சேவையைப் பாராட்டி உலகின் பல அமைப்புகள் பல்வேறு விருதுகள் வழங்கி உள்ளன. இந்தியாவின் மட்டும் 11 பல்கலைக்கழகங்கள் அவருக்குக் கலாநிதி பட்டம் கொடுத்து கவுரவித்துள்ளன. 1993ம் ஆண்டு நிதி அமைச்சக விருது, 1987ம் ஆண்டு பத்மவி பூஷன் விருது பெற்றுள்ளார். பொருளாதாரம் குறித்து பல புத்தகங்களை இவர் எழுதி உள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது.*

# பாகிஸ்தானைக் கைப்பற்ற சுந்தர்ஜி போட்ட திட்டம்



**ஆராரோ...! ரோ ரோவோ !**

**( பேராசிரியர் இ.சிவசண்முகம் எழுதும் புதிய தொடர் )**

## அங்கம் 9

> *ராஜீவ் காந்தி அரசு சிங்கள அரசைத் திருப்திப் படுத்துவதையே தனது முழு நோக்காகக் கொண்டிருந்தது. தமிழர்களைத் தாக்கும்போது சிங்களவர்கள் தம்பக்கம் சாய்வார்கள் என்பது இந்தியாவின் கணிப்பீடு.*



நவம்பர் 25, 1998இல் இப்போது நிறுத்தப்பட்டுவிட்ட 'மிட்வீக் மிறர்' என்ற கொழும்புப் பத்திரிகை டிக்சிற்றின் பின்வரும் நேர்காணலைப் பிரசுரித்தது. கேள்வி பதிலின் சுருக்கத்தை இங்கு தருகிறோம்.

*நிருபர் பந்துல ஜெயசேகரா கேட்கும் கேள்வி:- தனது ஆலோசகர்களின் தவறான ஆலோசனைகளின் அடிப்படையில் தானே இந்தோ-சிறீலங்கா ஒப்பந்தத்தில் ஒப்பமிட ராஜீவ்காந்தி எடுத்த முடிவு ஒப்பந்தத்தின் தோல்விக்குக் காரணம் என்று நீங்கள் கூறியுள்ளீர்கள். அவருடைய ஆலோசகர்கள் வழங்கிய ஆலோசனைகள் போதுமானவையல்லவென்றும் நிலமைக்கு மாறான அதீத நம்பிக்கை கொண்டுள்ளதாகவும் இருந்ததை நீங்கள் சுட்டிக்காட்டுகிறீர்கள். அவருடைய பிரதிநிதியாக நீங்கள் இதில் பெரும் பங்காற்றினீர்கள் அல்லவா?*

*டிக்சிற்றின் பதில்:- எல்.ரி.ரி.ஈ ஒத்துக்கொள்ள மாட்டார்கள் அல்லது ஜனநாயக வழிக்கு வரமாட்டார்கள் என்ற எனது கணிப்பீடு சரியானதே. பிற தமிழ்க் குழுக்களின் ஒப்புதலுடன் எல்.ரி.ரி.ஈயை ஓரங்கட்டிய படி ஒப்பந்தத்தில் கைச்சாத்திடலாம் என்று நான் உணர்ந்தேன். எல்.ரி.ரி.ஈயை ஓரங்கட்டலாம் எல்.ரி.ரி.ஈ ஓரங்கட்டப்பட வேண்டும் என்ற எனது மதிப்பீடு தவறானது.*

*பந்துல ஜெயசேகரா கேள்வி:- லெப். ஜெனரல் தேஷ்பாண்டே ஐ.பி.கே.எப் சிறீலங்காவில் நடத்திய போர் முழுப்படியானதொரு பயனற்ற விபத்து என வர்ணித்துள்ளாரே?*

*டிக்சிற் பதில்:- இந்திய கேந்திர நலன் மற்றும் சிறீலங்காவின் பிளவுபடாத தரைப்பரப்பு ஒருமை பற்றித் தேஷ்பாண்டேயிற்கு ஒன்றுமே தெரியாது.*

சிறீலங்காவின் தரைப்பரப்பு பற்றிய கரிசனையை வெளிப்படுத்தும் இந்திய அதிகாரிகள் 1971இல் கிழக்கு பாகிஸ்தான் பிரிந்து சென்று தனிநாடாக உருவாகுவதற்கு இந்தியா இராணுவ உதவி வழங்கியதை வசதியாக மறந்து விட்டார்கள். ஜெயின் கமிசன் முன் சாட்சியமளித்த பிரதமர் நரசிம்மராவ் 'முழுக்க முழுக்க இந்திய தேசிய நலனைக் குறியாக வைத்தே இந்திய - இலங்கை ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டதாக' கூறியதை டிக்சிற் மறுப்பாரா? மிக அண்மையில் டிக்சிற் பின்வரும் மிரட்டலை ஈழத் தமிழருக்கு விடுத்துள்ளார்! நோர்வேயும் கிறிஸ்த்தவ மதகுருமாரும் இணைந்து வடகிழக்குத் தமிழர்களுக்கு இந்தியா அனுமதிக்கத் தயாராக இருக்கும் அளவுக்கும் கூடுதலான உரிமைகளை வழங்குவார்களேயானால் இந்தியா மீண்டும் தலையிட வேண்டி வரும்.

அமெரிக்காவின் பாதுகாப்புச் செயலராக 1961 - 1968 காலப் பகுதியில் பதவி வகித்த றொபேட் மெக் நாமறா *(Robert Mc Namara)* 1995ல் எழுதிய ஒரு மீள்பார்வை: வியட்நாம் துன்ப வரலாறும் கற்ற பாடங்களும் என்ற நூலில் *(In Retrospect: The Tragedy and Lessons of Vietnam)* தான் வியற்நாம் விவகாரத்தில் விட்ட இமாலயத் தவறுகளுக்காகப் பாவ மன்னிப்புக் கேட்கிறார். வாரமொன்றுக்கு ஆயிரம் வரையிலான அப்பாவி நிராயுதபாணிகளை அமெரிக்கப் படைகள் கொன்றன. ஆனால் அமெரிக்காவின் கொலைவெறி தொடர்ந்தது. எந்த நாட்டையும் உலக வரைபடத்திலிருந்து அகற்றும் படைபலம் அமெரிக்காவிற்கு உண்டு என்று கூறியவர்தான் இந்த மெக் நாமறா. நாங்கள் உலகின் நான்காவது பலம் வாய்ந்த இராணுவம் என்று கூறிய இந்திய இராணுவ அதிகாரியின் கூற்றோடு இதை ஒப்பிட்டுப் பாருங்கள். மெக் நாமறா தனது தவறு உணர்ந்து மன்னிப்புக் கேட்கிறார். ஆனால் இந்தியர்களோ மீண்டும் தலையிடப் போவதாக மிரட்டுகிறார்கள். என்ன விலை கொடுத்தும் சிறீலங்காவின் தரை ஒருமையை நிலைநாட்டுவோம் என்று பிரகடனம் செய்த றோ உளவமைப்பு உறுப்பினருக்கு, 'வந்து பாருங்கள்' என்றுதான் தமிழீழ மக்கள் கூறுவார்கள்.

ராஜீவ் காந்தி அரசு சிங்கள அரசைத் திருப்திப் படுத்துவதையே தனது முழு நோக்காகக் கொண்டிருந்தது. தமிழர்களைத் தாக்கும்போது சிங்களவர்கள் தம்பக்கம் சாய்வார்கள் என்பது இந்தியாவின் கணிப்பீடு. இது எவ்வளவு தவறான முடிவு என்பதை இந்தியர்கள் இது வரை உணரவில்லை. உணரவே மாட்டார்கள் என்று துணிந்து கூறலாம். இந்திய - இலங்கை ஒப்பந்தத்தை நிறைவேற்றிய பின் கொழும்பில் ராஜீவ்காந்திக்குச் சிங்களக் கடற்படை ஒரு மரியாதை அணிவகுப்பை வழங்கியது. அப்போது கடற்படைச் சிப்பாய் விஜய நம்முனி விஜித்தா றோகண தி சில்வா தனது துவக்குப் பிடியால் ராஜீவ் காந்தியின் பிடரியில் அடித்தான். அவர் மயிரிழையில் உயிர்தப்பினார். இவ்வாறான சம்பவம் உலகின் வேறொருப் பாகத்திலும் இதுவரை நடைபெறவில்லை. எகிப்தின் அன்வர் சதாத் இப்படியான அணிவகுப்பு ஒன்றின்போது தனது சொந்தப்படையினரால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

ஒரு அயல் நாட்டுத் தலைவரை, அதுகும் சிங்களவரைத் தாங்கிப்பிடிக்கும் நோக்கில் வந்தவரைத் தாக்கலாமா? இதற்காக இற்றைவரை ஜெயவர்த்தனாவோ அவரின்பின் பதவிக்கு வந்த எவரோ மன்னிப்புக் கோரவில்லை. உண்மையில் இராணுவ நீதிமன்றத்தின்முன் நிறுத்தப்பட்டு அந்தச்சிப்பாய் சுட்டுக்கொல்லப்பட்டிருக்க வேண்டும். சிலகாலம் சிறையில் அடைக்கப்பட்ட பின் அவன் விடுதலை செய்யப்பட்டான். பூமி புத்திரக் கட்சியின் வேட்பாளராக 1994ம் ஆண்டு அவன் பொதுத்தேர்தலில் நின்று தோல்வியும் கண்டான்.

ரோசம் மானமுள்ள இந்தியாவின் தலைவராக ராஜீவ் காந்தி இருந்திருப்பாரேயானால் பூமாலையில் பங்குபற்றிய நான்கு மிராஜ் போர் விமானங்களும் கொழும்பின் இராணுவ இலக்குகள் மீது தாக்குதல் நடத்தயிருக்க வேண்டும். இதற்காக இந்தியாவை உலக நாடுகள் இந்தியாவைக் கண்டித்திருக்க மாட்டா. அத்தோடு பிராந்திய வல்லரசு என்ற அந்தஸ்த்தையும் தக்க வைத்திருக்கலாம். ஆனால் திட்டம் வேறு விதமாக இருந்தது. தமிழ்நாட்டின் பிராமணர்கள் விரும்பிப் படிக்கும் ஆனந்த விகடன் வார சஞ்சிகையில் ஒரு கேலிச்சித்திரம் பார்த்த ஞாபகம். புலிகளும், இந்திய இராணுவமும் ஒருவரை ஒருவர் தாக்குகிறார்கள். கிறிக்கெற் ஸ்கோர் கூறுவதுபோல் ஜெயவர்த்தனா நடுவில் நின்று இந்தப் பக்கம் பத்து அந்தப்பக்கம் இருபது என்று எண்ணுக் கணக்கு வைக்கிறார். அது மட்டுமா கடற்படைச் சிப்பாய் சிறையில் இருந்த காலத்தில் அவனுடைய தாயாருக்கு ராஜீவ்காந்தி கடிதம் எழுதிக் குசலம் விசாரித்துள்ளார். சிங்களவர்களைப் பொறுத்தளவில் ராஜீவ்காந்தி ஒரு மகாத்மாவாக மாறிவிட்டார்.



அண்மைக்காலமாக இந்தியாவின் அதியுயர் தளபதி கிருஸ்ணசாமி சுந்தர்ஜி ஒரு போர் வெறியன் என்ற கருத்து நிலவத் தொடங்கியுள்ளது. இதற்கு ஆதாரமாக சுந்தர்ஜி தலைமையில் ஜனவரி 1987 காலப்பகுதியில் நடைபெற்ற இந்திய இராணுவ ஒத்திகைகள் சுட்டிக்காட்டப்படுகின்றன. பிறாஸ்ரக்ஸ் *(Brasstacks)* என்று பெயரிடப்பட்ட இந்த நடவடிக்கை பாகிஸ்த்தான் நாட்டின் எல்லையோரமாக நடத்தப்பட்டது. இந்திய இராணுவத்தின் மூன்றிலொரு பங்கினர் பங்கேற்ற இந்த ஒத்திகை ஒரு பிரமாண்டமான இராணுவ நடவடிக்கையாகக் கருதப்படுகின்றது. இது பாகிஸ்தான் அரசைக் கடும் அச்சம் கொள்ள வைத்தது. அந்தக்காலப்பகுதியில் பாகிஸ்த்தானிலும் ஒரு இராணுவ ஒத்திகை நடந்து கொண்டிருந்த காரணத்தால் விபரீத நிகழ்ச்சி ஏதேனும் நடந்துவிடலாம் என்று அமெரிக்காவும் சோவியத் ஒன்றியமும் கருதும் நிலை தோன்றியது.

பாகிஸ்தான் எல்லையிலிருந்து 60-80 கி.மீ தூரத்தில் நடத்தப்பட்ட ஒத்திகைகளுக்கு ஓர் உள்நோக்கம் உண்டு என்பதை ஆய்வாளர்கள் உறுதி செய்கின்றனர். 1988இல் சுந்தர்ஜி இளைப்பாறிய பின் ஒரு மூத்த இந்திய மத்திய அரமைச்சர், 'அந்த மனிதன் சுந்தர்ஜி எம்மை ஒரு போருக்கு இட்டுச் சென்றுள்ளார். இந்தியப் பிரதமருக்கு இது பற்றி அவர் விளக்கம் கூறாது விட்டுள்ளார்' இந்த அமைச்சரின் கூற்றில் உண்மை இருக்கின்றது. பிறாஸ்ரக்ஸ் ஒத்திகை மூலம் பாகிஸ்தான் படைகளை இசகுபிசகாக நடக்கச் செய்வதே சுந்தர்ஜியின் நோக்கம் என்பதை அமெரிக்க, இந்திய, பாகிஸ்தான் ஆய்வாளர்கள் கூட்டாக எழுதிய நூல் தெரிவிக்கின்றது *(Brasstacks and Beyond by Kanti Bajpai, P.R. Chari, Pervaiz Iqbal Cheema , Stephen P.Cohen and Others)* அரசியல் தலைமையின் சம்மதம் பெறப்படாமல் சுந்தர்ஜி இந்தியாவை தவறான பாதையில் செலுத்தினார் என்ற கருத்தை இந் நூல் வலியுறுத்துகின்றது. பாகிஸ்தான் இராணுவம் இசகுபிசகாக நடப்பதைச் சாட்டாக வைத்து வைத்துக்கொண்டு பாகிஸ்தான் மீது படையெடுப்பதையெ சுந்தர்ஜியும் அவரது நெருங்கிய சகாக்களும் தமது இலக்காகக் கொண்டிருந்தனர். பாகிஸ்தானைப் போருக்குத் தூண்டிப் பதிலடி கொடுப்பதே சுந்தர்ஜியின் திட்டம். இதற்கான ஆயத்தங்களை அவர் ஒத்திகை ஒழுங்குகளில் செய்து வைத்திருந்தார். எல்லையில் இருந்த நதிகளைக் கடப்பதற்கு வேண்டிய தற்காலிகப் பாலங்கள் கூட எடுத்துச் செல்லப்பட்டதாக நிரூபிக்கப்பட்டுள்ளது. 1971இல் கிழக்குப் பாகிஸ்தானைக் கைப்பற்றியதுபோல் 1987ல் மிகுதிப் பாகிஸ்தானைக் கைப்பற்றுவதுதான் சுந்தர்ஜியின் நோக்கம்.



(இன்னும் வரும்)




# ஒடிந்த சிறகுகள்

**த.சு.மணியம்**

தம்பையா வழமையான சுறுசுறுப்பைவிட, இன்று மிகவும் உற்சாகமான நிலையிலே, வரப்போகும் நாட்களில் செய்ய வேண்டியவை பற்றி, தீபனுக்கு உத்தரவுகளைப் பிறப்பித்துக் கொண்டிருந்தார். ‘தீபன், நான் இண்டைக்கு இரவு கொழும்புக்கு வெளிக்கிட்டிடுவன். வேலிமுழுவதும் இருக்கும் முருங்கைக்காய்களை முத்தவிடாமல் புடுங்கி, அம்மாவை வித்து விடச் சொல். வாழை மரத்தில் மூன்று குலைகள் முத்தி விட்டது. தேவைக்கு எடுத்துக்கொண்டு மற்றவைகளை விற்கச் சொல். பெரிய சீப்பாக இரண்டு சீப்பு வெட்டி, பக்கத்து அம்மன் கோவிலுக்கு, பூசைக்குக் கொடுக்கச் சொல், மாவும் நல்ல பிஞ்சு பிடிச்சிருக்கு. அணில் கொந்தவிடாமல் அவைகளைப் பார்த்துப் பிடுங்கி விற்கச் சொல். ஏரம்பன் இந்தப் பக்கம் வந்தால், தென்னைகளில் இருக்கிற தேங்காய்களைப் பார்த்து இறக்கச் சொல். வீட்டுத் திறப்பு தந்திட்டுப் போறன். ஏதேனும் சாப்பாட்டுச் சாமான்கள் தேவையெண்டால் கொம்மாவை எடுக்கச் சொல். கிழமையிலை ஒருக்கால் முன் பக்கத்தைக் கூட்டிவிடும்படி, சின்னவன் பாபுவுக்குச் சொல், தொழில்நுட்பக் கல்லூரிக்குப் போன கொண்ணன், எத்தனை மணிக்கு வருவான். வந்த உடனே, இண்டைக்கு இரவு எட்டு மணிக்கு யாழ்ப்பாண ரவுணுக்குப் போய் கொழும்பு பஸ் பிடிக்கவேணுமெண்டு ஞாபகப்படுத்திவிடு’ யார் இந்தத் தீபன்? இவருடைய மகனா இவன். இவைகளெல்லாவற்றையும் கேட்டுக்கொண்டு ஆம் ஆம் என்று சொல்லிக்கொள்கிறானே!

ஆமாம், தம்பையா ஒரு ஒண்டிக் கட்டை. பதினைந்து வருடங்களுக்கு முதல் மனைவியை இழந்தவர். அவருக்கு மூன்று ஆண் பிள்ளைகள். மூத்தவன் சேது திருமணம் முடித்து ஒரு குழந்தையோடு ஜேர்மனிக்குப் போனவன். அடுத்தவன் நாதனோ, திருமணம் முடித்த கையோடு, ஏஜென்சிக்காரரின் உதவிமூலம், மூன்று வருடங்கள் கழித்துப் போனவன். கடைசிக்குட்டி காந்தன், தானும் போகப்போவதாக அடம் பிடிக்கவே, அவனையும் அனுப்பிவைத்துவிட்டு தனி மரமானார். இருந்தும், அந்தக் கிராமத்தில் மரியாதைக்குரிய மனிதராக வாழ்ந்து வந்தார். தம்பையா வீடு எங்கிருக்கிறது என்று வெளி இடங்களில் இருந்து வருபவர்கள் கேட்டால், முழிக்கும் மக்கள் ஐயா வீடு எங்கிருக்கிறது என்றால், ஒரு சின்னப் பயல்கூட கூட்டிக்கொண்டு வந்து விடுவான். காரணம் ஊரில் எல்லோருமே ஐயா என்றுதான் அவரை அழைத்துக்கொள்வார்கள். அந்தக் கிராமதில் வாழ்பவள்தான் மரகதம். அன்றாடம் கூலி வேலைகளுக்காக செல்லும் கந்தையாவின் மனைவி. வாரத்தில் இரு தடவைகள் ஐயாவுக்கு வந்து உணவு சமைத்துக்கொடுப்பாள். தனக்கு விருப்பிய மீன் வகைகளையோ மரக்கறி வகைகளையோ வாங்கிவந்து வைப்பார். தேவையைப் புரிந்து கொண்டு அவருக்கு சமையல் செய்து கொடுப்பாள். பணம் கொடுத்தால் வாங்கமாட்டாள் எனத் தெரிந்து, வீட்டிலுள்ள வருமானங்களிலிருந்து தேவைக்கு மேலாகவே கொடுத்து விடுவார். வீண் செலவுகள் என்று எதுவும் செய்யாது, பிள்ளைகள் அவ்வப்போது அனுப்பும் பணத்தைக் கையிருப்பில் வைத்துக் கொள்வார். கிராமத்தவர்களின் கஷ்டங்களிலும் பங்கு கொள்ளும் இவர், தேவையறிந்து முடிந்தளவு உதவி செய்து கொள்வார். திருப்பிக் கொடுக்க வருபவர்களிடம், உங்கள் பிள்ளைகளின் தேவைக்காக வைத்துக்கொள்ளுங்கள் என்று வாங்க மறுத்துவிடுவார். இதுவே நாளடைவில் இவரை ஐயாவாக மாற்றிவிட்டது.

பெரிய காணி ஒன்றுக்கு நடுவே, நாற்சார வீடு கட்டி, எல்லாவித பலன் தரு மரங்களையும் நட்டு, அதன் நிறைவோடு வாழ்பவர். தீபன் பக்கத்துவீட்டு கனகசபை வாத்தியாரின் இரண்டாவது மகன். தன் பிள்ளைகள் தன்னோடு இல்லாத நிலையில், அந்தப் பிள்ளைகளைத் தன் பிள்ளைகளாக நினைத்து பூரண சுதந்திரங்களையும் கொடுத்துள்ளார். கனகசபை கொழும்பிலே ஆசிரியராகத் தொழில் புரிகின்றார். வெள்ளிக்கிழமை இரவு தபால் வண்டியில் வீடு வந்து, ஞாயிறு இரவு தபால் வண்டியில் கொழும்புக்குச் செல்வது வழக்கம். தம்பையாவின் வயதுக்கு மட்டுமல்ல அவருடைய பண்புக்கும் எப்பொழுதுமே மரியாதை கொடுப்பவர். அவரைப் போன்றே அவர் மனைவி பார்வதமும், அண்ணை, அண்ணை என்று தன்னோடு உடன்பிறக்காத போதும், அதற்கு மேலான பாசம் வைத்திருந்தாள்.

நீண்ட நாட்களாக பிள்ளைகளின் தொடர்ந்த வற்புறுத்தலுக்கு இணங்கி ஜேர்மனிக்குப் பயணமாக உத்தேசித்துத்தான், இத்தனை உத்தரவுகளையும் பிறப்பித்துக் கொண்டிருக்கிறார். பேரப் பிள்ளைகளையும் பார்ப்பதோடு கடைசி மகன் காந்தனும் திருமணமாகி விட்டதால் அந்தக் குடும்பத்தையும் பார்த்து வரலாம் என்ற ஆசையில் பயணத்துக்கு ஆயத்தமானார். வழமைபோல் அன்று வந்த மரகதத்திற்கு ‘இண்டைக்குச் சமைக்க வேண்டாம் பிள்ளை. தங்கச்சி மத்தியானச் சாப்பாடு அனுப்புறன் எண்டவள். பகலுக்கு மட்டும்தானே. இரவைக்கு நான் வெளிக்கிட்டு விடுவன். நேரம் கிடைக்கைக்கை வந்து, முன்பக்கங்களை கொஞ்சம் துப்பரவாக்கி விடு, தேசிக்காய் கண்டுகள் இரண்டு வைத்திருக்கிறன். கிணற்றிலை தண்ணி அள்ளி அதுகளுக்கு ஊத்தி விடு பிள்ளை. தேங்காய், மாங்காய் ஏதேனும் தேவையிருந்தால் எடுத்துக்கொண்டுபோ. நான் பிள்ளையளட்டை சொல்லிப் போட்டு போறன்’ என்றவர் ஒரு சிறிய நூல் சாக்கு ஒன்றினில் நிறையவே அரசியும் கொடுத்து, கொஞ்ச முருங்கைக்காயும் பிடுங்கி, அத்தோடு சில தேங்காய்களும் கொடுத்து அனுப்பி வைத்தார்.

அன்று இரவு கனகசபையின் மூத்தவன் கண்ணனோடு எல்லோருக்கும் சொல்லிக்கொண்டு பஸ் மூலமாக கொழும்புக்குப் புறப்பட்டார். இன்று வெள்ளி இரவு வீடு திரும்பவேண்டிய கனகசபை, ஐயாவை வழி அனுப்பி வைப்பதற்காக கொழும்பிலேயே தங்கிவிட்டார். ஒரு வழியாக அடுத்த நாள் காலை புறக்கோட்டை பஸ் நிலையத்தைச் சென்றடைந்ததும், காத்துக் கொண்டிருந்த கனகசபை மாஸ்ரரும், ஐயாவையும் மகன் கண்ணனையும் அழைத்துக்கொண்டு தான் தங்கியிருந்த வாடகை அறைக்குப் போய்ச் சேர்ந்தார். நன்றாகக் குளித்துவிட்டு, உடை மாற்றியபடி பக்கத்தில் இருக்கும் சைவ உணவகத்தில் காலை உணவை முடித்து விட்டு, அன்று பகல் முழுவதும் அவரது அறையிலேயே ஐயா தங்கி இருந்தார். பிரயாணத்திற்கான சகல ஒழுங்குகளையும், கனகசபை ஒழுங்காக செய்து முடித்து ஐயாவின் கைகளில் பொறுப்பித்தார். விமான நிலையத்துக்கு போகவென வாகனம் ஒன்றும் ஒழுங்கு செய்யப்பட்டது. `கண்ணன் இந்தக் காசை வைத்துக்கொள். அப்பா இந்தக் கிழமை வீட்டை வரமாட்டார். நீ நாளைக்கு பஸ் எடுத்து யாழ்ப்பாணம் போய்விடு. திங்கட்கிழமை பள்ளிக்கூடம் போகவேணும்’ என்று சொல்லியபடி, ‘தம்பி கனகசபை ஜேர்மனிக்கு ஒரு தொலைபேசி எடுங்கோ. மூத்தவன் சேதுவை நாளைக்கு காலையிலை ஆறு மணிக்கு பிராங்போட் விமான நிலையத்துக்கு வரச் சொல்லுங்கோ’ என்று உத்தரவு பிறப்பித்து விட்டு பகல் உணவு முடிந்ததும், தூக்கத்தை விரும்புகிறார் என



நினைத்த மாஸ்ரரும், வசதிகளைச் செய்து கொடுத்துவிட்டு, ‘ஐயா நீங்கள் கொஞ்சம் படுங்கோ, நானும் கண்ணனும் போய் நீங்கள் கொண்டு போறதற்கு கொஞ்சம் சொக்ளற் பிஸ்கட் எடுத்துக்கொண்டு வாறம்’ என்று கூறிவிட்டுக் கடைத்தெருவிற்குப் புறப்பட்டார். மாலை எட்டு மணிக்கு ஏற்றிச் செல்லவென ஏற்பாடு செய்திருந்த வாகனமும் வந்து நின்றது.

ஐயா முழங்கால் அளவிற்கு ஒரு நீண்ட நாஷனலும் கரை வேட்டியுடன், காலிலே தோற் செருப்பொன்றும், பார்ப்பதற்கு பஞ்சாபிக் காரரைப்போல தோற்றமாய் இருந்தாலும் மிக மிடுக்காகக் காட்சி தந்தார். வாகனம் புறப்பட்டு விட்டது. வழி வழியே கனகசபை விமான நிலையத்தில் செய்ய வேண்டியவற்றைச் சொல்லிக் கொண்டிருந்தார். ‘ஐயா இது சிறிய தோற்பைதானே. கையில் கொண்டு போகும் பையாக அனுமதிப்பார்கள். இறங்கும்போது அலைச்சல்களின்றி கையோடு எடுத்துக்கொண்டே போயிடலாம்’ என முழு விபரங்களையும் சொல்ல, எல்லாவற்றையும் அமைதியாகக் கேட்டுக் கொண்டிருந்தார். விமான நிலையத்தில் தன்னால் முடிந்த உதவிகளைச் செய்து கொடுத்துவிட்டு, ஐயா பயணம் செய்யவிருந்த அதே விமானத்தில் பயணம் செய்யும் ஒருவரைச் சந்தித்து, முடிந்தளவு உதவி செய்யுமாறும் கேட்டுக்கொண்டார்.

விமானமும் இரவு பத்து இருபதுக்கு கட்டுநாயக்கா விமான நிலையத்தைவிட்டு தன் பயணத்தை தொடங்கியது. முதற் பிரயாணம் என்பதால் மிக அவதானமாகவே செயல்பட்டார். தனக்கு தெரியாதவைகளை ஒதுக்கி, தெரிந்தவைகளைச் சாப்பிடுவதும். தூக்கத்திலும் அந்த இரவை ஒருவாறு போக்கினார். காலை ஆறு மணிக்கு அந்த நல்ல உறவு ‘ஐயா பிராங்போட் வந்துவிட்டது. உங்கள் பயணப் பையையும் எடுத்துக் கொண்டு என் பின்னாலேயே வாருங்கள். நான் உங்களை வெளியே கொண்டு சேர்ப்பிக்கிறேன்’ என்று கூறியபடி முன் நடந்தார்.

விமான நிலையத்தின் வெளியே வந்தவரை மூத்தவன் சேது அன்போடு வரவேற்றான். தன் இரு பிள்ளைகளுடன் விமானநிலையம் வந்திருந்தான். தன் பேரக் குழந்தைகள் எவ்வாறு தன்னோடு பழகுவார்கள் என எதிர்பார்த்தவருக்கு ‘ஹலோ’ என்ற வார்த்தையோடு ஒதுங்கிக்கொண்டது. மனத்தில் ஏதோ ஒரு உழைச்சலைத் தந்தது. சேது மட்டுமே தகப்பனுடன் கதைத்தபடி வாகனம் வீட்டை நோக்கிப் புறப்பட்டது. தகப்பன் வரும் சேதி அறிந்து, சேதுவின் வீடே அமர்க்களப்பட்டது. அன்று ஞாயிற்றுக்கிழமையாதலால்,

(தொடர்ச்சி 28ம் பக்கம்)


பாகம் - 2

15



# வலிகாமம் இருந்து வன்னி வரை

## - கவிஞர் நாவண்ணன்



அப்படிச் சொல்லியும்கூட எங்கட றோட்டில எத்தனை குடும்பங்கள் இன்னும் அசையாமல் இருக்கிறோம். நீங்கள் சொல்லுற மாதிரி தவணை கொடுத்து எழும்பச்சொன்னால் ஒவ்வொரு குடும்பமும் நியாயம் பேசிக்கொண்டு நிற்போமே தவிர நிச்சயமாக அவர்களுக்குத் தேவையான ஒத்துழைப்புக் கொடுத்திருக்கவே மாட்டோம்.` என்று மேலும் அவர்களைப் பேசவிடாது பதில் சொன்னேன்.

யுத்தகளத்தில் எடுக்கப்படும் ஒவ்வொரு திடீர் முடிவும், எதிரியின் அடுத்த நகர்வு எப்படி அமையப்போகின்றது என்பதைப் பொறுத்தே எடுக்கப்படுகின்றது. ஏற்கனவே போடப்பட்ட வியூகங்கள் எதிரியின் போக்கை உணர்ந்துகொண்டவுடன் அதற்கு ஒப்ப மாற்றி அமைக்கப்படுவன. அப்படி மாற்றுவதற்கும், செயல்படுவதற்கும் பொதுமக்களின் கருத்துக்கள் பெறப்படவேண்டிய தேவையில்லை. அது தளபதிகளைப் பொறுத்த விடயம். அத்தகைய ஓர் இக்கட்டான நிலையில்தான் புலிகள் மக்களைக் காப்பாற்ற வேண்டும் என்ற நோக்கத்துடன் திடீர் முடிவு எடுத்து மக்களுக்கு அதிர்ச்சியூட்டி அவர்களை வெளியேறச் செய்துள்ளனர் என்றே நான் நம்புகின்றேன்.

'வில்லங்கமாய் என்றாலும் படிப்படியாக மக்களை வெளியேற்றி இருக்கலாம். இப்படி ஒரேயடியாய் வெளியேற்றி மழைக்குள்ளேயும் பனிக்குள்ளேயும் மக்களை அநியாயமாகக் கஷ்டப் படுத்தியிருக்க வேண்டிய அவசியமில்லை' என்றது ஒரு குரல்.

'உண்மைதான். ஆனால் இன்றைக்கு நாங்கள் இதில நின்று கதைச்சுக்கொண்டு நிற்கிறம் என்றால் அன்றைக்கு மக்கள் முழுமையாக வெளியேற்றப்பட்டதனால்தான். அப்படி மக்கள் வெளியேறாமல் இருந்திருந்தால் மக்களைப் பாதுகாப்புக் கவசமாகப் புலிகள் வைத்திருக்கிறார்கள் என்று எண்ணி பொதுமக்களுக்குள்ளேயே எறிகணைகள் வீசியிருப்பான்கள். அல்லது பொது மக்களைத் தங்களுக்குப் பாதுகாப்புக் கவசமாக்கி அவன்கள் முன்னேறி வந்திருப்பான்கள். இதால இருபதினாயிரத்துக்கும் மேலான யாழ்ப்பாணத் தமிழர்கள் கொலை செய்யப்பட்டிருப்பார்கள். எங்கட பிணங்களுக்கு மேலால தான் இராணுவம் நடந்துவந்து கச்சேரியில சிங்கக்கொடி நாட்டியிருப்பான்கள். அப்படி ஓர் அவலம் நிகழாமல் தடுக்க மக்களை வெளியேறச் சொன்ன இராஜதந்திரம் புலிகள் செய்த குற்றமென்று கருதினால் அது பிழையாகவே இருக்கட்டும்.' என்றேன்.

'இந்தக் கோட்டை அடிபாட்டுக்குள்ளேயும் வெளியேறாமல் இருந்தனாங்கள். இந்த முறையும் வெளியேறப் போறதில்லை' என்று அவர்கள் கூறினார்கள்.

பரவாயில்லை அவர்கள் வெளியேறாமலே இருக்கட்டும். இராணுவம் யாழ்ப்பாணத்தை நெருங்கும்போது எறிகணை வீச்சின் அகோரம் தாங்கமுடியாது தாமாகவே வெளியேறிவிடுவார்கள் என என்மனதுக்குள் நினைத்துக் கொண்டேன்.

அன்று பகல் உணவை மைத்துணியிடமே முடித்துக்கொண்டு நான் முகமாலை நோக்கிப் புறப்பட்டுவிட்டேன். இரண்டு தினங்களால் தாம் கிளிநொச்சிக்கு வருவதாக அவர்கள் கூறி வழியனுப்பிவைத்தனர். அப்பொழுது பகல் இரண்டு மணியிருக்கும் என்னைப் போன்று பலரும் சைக்கிளில் வீட்டுச்சாமான்களைக் கட்டிக்கொண்டு சைக்கில்களில் யாழ்ப்பாணத்தில் இருந்து வெளியேறிக்கொண்டிருந்தனர்.

சைக்கிலை தன்னிச்சையாக மிதித்துக்கொண்டிருந்தேன். அரியாலைக்குள் வந்தபோது திடீரென எழுந்த 'அம்மா' என்ற குரல் என்னை என் நிலைக்கு கொண்டுவந்தது. காலையிலே நான் கண்ட அதே பசுமாடு இறந்துவிட்ட கன்றின் முன் நின்றுகொண்டு அழுதுகொண்டு நின்றது. உயர்திணையாக, அஃறிணையாக இருந்தாலென்ன தாய்ப்பாசம்

> யுத்தகளத்தில் எடுக்கப்படும் ஒவ்வொரு திடீர் முடிவும், எதிரியின் அடுத்த நகர்வு எப்படி அமையப்போகின்றது என்பதைப் பொறுத்தே எடுக்கப்படுகின்றது. ஏற்கனவே போடப்பட்ட வியூகங்கள் எதிரியின் போக்கை உணர்ந்துகொண்டவுடன் அதற்கு ஒப்ப மாற்றி அமைக்கப்படுவன.

என்பது ஒன்றுதான். நீண்ட தொலைவு வந்தபின்னரும் அதன் அழுகுரல் கேட்டுக்கொண்டே இருந்தது. அதன் குரல் எட்டாத் தொலைவு வந்தபின்னரும்கூட அந்தக்குரல் மனதில் மீண்டும் மீண்டும் ஒலித்துக்கொண்டே இருந்தது.


வருகின்ற வழியில் மீசாலையில் கலைபண்பாட்டுக் கழக அலுவலகத்துக்குச் சென்றேன். கவிஞர் புதுவை இரத்தினதுரையும் இருந்தார். கலைபண்பாட்டுக்கழகம் செய்யும் இடம்பெயர்ந்த கலைஞர்களுக்கான உதவித்தொகையான ரூபாய் ஆயிரம் கொடுத்த அந்த வேளையில் அவ்வுதவித் தொகை பெரும் கொடையாக இருந்தது. நன்றி கூறிக்கொண்டு மீண்டும் முகமாலையை நோக்கி நகர்ந்தேன். கிளிநொச்சி நோக்கிய அடுத்த நகர்வுக்கான திட்டங்களோடு மிதிவண்டியை மிதித்தேன்.

* * *

நவம்பர்மாதம் நான்காம் நாள் கிளாலிக் கடலேரியைத் தாண்டுவது என்ற முடிவுக்கு வந்தோம். ஆனால் எங்கள் மகனோ எங்களோடுதான் வரப்போவதில்லை என்று பிடிவாதமாக நின்றான். அவனது நண்பனின் வீட்டுச் சாமான்கள் இன்னும் கொஞ்சம் எடுத்துவரவேண்டியிருப்பதால் தான் அவனுடன் யாழ்ப்பாணம் போகப்போவதாகவும் எங்களைத் தான் கிளிநொச்சியில் வந்து சந்திப்பதாகவும் கூறினான்.

அவனது இந்தப் பேச்சும் செயலும் எனக்கு ஆத்திரமூட்டுவதாக இருந்தது. ஆனால் என்னைப் பொறுமை இழந்துவிடாதபடி என்னவள் தடுத்தாள். 'வந்த இடத்தில் தகப்பனும் மகனும் சண்டை செய்வது அழகல்ல நானே அவனிடம் பேசுகின்றேன்' என்று கூறி மகனோடு தனிமையில் பேசினாள். தாயின் மீது மிகவும் அன்புடையவன் அவன் தன் சொல்லைக் கேட்பான் என்று அவள் நம்பினாள். அந்த நம்பிக்கையோடு அவனோடு பேசினாள். அவனோ தனது நிலையில் இருந்து தளர்வதாக இல்லை. தனது கடைசி ஆத்திரமாக 'நாளைக்கு நீ எங்களோடு வராவிட்டால் என்னுடைய சாவுக்கும் நீ வரவேண்டாம்` என்று கூறினாள். அந்த வார்த்தைகள் கூட அவனை மனம் மாற்றவில்லை அவன் சென்றுவிட்டான். எங்களுக்குத் தாங்கொணாக் கவலையும், அவமானமாகவும் இருந்தது. ஆனால் வெளிக்காட்ட முடியவில்லை மனதுக்குள் புழுங்கிக்கொண்டோம்.

மறுநாள் கிளாலிக் கரைக்குச் செல்ல ஆயத்தமானோம். இடப்பெயர்வு தொடங்கிய நாளில் இருந்து கிளாலிக்கரை மக்கள் வெள்ளத்தால் திருவிழாக்கோலம் பூண்டிருந்தது.



அதிலும் வன்னிக்குச் செல்லும் மக்களுக்காக இலவசப்படகுச் சேவை நடைபெற்றுக்கொண்டிருந்தபடியால் மக்கள் போட்டிபோட்டுக்கொண்டு படகுகளில் இடம்பிடிக்க முயற்சித்துக்கொண்டிருந்தனர். மேலும் பெருந்தொகையான மக்கள் தென்மராட்சியில் இருந்துவந்துகொண்டிருந்தனர். மழை வேறு விட்டுவிட்டுப் பெய்துகொண்டிருந்தது. புறப்பட்ட பயணத்தைத் தொடர்வது என்பதில் உறுதியாக இருந்தோம்.

மழை கொட்டக்கொட்ட கிளாலிக்கரையில் உள்ள அல்லிப்பளை படகுத்துறையை அடைந்தோம். அக்கரையில் அமைக்கப்பட்டு இருந்த தேனீர்ச்சாலையின் தாழ்வாரத்தில் ஒடுங்கிக்கொண்டு நின்றோம். தொடர்ந்து எப்படிச் செல்வது. படகில் எப்படி இடம்பிடிப்பது என்ற நடைமுறை கூடத் தெரியவில்லை. தேனீருக்காக மூட்டப்பட்ட அடுப்புச் சற்றுத் தள்ளியிருந்தது. அதிலிருந்து புறப்பட்ட கதகதப்பு அந்த மழைக்குளிருக்கு இதமாக இருந்தது.

எமக்குச் சற்றுத்தள்ளி எழுபதுக்கும் எண்பதுக்குமிடையிலான வயது மதிக்கத்தக்க மூதாட்டி ஒருவர் தாழ்வாரத்தில் ஒடுங்கிக்கொண்டு நின்றார். தேனீர்க் கடையில் நின்ற இளம் வட்டங்கள் அவரை வலியச் சீண்டின. அவரும் விட்டுக்கொடாமல் அவர்களுக்குப் பதில கூறிக்கொண்டே நின்றார்.

'என்னணை ஆச்சி? எங்கையணை கிளிநொச்சிக்கே?'

'ஓமோம்'

'ஏன் சாகப்பயந்தே ஓடுறியள்'

'எனக்கென்ன சாகப் பயம்?'

'அப்ப நிண்டு சண்டை பிடிக்கலாமே?'

'ஏன் நான் சண்டை பிடிக்கமாட்டேனே?'

அந்த மூதாட்டியின் பதிலைக் கேட்டு அந்த இளைஞர்கள் பெரிதாகச் சிரித்தனர்.

'நீ சண்டைக்குப் போய் என்னணை செய்யப் போறாய்?'

'ஒண்டுக்கும் உதவாட்டிலும் என்னில குண்டைக் கட்டிவிட்டால் போய் வெடிக்க மாட்டேனே! இந்தச் சின்னன்கள் எல்லாம் எங்களுக்காகப் போய்ச்சாகேக்க நாங்கள் போய்ச் செத்தாலென்ன!'

பாட்டியின் பேச்சு தன்னைக் கிண்டல் செய்யும் இளசுகளுக்கான பதிலாக வந்தபோதும் பக்கத்தில் அவ்வுரையாடலைக் கேட்டுக்கொண்டு நின்ற என்னால் வெறும் கேலிப் பேச்சுக்களாகக் கொள்ளமுடியவில்லை. நமது இந்த விடுதலைப் போராட்டமானது எமது சமூகத்தின் எல்லா மட்டத்தினரையும், எல்லாவயதினரையும் எந்தளவு பாதித்திருக்கிறது. இப்படி எல்லோர் மனங்களையும் வெற்றிகொண்ட இந்தப் போராட்டம் நிச்சயம் இலக்கை அடையாமல் ஓயாது என்ற உறுதி எனக்குள் ஏற்பட்டது.

நீண்டவரிசையொன்று சென்றுகொண்டிருந்தது. அதில் நின்று அனுமதிச் சிட்டைகள் பெற்றதன் பின்னர் அந்த ஒழுங்கின்படி படகு ஏறவேண்டும் என்று அறிந்துகொண்டோம். சைக்கில்களை பொதிகளோடு ஒருபக்கம் நிறுத்திவிட்டு அந்தவரிசையில் நின்றுகொண்டோம். ஆமை வேகத்தில் வரிசை நகர்ந்துகொண்டிருந்தது. அந்தவேளையில்தான் அவ்விளைஞனைக் கண்டேன். நான் அவனை அடையாளம் கண்டுகொள்ளுமுன்னர் அவன் எங்களை இனம்கண்டுகொண்டான். சிரித்தபடியே எங்களை நோக்கி வந்தான்.

மெலிந்த உயரமான தோற்றமுடையவன். பெயர் சின்னவன் என்றுதான் அறிமுகம். இயக்கச்சி கருணாகரன்மூலம் அறிமுகமாகியிருந்தான். ஒருநாள் எனது அச்சகத்துக்கு கருணாகரன் அவ்விளைஞனை அழைத்துவந்து 'அண்ணை இவருடைய உறவுக்காரப் பெண் ஒருவரின் முப்பத்தி ஓராம் நாள் நினைவு நாளைக்கு. இன்று மாலைக்குள் அவருக்காக நினைவு மலர் ஒன்று அச்சிட்டுக்கொடுக்கவேண்டும். அச்சிட்டுக் கொடுப்பீர்களா?' என்று கேட்டார்.

என் மகளைப் பறிகொடுத்துவிட்டு அந்தச் சோகநிழல் மறையாமல் நான் இருந்த காலமது. மிகவும் நெருக்கடியான வேலையென்றாலும் அதை ஒப்புக்கொண்டு என்னால் முடிந்த அளவு சிறப்பாகச் செய்துகொடுத்தேன். அன்று இதயபூர்வமாக நான் செய்த அந்த சிறிய உதவிக்கான நன்றிக்கடனைத் தீர்ப்பதற்காக இன்று அவன் வந்து நின்றான் என நினைக்கின்றேன்.

(தொடரும்)

# என்னோடு நான்

கந்தையா நவரேந்திரன்

எண்ணத்தின் முழு வடிவமுமே கிடைக்கோடு (horizontal) வடிவத்தில் தான் அமைக்கப்பட்டுள்ளது. நாங்கள் புத்தகத்தைக் கிடைக்கோடாகத் தான் வாசிக்கின்றோம். ஒவ்வொன்றுக்கும் ஒரு தொடக்கமும் ஒரு முடிவும் உள்ளது என்பது எங்கள் முடிவாகையால், முதலாவது அத்தியாயம், கட்டாய விளைவாகக் கடைசி அத்தியாயத்துக்கு இட்டுச் செல்லும் என்று நாங்கள் நம்புகின்றோம். எல்லா நடைமுறை ஒழுங்குகளும், வாடிக்கைகளும், பழக்கங்களும், வழக்கங்களும், நீடித்த பயிற்சிகளும் ஒரு முடிந்த முடிவுக்கு -ஒரு மடிப்பு அவிழ்வுக்கு இட்டுச் செல்வதாகவே நாம் எண்ணிக் கொண்டிருக்கின்றோம். இது செங்குத்துக் கோட்டிற்குச் செங்கோணத்தில் உள்ள கிடையான எங்கள் வாசிப்பு முறையை ஒத்தது. எங்களுடைய மனங்கள், கண்கள், மனப்பான்மைகள், பழக்க நடக்கைகள் யாவும் கிடைக்கோடாகச் செயற்படுமாறே வரையறுக்கப்பட்டுள்ளன. ஈற்றில் புத்தக வாசிப்பு முற்றுப் பெற்றுவிடும்.

உண்மையை அல்லது ஐயம் தெளிதலை அல்லது மூட நம்பிக்கையில் இருந்து விடுபடுதலை ஒருதலே அதனை முடிவுக்குக்கொண்டுவந்துவிடும். அந்த நிலையிலேயே, முதல் அடி கடைசி அடியாவதற்கான அசைவு நிகழமுடியும். காலம் என்ற அடிப்படைக் கூறுக்கு இங்கே இடம் இல்லை.

ஒரு படிமுறையை அளிக்கும் சகல மரபுமுறைகள் சார்ந்த அணுகு முறைகளுக்கும் ஒரு முற்றுப்புள்ளியும் முடிந்த முடிவும் தேவை. ஒரு தொடருந்து நிலையத்துக்குப் பல பாதைகள் உள்ளன என்று கூறுவதையே இது ஒத்துள்ளது. அப்படியானால் தொடருந்து நிலையம் ஒரு நிலையான புள்ளியாகிறது. முடிந்த முடிவைப் கொண்ட எதுவும் உயிருள்ள ஒன்றாகாது. உண்மை என்பது ஒரு முடிந்த முடிவா? நாங்கள் ஒரு தொடருந்துக்குள் ஏறி இருந்துகொண்டால், எமக்கு எதுவுமே நடைபெறாமல் அத்தொடருந்து எம்மை எமது சேருமிடத்திற்குக் கொண்டு போய்ச் சேர்த்துவிடும் என்று சொல்லலாமா? அதாவது, நாம் உண்மையை எமது இறுதியான இலக்காக அடைந்துவிட்டால், எமது கவலைகளும், எமது ஏக்கங்களும், எமது அக்கறைகளும், எமது அச்சங்களும் முற்றுப்பெற்றுவிட்டதாகச்

## முதல் அடியே கடைசி அடி

முடிவான சாதனையாகக் கருதுகின்றோம். அந்த நிறுத்தப்புள்ளிக்கு அப்பால் ஒன்றும் இல்லையா? இந்த இறுதிப் புள்ளியில் இருந்து வழுக்கிப் பின் விழுதல் நிகழாதா? அந்த முனையின் உள்ளார்ந்த தனித் திறனுடன் ஒரு நொடிப்பொழுதுத் தொடர்பை நாம் கொண்டிருக்கலாம். சற்றுப் பின்னர் எண்ணமானது மீண்டும் கிளர்ந்து எழும். உடனே நாங்கள் மீண்டும் எமது பழைய நிலைக்கே திரும்பி விடுகின்றோம். இத்தொடர்பு செல்லுபடியாகக் கூடியதா? அந்த நிலைக்கும் எங்களுக்கும் இடையே நாங்களே ஒரு தூரத்தை - தடையைப் போட்டுவிடுகிறோம். அந்தத் தொடர்பு உண்மையானதாக இருக்குமானால் அங்கே எண்ணம் எழாது.

நாம், இந்தத் தொடர்பு நிலையில், பொது நிலை கடந்த - வழக்கம் மீறிய வியக்கத்தக்க மிகப் பெரிய ஒன்றைக் காண்போமேயானால் உடனே அந்த புலன் உணர்வை-அந்த அனுபவிப்பவன் இல்லாத அனுபவத்தை எமது நாளாந்த வாழ்க்கையில் தொடர்ச்சியாக இடைவிடாது நீடிக்கவைத்து என்றும் இயங்கச் செய்யத்தொடங்கி விடுவோம். இங்கே தான் தவறு தொடங்குகிறது. மனம் ஏதோ ஓர் உண்மையைக் காண்கிறது. அதுபோதும். மனம் தெளிவாகிறது. குற்றமற்ற, எளிய, சூழ்ச்சியற்ற, தீங்கற்ற மனமாக எங்கள் மனம் மாறுகிறது. அத்தகைய மனமே ஊறுபடாத மனமாகும். ஆனால் எங்கள் எண்ணமோ அதனை எங்களது தினசரி வாழ்க்கையில் தூக்கிச் சுமந்து கொண்டிருக்க விளைகிறது.

மனம் எதையாவது தெளிவாகக் கண்டால் அதனை அங்கேயே அந்நிலையிலேயே விட்டுவிடவேண்டும். காண்பது முதல் அடியானால், அதனை அந்நிலையில் அப்படியே விடுவது கடைசி நிலையாகும். அதாவது முதல் அடியே கடைசி அடியாக அமைகிறது. இங்கே படிப்படியாக நிகழும் படிமுறைக்கு இடமே இல்லை.

முதல் அடி கடைசி அடியாகும் போது தான் புதிதாக அடுத்த அடியை எடுப்பதற்கு எமது மனம் புதிதாகிறது. இதை விடுத்து மனம் அதைச் சுமக்கக்கூடாது. அது அறிவாக -அறிந்ததாக மாறாதபோது அது தொடர்ச்சியை நாடாது முற்றுப்பெறுகிறது. எண்ணம்தான் எமது சுயத்தின் இயக்கி. நாம் கண்ட காட்சியுடன் எமது சுயத்தின் எண்ணம் கொண்டுள்ள தொடர்பு முடிவுக்கு வரவேண்டும். அந்த உண்மை எங்களது உள்ளத்தில் ஒளிர வேண்டுமானால் எமது எண்ணம் மரணிக்க வேண்டும். அப்படி அது மரணிக்காது போனால் அது நினைவாகிவிடும். அந்த நினைவு எண்ணத்தால் உறுதிப் படுத்தப்பட்டுவிடும். நினைவை ஆழமாக வேரூன்ற வைத்து நீடித்திருக்கச் செய்யும் ஆற்றல் எண்ணத்துக்கு உண்டு. மனம் தெளிவாகக் காண்கிறது என்றால், அந்தக் காணுதீண்டமுடியாத உண்மையை நாம் தரிசிக்க முடியுமா? கிடைக்கோடாக வரையறுக்கப்பட்ட மனதால், கிடைக்கோடாகத்தான் வீழ்ந்துகொண்டிருக்கிறேன் என்று தெரிந்துகொண்ட மனத்தால், கிடைக்கோடாகவோ நிலைக்குத்தாகவோ (Vertical) இல்லாத ஒன்றைக் காணமுடியுமா?

உண்மையைக் கண்டதுமே அக்காட்சி மனத்தைத் தூய்மைப்படுத்துகிறது அத்தூய்மைப்படுத்தலிலேயே அக்காட்சி முடிவுக்குக் கொண்டு வரப்படுகிறது. அக்காட்சியே முடிவாகிவிடுகிறது. அம்முடிவில் தான் புதியது பிறக்கிறது.

> மனம் எதையாவது தெளிவாகக் கண்டால் அதனை அங்கேயே அந்நிலையிலேயே விட்டுவிடவேண்டும். காண்பது முதல் அடியானால், அதனை அந்நிலையில் அப்படியே விடுவது கடைசி நிலையாகும். அதாவது முதல் அடியே கடைசி அடியாக அமைகிறது.

# எதிரியின் கைகளில் சிக்கக் கூடாது என்பதற்காக படகோடு எரிந்தார்கள்...

## கடற்புலி லெப். கேணல் நாவரசன்

இவன் வளமுள்ள வன்னி நாட்டின் சொந்தக்காரன். வடிகாலமைப்புக்கள் நிறைந்த கிளிநொச்சியின் மத்தியிலுள்ள உருத்திரபுரத்தில் செல்லையா தம்பதிகளுக்கு மகனாகப் பிறந்தான். இவனுக்குப் பெற்றோர் சந்திரராஜன் எனப்பெயர் வைத்திருந்தார்கள். சிறு பராயத்திலேயே தந்தை இவனைப் பிரிந்து சென்று விட்டார். தாயாரும் தமக்கையாரும், இரண்டு மருமகளும்தான் இவனது உறவுக்கு இலக்கணமாக இப்போதும் இருக்கின்றார்கள். உரத்திரபுரத்திலே வேலைகளுக்குச் சென்று உழைத்த இவனது தாய் மிகவும் செல்லமாகவும், வறுமை நிலைமையை, சந்திரராஜன் உணராதவாறும் அன்பாக வளர்த்து வந்தாள். அக்காவோ இவனிடத்தில் அளவுகடந்த பாசம் வைத்திருந்தாள். இப்படியாக இவனுடைய சிறு பராயம் உருத்திரபுர மண்ணிலேயே மிகவும் மகிழ்ச்சியாகக் கழிந்தது.

1990ம் ஆண்டு இந்திய இராணுவம் எம் மண்ணிலிருந்து விடுதலைப் புலிகளால் வெளியேற்றப்பட்ட இந்தக்காலத்தின் இடைப்பகுதியை எதிர்பார்த்திருந்த பல இளைஞர்கள், மண்ணுக்காகத் தம்மை மாற்றிக்கொண்ட வேளையில்தான் தனது பங்கையும் வீட்டில் இருந்து நாட்டிற்காகச் செய்யத்தொடங்கினான் சந்திரராஜன். பின் முழுமையாகத் தன்னை விடுதலைப் புலிகளுடன் இணைத்து நாவரசன் என்ற பெயருடன் அடிப்படைப் பயிற்சி முடித்து தரைப்படையுடன் தன்னை இணைத்தவன் முதற் களத்தில் நின்று காயமடைந்தான். பின் கடற்புலி உறுப்பினராகத் தன்னை கடற்புலிகளுடன் 1992ம் ஆண்டு காலத்தில் இணைத்துக் கொண்டான். தனது அயராத திறமையினால் குறுகிய காலப்பகுதியில் கடற்புலிகளின் இரண்டு படகுக் கட்டளை அதிகாரியானான். தொடர்ந்தும் தலைவரின் திட்டத்தினை செயல்வடிவமாக்க அயராது, ஆச்சரிக்கதக்க வகையில் செயலாற்றினான். இப்படி இருக்கும் போது ஒருமுறை இரண்டு நாட்கள் விடுமுறையில் இவன் தனது வீடு சென்றான். தாயும் தமக்கையும் இவனை கட்டிப்பிடித்து ஆனந்தக் கண்ணீர் சொரிந்து மகிழ்ச்சிபொங்கக் குதூகலித்தார்கள். இவ்வேளை திடீரெனத் தாய் ‘சண்டைக்குப் போறனியா..?’ என கனத்த குரலில் கேட்டாள். அவன் தனது தாயின் உணர்வைப் புரிந்தான். ‘இல்லையம்மா நான் எங்கட முகாமில இருக்கிற பெடியளுக்குச் சமைச்சுத்தான் குடுக்கிறனான். இதுதான் என்ரவேலை. நான் சண்டைக்கு போறதில்லை’ என்றவாறு தனது கைக்குட்டையால் தாயின் கண்ணீரைத்துடைத்தவன் தனது அக்காவையும் கட்டி அணைத்துக் கவலைப்பட வேண்டாம் என ஆறுதல் கூறிப் போராட்டத்தின் தேவையை அவர்களுக்குப் பக்குவ




மாக விளங்கவைக்கிறான். இப்படியாக இவனது விடுமுறையும் முடிந்து முகாம் வந்தான். வந்த வேளையில் திடீரென இவனுக்குத் திருமலை மாவட்ட கடற்புலிகள் அணியுடன் கடமைக்குச் செல்லுமாறு இவனது தளபதியிடம் இருந்து உத்தரவு வரவே தனது தோழர்களிடம் விடை பெற்றுச்சென்றான்.

திருமலை மாவட்டக் கடற்புலிகள் அணி மேஜர் வசந்தன் அவர்களுடைய பெயரில் உருவாக்கப்பட்டிருந்தது. அவ்வேளையில் தான் நாவரசனும் வசந்தன் படையணியுடன் பணியாற்ற வந்திருந்தான். அங்கு அவன் ஒரு படகுக் கட்டளை அதிகாரியாக நியமிக்கப்பட்டு, பல கடற்சமர்களில் சாதுரியமாக ஈடுபட்டதுடன், பல விநியோகப் பணிகளையும் விரைவாகச் செய்தான். கண்ணில் எண்ணையூற்றி விழித்திருந்த சிங்களக் கடற்படையினருக்கு கண்ணில் மண்ணைத்தூவி காரியத்தைக் கச்சிதமாக முடிப்பதில் திறமையானவன்.

இப்படியாக ஆறு மாதங்கள் திருமலை மாவட்டத்தில் பணியாற்றி வரும் வேளையில், மன்னார் மாவட்டத்தில் கடற்புலிகளை விரிவு படுத்துவதற்காக, இவனுடைய அணிகளும் மன்னார் மாவட்டக் கடற்புலிகள் அணியுமாக அந்த மாவட்டத்தில் எமது அமைப்புக்குத் தேவையான மருத்துவப்பொருட்களைப் பெற்றுத்தரும் பணியை பலதோழர்களுடன் பல மாதங்களாகச் செய்துவந்தான். இவ்வேளையில் இவனது முகாமை வேறோர் இடத்திற்கு மாற்றுவதற்கான முழுப்பொறுப்பையும் இவனிடமே விடப்பட்டிருந்தது. இம்முகாம் வேலைகளை முடிப்பதற்காக இவன் இருக்கின்ற முகாமில் இருந்து தனது தோழர்களையும் கூட்டிக்கொண்டு உழவு இயந்திரத்தில் புதிய முகாம் அமைக்கும் இடத்துக்குத் தினமும் செல்வான்.

இப்படிச் சென்றுகொண்டிருந்த நாட்களில், 07.02.1999 அன்று படகுகள் ஒழுங்கு செய்யப்பட்டன. நாவரசன் விநியோக வண்டிகள் இரண்டிற்கும் கட்டளை அதிகாரியாக வண்டிகள் இரண்டையும் வழிநடத்திக் கொண்டு சென்று பொருட்களை ஏற்றிக்கொண்டு திரும்புகையில் கச்சதீவுக் கடற்பரப்பில் சிறீலங்காக் கடற்படை இவனது படகுகளின் பாதையில் வருகின்றது. இவனுக்கும் தங்கள் பாதகமான நிலை விளங்குகிறது. மற்றைய படகையும் தன்னருகே வரவழைத்து பலத்தைப் பெருக்கினான். இவ்வேளையில் இவ்விரு கடற்படையினருக்கும் இடையில் 08.02.99 அதிகாலை அன்று கடுமையான கடற்சமர் இடம்பெறுகி

(தொடர்ச்சி 28ம் பக்கம்)




# குறுங்கதை

## சுற்றம்



மலையின் உச்சியில்
இருந்து
பள்ளத்தாக்குக்குப்
பாய்ந்த ஆற்றை,
பள்ளத்தில் பச்சைப்
பசேலென்று வளர்ந்திருந்த
புற்களும் செடிகளும்
மனமாரப் புகழ்ந்தன:
'கீழே இருக்கிற எங்களை
யார் கவனிக்கிறார்கள்...?
ஆற்றை எப்படி
மறப்போம்?'
கொழுத்த புல்லின்
நிழலில் உரையாடலைக் கேட்டபடி படுத்திருந்த ஆமை
சொன்னது:
'பள்ளத் திருப்பார்
உள்ளத் திரு'

- காசி ஆனந்தன்.

# கதை முற்றம்

## ஒரு ஆடும் அதன் குட்டியும்

ஒரு வீட்டில் ஒரு தாய் ஆடும் குட்டி ஆடும் சேர்ந்து இலை தழைகளைத் தின்றுகொண்டிருந்தன. அப்போது அவற்றை வளர்ப்பவரும் மற்றொருவரும் பேசிக்கொண்டே அவ்விடம் வந்தனர். அவர்கள் பேசுவதைக் கேட்ட ஆடுகள் தாங்கள் வேறோர் இடம் செல்ல இருப்பதைப் புரிந்துகொண்டன. குட்டி ஆடு தன் தாயிடம் கேட்டது 'அம்மா, நாம் ஏன் அங்கு செல்லவேண்டும்?' என்று. அதற்குத் தாய் ஆடு கூறியது 'எல்லாம் நம் கையிலா இருக்கிறது? நம் நேரம் எப்படி இருக்கிறதோ அதன்படிதான் எல்லாம் நடக்கும்' என்று கூறி குட்டியை அமைதிப்படுத்தியது. சற்று நேரம் கழித்து ஆடு வளர்ப்பவருடன் வந்தவர் இரண்டு ஆடுகளையும் ஓட்டிச் சென்றுவிட்டார். ஆடுகளும் அங்கு சென்று இலை தழைகளை நன்கு சாப்பிட்டு இருந்தன. ஒருநாள் தாய் ஆட்டை வெட்டுவதற்கு ஏற்பாடு ஆகிக்கொண்டிருந்தது. இதைக் கவனித்த குட்டி ஆடு தன் தாயிடம் கேட்டது, 'அம்மா, இன்று உங்களை வெட்டப்போவதாகக் கூறுகிறார்களே, எனக்கு அச்சமாக இருக்கிறது என்னம்மா செய்வது?' என்று கேட்டது. ஆடு 'மகனே, நான் முன்பு கூறியதுபோல இதுவும் நம் கெட்ட நேரம்தான். அதை யாராலும் தடுத்து நிறுத்த முடியாது' என்று கூறி விதியே என்று இருந்தது. சிறிது நேரத்தில் தாய் ஆட்டை இழுத்துச் சென்று வெட்டிக் கறிசமைத்து விட்டனர். இதையெல்லாம் வேதனையுடன் பார்த்துக்கொண்டிருந்த குட்டி ஆட்டிற்கு தன் தாயின் பேச்சும் அதன் மூடநம்பிக்கையும் கோபத்தை வர வைத்தது. இளங்குட்டி ஆட்டிற்கு வீரமும், தன்னம்பிக்கையும், வேகமும் அதன் உள்ளத்தில் பொங்கி எழுந்தது. உடனே, அந்த ஆட்டுக்குட்டி தன்னைக் கட்டியிருந்த கயிறு என்னும் விலங்கை கடித்து முறுக்கி அறுத்துக்கொண்டு ஓடியது. இனிமேல் அதன் தன்னம்பிக்கையும் துணிவும் அதைக் காப்பாற்றும் என்று நம்புவோமாக!

- மே. தமிழ்மாறன்.





# அறிஞர் முற்றம்

## வில்லியம் ஹாவே



இங்கிலாந்து நாட்டின் ஃபோக்ஸ்டோனில் 1578ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 1-ஆம் திகதியன்று வில்லியம் ஹாவே பிறந்தார். அவரது தந்தையான தோமஸ் ஹாவே செல்வம் நிறைந்த வணிகராக இருந்தார்.

கேன்டர்பர்ரியில் உள்ள அரசர் பள்ளியில் குழந்தையாக இருந்த வில்லியம் கல்வி பயிலத் தொடங்கினார். அவருக்குப் பதினான்கு வயதானபோது, கேம்ப்ரிட்ஜ் கெயின் கல்லூரியல் உயர் கல்வி பயில அவர் கர்னவில்லிக்குச் சென்றார். 1597இல் பட்டம் பெற்ற அவர், ஐரோப்பாவிலேயே தலை சிறந்த மருத்துவப் பள்ளியான படுவா பல்கலைக் கழகத்தில் சேர்ந்தார். தனது மருத்துவக் கல்வியை 1602 ஏப்ரலில் முடித்த அவர் 1604 ஓகஸ்ட் முதல் மருத்துவத் தொழில் பார்க்கத் தொடங்கினார்.

1607 இல் மருத்துவர்களின் கல்லூரி நிர்வாக உறுப்பினராக இவர் ஆக்கப்பட்டார். தன் வீட்டுக்கு அருகில் இருந்த செயின்ட் பார்த்லோமியோ மருத்துவ மனையில் அவர் மருத்துவத் தொழில் ஆற்றி வந்தார். 'இதய இயக்கம் மற்றும் இரத்த ஓட்டம் பற்றிய பயிற்சிகள்' என்ற நூலை அவர் 1628இல் வெளியிட்டார். முன்னர் கேலனால் கற்பிக்கப்பட்டபடி ரத்தம் கல்லீரலில் இருந்து பாய்ந்து வருவதில்லை, இதயத்தில் இருந்தே பாய்ந்து வருகிறது என்று அவர் தன் நூலில் எழுதியிருந்தார்.

இதயத்திலிருந்து தமனி ரத்தக் குழாய்கள் இரத்தத்தை உடலின் பல பாகங்களுக்கும் எடுத்துச் செல்கின்றன என்றும், சிரை ரத்தக் குழாய்கள் உடலின் பல பாகங்களில் இருந்தும் ரத்தத்தை மறுபடியும் இதயத்துக்குக் கொண்டு வருகின்றன என்றும் ஹாவே கூறினார். இந்தக் கண்டுபிடிப்புக்காக 'ரத்த ஓட்டத்தைப் பற்றி கண்டறிந்த கிறிஸ்டோபர் கொலம்பஸ்' என்று அவர் அழைக்கப்பட்டார். அவரை இந்த முக்கியமான கண்டுபிடிப்பே உலகப் புகழ்பெறச்செய்தது.

முதலாம் சார்ல்ஸ் மன்னரின் தனிப்பட்ட மருத்துவராக அவர் நியமிக்கப்பட்டார். 1646 இல் தன் மனைவியையும், நண்பரையும் இழந்த ஹாவே கீழ்வாதத்தாலும் துன்புற்றார். அந்த நேரத்தில் அவர் 'விலங்குகளின் முன்னேற்றம்' என்ற மற்றொரு நூலை எழுதினார். தன் நண்பர் ஜோர்ஜ் என்ட் உதவியுடன் அந்த நூலை அவர் வெளியிட்டார்.


பெரும்பாலான விலங்குகள், அவை குட்டி போடுபவைகளாக இருந்தாலும் சரி, முட்டைகளில் இருந்து தோன்றியவையே என்று ஹாவே இந்த நூலில் விளக்கியுள்ளார்.

1657 ஜூன் 3 ஆம் திகதியன்று அவர் உயிர் நீத்தார்.

# மழை



*மழையே! எங்களிடம் கண்ணாமுச்சி*
*ஆடுகின்றாயா?*
*கண்டுபிடித்துவிடுவோம் என்று மேகமாய் நீ...*
*விண்வெளியை உலா வருகிறாயா?*
*அங்கு துள்ளிக் குதித்து விளையாடுகிறாயா?*
*உன்னை பூமிக்கு அழைத்து விளையாட*
*தென்றலை அனுப்பிவைத்திருக்கிறேன்!*
*தென்றலில் மயங்கி மழையாய் எங்கள்*
*பூமிக்கு வந்து விளையாடுவாயா?*
*மலைகளுக்குப்பின் மேகமாய் ஒளிந்து*
*திக்குமுக்காடச் செய்வாயா?*
*வானில் இருந்து உன்னை நாங்கள்*
*தேடுவதைப் பார்த்து இரசிப்பாயா?*
*சிறுவர் சிறுமியர் உன்னில் கப்பல் விட்டு*
*விளையாடுவார்கள் என்ற பயமா?*
*சொல்! மழையே! சொல்! என்ன காரணம்,*
*எங்கள் பூமிக்கு வராமலிருப்பதற்கு?*



நீ வருவாய் எனக் காத்திருக்கும்
அமுதா

# அறிஞர் வாழ்வில்

## ஏன் சிரிக்கிறாய்?



*வின்ஸ்டன் சேச்சில் ஒருமுறை மனநோய் மருத்துவமனையைப் பார்வையிடச் சென்றிருந்தார். உள்ளே, அவரை ஒரு மனநோயாளி வழிமறித்தான். மெய்க்காப்பாளர்கள் அவனை ஒதுக்கிவிட்டார்கள். அவர்களைப் பேசாதிருக்கும்படி சொல்லிவிட்டு, அவனிடம் அனுதாபத்தோடு சேச்சில் கேட்டார்: 'ஏனப்பா, உனக்கு என்ன வேண்டும்?'*

*உடனே அவன்.. 'நீ யாரென்று தெரிய வேண்டும்' என்றான்.*

*'நான் தானப்பா இந்த நாட்டின் பிரதமர், வின்ஸ்டண்ட் சேச்சில்' என்று அவர் கூற – அவன் பலமாகச் சிரித்தான்.*

*'என்னப்பா, ஏன் சிரிக்கிறாய்?' என்றார், அவர்.*

*'இங்கு வந்த புதிதில் நான்கூட உன்னைப் போல நான்தான் நெப்போலியன் என்று சொல்லிக்கொண்டிருந்தேன். நீ இப்போது தானே வருகிறாய்.. போகப் போகச் சரியாகிவிடும்!' என்றான் அவன்.*

# அறிந்துகொள்வோம்

## அளிப்போம் இரத்த தானம்

* *நம் உடலில் சாதாரணமாக 7 லீட்டர் (7000 கன செ.மீ) இரத்தம் உள்ளது.*
* *நாம் வழங்கும் 5 சதவீத இரத்தம் 48 மணி நேரத்தில் உடலுள் சுரந்துவிடுகிறது.*
* *இரத்தம் உபரிக்காகச் செல்கள் பிரிந்து பெருகின்றது. இந்தச் செல் பிரிவு நமக்குள் ஒரு வித சுறுசுறுப்பை உண்டாக்குகிறது.*
* *சிலருக்கு மயக்கமும் வேறு சிலருக்குக் களைப்பும் வருவதற்கு மனநிலையே காரணம். உடல் நிலை அல்ல.*
* *இரத்தம் எடுக்கப்படுவதற்கு முன் கொடுப்பவர் உடல் எடை, இரத்த அழுத்தம், ஆகியவை பரிசோதிக்கப்பட்டு தகுதி எனத் தெரிந்தால்தான் இரத்தம் எடுக்கப்படும்.*
* *நாம் இரத்தம் வழங்கிய 21 நாட்கள்வரை ரத்த வங்கியில் சேமித்து வைக்க வசதி உண்டு.*
* *மூன்று மாதத்திற்கு ஒருமுறை இரத்த தானம் அளிக்கலாம்.*
* *இதற்கு மேலாக, ஆபத்துநிலையிலிருந்தும் ஓர் உயிரைக் காப்பாற்றித் தரும் இரத்ததானத்தால் கிடைக்கும் மன மகிழ்ச்சி அதற்கு மேலே...*

*ஜி. தவப்பிரியா, ஜி எழிலன்.*



# இவ்வளவு நீளமா?

பெண்களுக்கு அழகு, நீளமான கூந்தல்தான் என்று சொல்வார்கள். இப்போது தலைமுடியைக் கட்டையாக வெட்டிக்கொள்வது பார்ப்பதற்கு அழகாக இருக்கும் என்றும், பரமாரிப்பதற்கு இலகு என்றும் பெண்கள் நினைக்கின்ற காலமாக மாறிவிட்டது. ஆனாலும், ஜியா ஆய் பெங்க் என்ற இந்த 33 வயது சீனப் பெண்மணி தன் தலைமுடியை 1.92 மீட்டர் நீளத்துக்கு வளர்த்துள்ளார்.

சீனாவில் பொதுவாகப் பெண்கள் கூந்தல் வளர்ப்பதில்லை. ஆண்களைப்போல் கட்டையாக வெட்டிக் கொள்வார்கள். ஆனால் இந்தப் பெண்ணுக்கு தன் கூந்தலை நீளமாக வளர்த்து அழகு பார்க்க வேண்டும் என்று ஆவல். அதன் காரணமாகத் தன் தலைமுடியை 1.92 மீட்டர் நீளத்துக்கு வளர்த்துள்ளார். அந்தக் கூந்தலை மிகக் கவனமாகப் பராமரித்து வருகிறார். அவருடைய கூந்தலைப் பராமரிப்பதற்கு உதவியாகப் பெண்ணொருவரையும் வைத்துக்கொண்டுள்ளார்.

# சிங்கப்பூரில் ஏமாற்றிய இலங்கைப் பெண்ணுக்குச் சிறை!

தனது கணவன் இறந்துவிட்டதாகப் பொய் கூறி கடந்த 15 வருடங்களாக சிங்கப்பூரில் மூன்று காப்புறுதி நிறுவனங்களிடம் இருந்து 3 இலட்சத்து 30 ஆயிரம் சிங்கப்பூர் டொலர் (ஒரு கோடியே 96 இலட்சம் இலங்கை ரூபா) களைப் பெற்று மோசடி செய்த இலங்கைப் பெண் ஒருவரைப் பற்றிய செய்தியை இப்பகுதியினூடாக வாசகர்கள் அறிந்திருப்பார்கள். அப்பெண் தனது குற்றத்தை ஒப்புக் கொண்டதையடுத்து அவருக்குச் சிறைத்தண்டனை வழங்கப்பட்டடுள்ளது. கடந்த புதன்கிழமை சிங்கப்பூர் நீதிமன்றம் சிறைத் தண்டனை வழங்கித் தீர்ப்பளித்தது.

ரேணுகாதேவி சின்னத்துரை என்ற 47 வயதான இப்பெண் தனது கணவரான காந்தரூபன் சின்னத்துரை இறந்துவிட்டதாகப் பொய் கூறி மூன்று காப்புறுதி நிறுவனங்களையும் திட்டமிட்டு ஏமாற்றியதாகவும், இவருக்கு மைத்துனரான மோகனரூபன் சுப்பிரமணியம் என்பவரும் உடந்தையாகச் செயற்பட்டிருப்பதாகவும் நீதிபதி தெரிவித்தார். ரேணுகாதேவி தனது குற்றத்தை ஒப்புக் கொண்டதையடுத்து, அவருக்கு ஒரு வருடச் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது.

சிங்கப்பூரில் கார்களை வாடகைக்கு விடும் நிறுவனத்தை இயக்கிவந்த காந்தரூபன், வியாபாரத்தில் ஏற்பட்ட குறைபாடுகளையடுத்து, இலங்கைக்குத் தப்பியோடியிருந்தார். இலங்கையில் பெறப்பட்ட போலி மரணச் சாட்சிப் பத்திரத்தை 1987இல் சமர்ப்பித்தே ரேணுகாதேவி, தனது கணவர் இறந்துவிட்டதாகக் கூறி காப்புறுதி நிறுவனங்களை ஏமாற்றத் தொடங்கினார் என்று நீதிமன்றத்தில் தெரிவிக்கப்பட்டது. கடந்த 15 வருடங்களாக ரேணுகாதேவிக்கும் கணவருக்கும் இடையே தொடர்ச்சியான தொடர்பும் இருந்து வந்தது. அவர்கள் இருவரும் இலங்கையில் மறுமணமும் செய்து கொண்டார்கள். கணவனின் பெயரை மாற்றிக் கூறியே இந்த மறுமணம் இடம்பெற்றிருக்கிறது என்று நீதிமன்ற ஆவணங்கள் மூலம் தெரியவந்திருக்கிறது.

கணவர் இறந்ததாகக் கூறப்பட்ட 15 வருடகால இடைவெளிக்குள் 1996 மார்ச் 6ல் இப்பெண்ணுக்கு அவர் மூலமாகவே குழந்தையொன்றும் இருந்தது என்று தெரிவிக்கப்படுகிறது. கணவர் இறந்ததாகக் கூறப்பட்ட விவகாரத்தில் ஒரு மோசடியொன்று நடைபெற்றுக் கொண்டிருக்கிறது என்பதை 2003ல் வழக்கறிஞரான வி.ஆர்.யோகேந்திரன் அறிந்து கொண்டார். தனது சகோதரரின் பெயரிலான காப்புறுதிப் பத்திரங்களுக்குரிய பணத்தைப் பெறுவதற்காக இந்த வழக்கறிஞரின் உதவியை நாடியிருந்தார். காப்புறுதிப் பணமும் பெறப்பட்டது. சந்தேகம் ஏற்பட்டதையடுத்து வழக்கறிஞர் யோகேந்திரன் 2003 யூனில் காவற்துறையினரிடம் செய்த முறைப்பாடொன்றையடுத்தே விசாரணைகள் முடுக்கி விடப்பட்டிருந்தன.

## பலசும் பத்சும்

# மதுபோதையில் நகர மேயரைச் சுட்டுக் கொன்ற பாதிரியார்!

தென் அமெரிக்காவில் உள்ள மெக்சிகோ நாட்டில் சால்பாட் லாஹாக் நகரில் மத விழாவையொட்டி, ஒரு விருந்து நடந்தது. இதில் நகர மேயர் லோரென்சோ ரூய்ஸ், கிறிஸ்தவ பாதிரியார் ஹைரென்சோ கிநல்லர் ஆகியோர் கலந்து கொண்டனர். 2 பேரும் மது அருந்தினர். அப்போது 2 பேருக்கும் இடையே வாக்குவாதம் ஏற்பட்டது. அப்போது பாதிரியார் துப்பாக்கியை எடுத்து மேயரைச் சுட்டுக் கொன்று விட்டார்.



# சாதனைக்காக ஒரு சோதனை!

கின்னஸ் உலக சாதனைக்காக 5000 சிகரெட்டுக்களை ஒரே தடவையில் ஒருவர் புகைப்பதைப் படத்தில் காண்கின்றீர்கள். இந்நிகழ்வு கடந்த ஆண்டு மே மாதம் 2ம் திகதி இடம்பெற்றது எனக் கனேடிய இணையத்தளம் தகவல் ஒன்றை வெளியிட்டுள்ளது. கின்னஸ் சாதனைக்காக இவ்வாறான உயிருக்கு ஆபத்து விளைவிக்கும் போட்டிகளில் ஈடுபடுவதற்கு இப்போது தடை விதிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.



# கைக்குள் அடங்கிய பியானோ!

ஜப்பானில் உள்ள யமனோ மியூசிக் கோ என்ற நிறுவனம் கையடக்கமான பியானோ இசைக்கருவி ஒன்றைத் தயாரித்துக் கடந்த 19ம் திகதி ரோக்கியோவில் அறிமுகப்படுத்தியுள்ளது. இதன் மொத்த நீளம் 4 மில்லி மீற்றர் (16 இஞ்ச்), 850 கிராம் சிலிகன் இறப்பரைக் கொண்டு இதன் கீ போர்ட் தயாரிக்கப்பட்டுள்ளது. இதன் தற்போதைய விலை 100 ஈரோக்கள் (13,440 யென்) மட்டுமே!


# அமெரிக்க விமானத்தைக் கடத்தியவருக்கு 160 ஆண்டுகள் சிறை

பாகிஸ்தானில் உள்ள கராச்சியில் அமெரிக்க விமானத்தை 1986ம் ஆண்டு கடத்தியவருக்கு 160 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது. மும்பையில் இருந்து நியார்க் நகருக்குப் புறப்பட்ட அந்த விமானம் கராச்சியில் இறங்கியபோது, ஜோர்டான் நாட்டைச் சேர்ந்த செய்து ஹாசன் அப்த் லத்தீப் சபாரினியும், அவரது கூட்டாளிகள் 3 பேரும் சேர்ந்து விமானத்தைத் தங்கள் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர்.

விமானிகள், அறை ஜன்னல் வழியாக குதித்து தப்பிவிட்டனர். இதனால் விமானம் பறக்க முடியாத நிலை ஏற்பட்டது. சைப்ரஸ் நாட்டில் சிறை வைக்கப்பட்டுள்ள பாலஸ்தீனியர்களை விடுவிக்க வேண்டும் என்று கடத்தல்காரர்கள் கோரினர். இதற்குப் பாகிஸ்தான் அதிகாரிகள் சம்மதிக்காததால், கடத்தல்காரர்கள் பயணிகளை நோக்கி துப்பாக்கியால் சுட்டனர்.

இதில் 2 அமெரிக்கர்கள் மற்றும் இந்தியர்கள் சிலர் உட்பட 21 பேர் பலியானார்கள். 72 பேர் காயம் அடைந்தனர்.

சபாரினியும் அவன் கூட்டாளிகளும் பாகிஸ்தான் சிறையில் அடைக்கப்பட்டனர். 15 ஆண்டுகள் சிறை வாசத்துக்குப்பிறகு சபாரினி விடுதலை செய்யப்பட்டார். 2001ம் ஆண்டு செப்டம்பரில் நடந்த தாக்குதலுக்குப் பிறகு சபாரினி மீண்டும் அமெரிக்காவில் பிடிக்கப்பட்டார். அவர் மீது கொலை, விமானக் கடத்தல் உள்பட 76ம் சட்டப் பிரிவுகளின் கீழ், 95 குற்றங்களுக்காக விசாரணை நடத்திய நீதிபதி எம்மெட் சல்லிவன், சபாரினிக்கு 160 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதித்தார்.



# இணைய வலம்

## ஓரே வரி பலர்...

மூளை என்பது அற்புதமான ஓர் உறுப்பு. காலையில் எழுந்ததிலிருந்து அது அலுவலகத்துக்குச் சென்று சேரும் வரைக்கும் வேலை செய்வதை நிறுத்துவதே இல்லை. – ராபர்ட்ஃப்ரோஸ்ட்

எல்லா வெற்றிகரமான பெண்களுக்கும் பின்னால் ஓர் ஆண் இருக்கிறான் ஆச்சரியப்பட்டுக்கொண்டு. – யாரோ

பெரும்பாலான மக்கள் உயிருடன் இருப்பதற்கு ஒரே காரணம் அவர்களைச் சுடுவது சட்டத்துக்குப் புறம்பானது என்பதாலேயே. – யாரோ

கஷ்டத்தில் இருக்கும் ஒருவனுக்கு உதவி செய்தால், அவன் உன்னை நினைத்துக்கொள்வான், அவன் மீண்டும் கஷ்டத்தில் இருக்கும்போது.
– யாரோ


**அமெரிக்காவில் ஜனநாயகக் கட்சிக்காரர்கள் கடினமாக உழைத்துப் பல ஏழைகளைப் பணக்காரர்களாக ஆக்குகிறார்கள். பணக்காரர்களாக ஆனதும் அவர்கள் குடியரசுக் கட்சியில் சேர்ந்துவிடுகிறார்கள்.**

## மொட்டை போடத் தடை ஜெயலலிதா திடீர் உத்தரவு!

தினகப்ஸா சிறப்பிதழ்
-வழங்குபவர் சொதப்பப்பா -

### அழகைக் கெடுக்கிறது மொட்டை - போட வருகிறது தடை!

இன்று காலை கண்விழித்த ஜெயலலிதா தன் மாளிகையில் பணிபுரியும் ஒருவர் சமயபுரத்தில் மொட்டை போட்டுக்கொண்டு வந்திருந்ததைக் கண்டு பெரும் கோபங்கொண்டதாக நம்பத்தகாத வட்டாரங்களிலிருந்து தகவல் வந்தது.



அதனால், இன்று காலை முதல் வேலையாக எல்லாத் தமிழகக் கோவில்களிலும், மொட்டை போடும் வழக்கத்தை நிறுத்தத் தமிழகப் பொலிசுக்கு ஆணை பிறப்பித்தார். இந்த அவசரச் சட்டத்தின்படி, கோவில்களில் மொட்டை போடும் வழக்கம் உடனடியாய் நிறுத்தப்படும் என்று தெரிகிறது. இதனால் நாவிதர்கள் சங்கம் பெரும் கோபம் கொண்டிருப்பதாய் நம்பத்தகாத வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

சமீபத்தில் ஜெயலலிதா நன்றாக இருக்கவேண்டும் என்று கோவில்களில் மொட்டை போடும் எம்.எல். ஏக்கள் இதற்கு விலக்கு என்றும் சட்டம் திருத்தப்பட்டிருப்பதாக நம்பத்தகாத செய்தி வட்டாரங்களிலிருந்து செய்தி வந்திருக்கிறது.

### மொட்டை போட்டதற்காகச் சோ கைது!

பொலிஸ்காரர்கள் இன்று மாலை சோவின் வீட்டைத் தட்டி மொட்டை போட்டதற்காக அவரைக் கைது செய்தார்கள் என்று நம்பத்தகாத வட்டாரங்கள் தெரிவித்தன. 'இந்த மொட்டை எனக்கு கடவுளே போட்ட மொட்டை. நானாகப் போட்ட மொட்டை இல்லை' என்று சோ அவர்கள் கூறியதைக் கேட்ட பொலிஸ்காரர்கள், 'இதே காரணத்தைத்தான் எல்லா மொட்டைகளும் கூறுகிறார்கள்' என்று பதில் கூறினார்கள். 'என்னுடைய மொட்டைக்கு என்ன காரணம் என்று எனக்கே தெரியாது, அந்தக் கடவுளுக்கும் தெரியாது, குருமூர்த்திக்குத்தான் தெரியும். இந்திய பாரம்பரியத்தில் மொட்டையின் இடம் பற்றி பத்து வாரத்துக்கு ஒரு தொடர் குருமூர்த்தி எழுதுவார். அதன்பின் என்னைக் கைது செய்யுங்கள்' என்று சோ கேட்டுக்கொண்டதாக நம்பத்தகாத வட்டாரங்கள் தெரிவித்தன.

## 2004ம் வருட ராசிபலன்

**மேஷம்**

***மற்றவர்களுக்காகவே வாழும் மேஷராசி அன்பர்களே,***

இவ்வாண்டில் எதையும் துணிவுடன் எதிர்கொள்ளும் ஆற்றல் வருவதால், இதுவரை இந்திய அரசியல்வாதிகளின் ஊழலைக் கண்டு மனம் வெதும்பிக்கொண்டிருந்தது நின்று, சுரண்டினா சுரண்டிட்டுப் போறானுங்க என்ற நிலை-க்கு வந்துவிடுவீர்கள். அத்தோடு மற்றவர்களுக்கு உங்கள் சொத்தையும் சோத்தையும் ஓட்டையும் தாராளமாகக் கொடுப்பதால், உறவினர்கள், நண்பர்கள், எம்.எல்.ஏ.க்கள், எம்.பி.கள் புகழும் அடைவீர்கள்.

இளைய சகோதர சகோதரிகளால் சற்று மனக்கசப்பு ஏற்படலாம். உங்களது தாராள மனதை மனைவியிடம் சற்று அடகுவைத்து விட்டு ஜாமீன் கையெழுத்து என்பதை இந்த வருடம் மறந்துவிடுங்கள். அப்போதுதான் கணவன் மனைவியிடையே ஒற்றுமை அதிகரிக்கும். இல்லையேல் கரண்டியும் தட்டுமே பறக்கும். காசு சேமிக்கும் வழியைப் பாருங்கள்.

நல்லவேளை, ஐந்து வருடம் கழித்துத்தான் உங்களை அரசியல்வாதிகள் கண்டுகொள்வார்கள் என்று எண்ணவேண்டாம், இன்னும் இரண்டு வருடத்தில் அம்மா, சின்னம்மா, தாத்தா என்று எல்லோரும் உங்களையே வளைய வருவார்கள்.

***முஸ்லீம்களுக்கு***

அதிக வேலை வாய்ப்பு கிடைக்கும். நீங்கள் பயந்ததுபோல ஏதும் நடக்காது. எதிரிகளைக் காட்டிலும் நண்பர்கள் என்று சொல்லிக் கொண்டு வருபவர்களிடம் ஜாக்கிரதையாய் இருங்கள். பலன் பெற்ற பின்னால், அந்தர் பல்டி அடித்து, அமைச்சர் பதவி பெற்று உங்களை அம்போ என்று விட்டுவிடுவார்கள். அதற்கும் ஆயிரம் விளக்கம் தயாராய் வைத்திருப்பார்கள். செவ்வாய்க்கிழமை நெய்விள-க்கு ஏற்றி மாரியம்மனை வணங்கி வரும் பக்தர்களுக்கு நீர்மோர், பானகம் வழங்கினால் பனிபோல வந்த துன்பம் பனிபோலவே நீங்கிவிடும்.

***கிறிஸ்துவர்களுக்கு***

தேவையில்லாத ஆடம்பரச் செலவுகளைத் தவிர்த்து கல்வியில் நாட்டம் செலுத்தவும். முஸ்லிம்களுக்குச் சொன்ன ராசிபலன்கள் உங்களுக்கும்

பொருந்தும். ஏசுநாதரின் தியாகத்தைச் சொல்லி, மற்றவர்களுக்கு எதிராகக் கொம்பு சீவுகிறவர்களை நம்பாதீர்கள். சகோதரர்களிடம் விட்டுக்கொடுத்து நடவுங்கள். அகோர வீரபத்திரன் கோவிலில் நெய்விளக்கு ஏற்றி வணங்கி வரும் பக்தர்களுக்கு மதிப்பும் மரியாதையும் அளித்து, பாவிகளே என்று அழைக்காமல், புண்ணியவான்களாய் நடத்துங்கள்.

***இந்துக்களுக்கு***

ஆயுள்ஸ்தான அதிபதி சஷ்டாஷ்டக அமைப்பில் உள்ளதால் ஆபத்து வரக்கூடிய இடங்களைத் தவிர்க்கவும். மாதா கோவிலில் மணி அடிப்பதும் நாகூர் தர்காவுக்குச் சென்று நெய்விளக்கு போட்டு வருவதும் நல்லது. இந்து என்று கர்வத்துடன் சொல்லு, என்று கொம்பு சீவும் பேர்களை நம்பாதீர்கள். அவர்கள் உங்களைக் காப்பாற்ற வரவில்லை. தம்மைக் காப்பாற்றிக் கொள்ள உங்களை உசுப்பி விடுகிறார்கள் என்ற தெளிவு வந்தால், ஞானம் கிடைக்கும். அந்த ஞானம் வந்தால் பின் வேறெது வேண்டும்?

*– பண்டிட் திருவை சொதப்பப்பா சாஸ்திரிகள்*

## சென்னைத் தமிழில் கணினி

– வைஷாலி –

*சமீபத்தில் பலர் தமிழில் கணினியைக் கட்டுவிக்கும் முயற்சியில் ஈடுபட்டிருக்கிறார்கள். அவர்கள் முயற்சி வெல்க என்று வாழ்த்துவதோடு, சென்னைத் தமிழுக்கு ஆதரவளிக்க யாரும் இல்லாதது என்னை வருத்தத்தில் ஆழ்த்தியிருக்கிறது. ஆகவே என்னுடைய சிறு முயற்சியாகச் சென்னைத்தமிழில் கணினி வார்த்தைகளை அறிமுகஞ்செய்கிறேன்.*

Open = தொற நைனா
Close = பொத்திக்கோ
View = லுக்கு உடு
Paste = ஒட்டு
Paste Special = நல்லா எச்சத் தொட்டு ஒட்டு
Save = வெச்சுக்கோ
Save as = அப்டியே வெச்சுக்கோ
Save all = அல்லாத்தையும் வெச்சுக்கோ
Find Again = இன்னோரு தபா தேடு
Move = ஜகா வாங்கு
Zoom = பெர்சா பிலிம் காட்டும்மா
Zoom out = வெளில வந்து பெர்சா பிலிம் காட்டும்மா
New = புச்சு
Old = பல்சு
Replace = இத்த தூக்கி அத்ல போட்டு அத்தத் தூக்கி இத்ல போடு
Run = ஓடு நைனா
Execute = கொல்லு
Delete = கீசிடு
Exit = உட்ரா டேய்
Compress = அமுக்கிப்போடு
Drag & hold = நல்லா இஸ்து புடி
Double click = ரெண்டு தபா அமுக்கு
Do you want to delete Selected item? மெய்யாலுமே தூக்கிறவா?
Do you want to move selected item? மெய்யாலுமே கடாசிடவா?
Do you want to save selected item? மெய்யாலுமே வச்சிக்கவா?
Abort, Retry, Ignore = இவுட்டுடு, இன்னொரு வாட்டி பாரு, தொலயுது வுடு
Yes, No, Cancel இப்ப இன்னா சொல்லிக்கிற நீ?
General protection fault அல்லாம் காலி அம்பேல்மா
Access Denied கை வச்சே, கீசிடுவேன்
Unrecoverable error தொலஞ்சது தொலஞ்சது தான்
Operation illegal பேமானி.... சாவுக்கிராக்கி.. கஸ்மாலம்

# 100வது ஆண்டில் சர்வதேச உதைபந்தாட்டச் சம்மேளனம்



21.மே 1904 உதைபந்தாட்ட உலகிற்கு புத்தொளிப் பாய்ச்சியநாள். அன்றுதான் பிரான்ஸ், பெல்ஜியம், டென்மார்க், நெதர்லாந்து, ஸ்பெயின், சுவீடன், சுவிற்சர்லாந்து ஆகிய ஏழு ஐரோப்பிய நாடுகள் ஒன்று சேர்ந்து பிரான்சின் தலைநகர் பாரிசில் சர்வதேச உதைபந்தாட்டச் சம்மேளனத்தை உருவாக்கினர். அதன் முதலாவது தலைவராக றொபேர்ட் கெறன் தெரிவாகினார். அன்றிலிருந்து உலகப்போர் நீங்கலாகக் காலத்திற்கும் காலம் பெருவளர்ச்சிபெற்று வந்துள்ளது!

23 -மே - 1904 அன்று முதலாவது கூட்டத்தில் பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த றொபேர்ட் கெறன் தலைவராகத் தெரிவுசெய்யப்பட்டார்.

01-செப்ரெம்பர் 1904ல் விதிமுறை ரீதியாகப் பலம் பெற்றது.

10-12 யூன் 1905ல் இரண்டாவது பொதுக்கூட்டத்தில் ஜேர்மனி, ஒஸ்ரியா, இத்தாலி, கங்கேரி, வேல்ஸ், இங்கிலாந்து, ஸ்கொட்லாந்து, அயர்லாந்து என்பன சர்வதேச உதைபந்தாட்டச் சம்மேளனத்துடன் இணைந்துகொண்டன.

1906ல் - பேர்ண் (சுவிஸ்) நகரில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் இங்கிலாந்தைச் சேர்ந்த டானியல் வூர்லிவூபோல் என்பவர் சர்வதேச உதைபந்தாட்டச் சம்மேளனத் தலைவரானார்.

1908ல் - நான்காவது சர்வதேச கோடைகால ஒலிம்பிக் போட்டியில் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டி நடாத்தப்பட்டது.

1912ல் - ஐரோப்பியப் பிராந்தியத்திற்கு அப்பாற்பட்ட முதலாவது நாடாக ஆர்ஜென்ரீனா இணைந்து கொண்டது.

01-மார்ச் 1921ல் பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த யூல்ஸ் றிமே புதிய தலைவரானார்.

28 -மே -1928ல் அம்ஸ்ரர்டாம் (நெதர்லாந்து) நகரில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் உலகக் கிண்ண சுற்றுப்போட்டியினை நடாத்துவது எனத் தீர்மானிக்கப்பட்டது.

1929ல் - பார்சலோனா (ஸ்பெயின்) நகரில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் முதலாவது உலகக்கிண்ணத்தை நடாத்தும் நாடாக, உருகுவே தெரிவாகியது.

1930ல் - முதலாவது உலகக்கிண்ணம் உருகுவேயில் நடைபெற்றது. அதனை உருகுவே வெற்றிகொண்டது.

1932ல் - சர்வதேச உதைபந்தாட்டச் சம்மேளன நிர்வாக நிலையம் சூரிச் நகரில் (சுவிஸ்) நிறுவப்பட்டது. அதன் முதலாவது செயலாளர் நாயகமாக ஜேர்மன் நாட்டைச் சேர்ந்த இவோ சிறிக்கர் தெரிவுசெய்யப்பட்டார்.

01 -யூலை -1946ல் உலகக்கிண்ணம் என்பதற்குப் பதிலாக யூல்ஸ்றிமே கிண்ணம் என்ற பெயரில் சுற்றினை நடாத்துவது என்று லக்சம்பேர்க் இல் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

1946 - 1921 சர்வதேச உதைபந்தாட்டச் சம்மேளனத்தைவிட்டு விலகிச் சென்ற பிரித்தானியா 25 ஆண்டுகளின் பின்னர் மீண்டும் இணைந்துகொண்டது.




**ஜே. ஜே**

இந்நிகழ்வினைக் கொண்டாடும் முகமாகப் பிரித்தானியா - ஐரோப்பியத் தெரிவு அணிகளுக்கிடையே சிநேகபூர்வமான ஒரு போட்டி கிளாஸ்கோவில் நடைபெற்றது. அதில் பிரித்தானியா 6:1 எனும் நிலையில் வெற்றிபெற்றது.

21-யூன் -1954ல் பேர்ண் நகரில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் எண்பது வயதுடைய அன்றைய தலைவரான யூல்ஸ்றிமே ஓய்வுபெற்றதனை அடுத்து, முதலாவது சர்வதேச உதைபந்தாட்ட சம்மேளன கௌரவ தலைவரானார்.

1974ல் -அன்றைய தலைவரான இங்கிலாந்து நாட்டைச் சேர்ந்த ஜோ கவெலென்கோ தலைவரானார். இவரே இப்பதவியை வகித்த முதலாவது ஐரோப்பியர் அல்லாதவர் ஆவார்.

1982ல் - உலகக்கிண்ண இறுதிச் சுற்றிற்கு தெரிவாகும் நாடுகளின் எண்ணிக்கை பதினாறில் இருந்து இருபத்து நான்காக உயர்வு பெற்றது.

1998ல் - உலகக்கிண்ண இறுதிச் சுற்றிற்கு தெரிவாகும் நாடுகளின் எண்ணிக்கை இருபத்து நான்கில் இருந்து முப்பத்திரண்டாக உயர்வு பெற்றது.

2002ல் - ஆசியப் பிராந்தியத்தில் நடைபெற்ற முதலாவது உலகக்கிண்ணம். உலகக்கிண்ணச் சரித்திரத்தில் முதல் முறையாக இரண்டு நாடுகள் (ஜப்பான் -தென்கொரியா) இணைந்து நடாத்தின.

15 -மே - 2004 அன்று - ஆபிரிக்கப் பிராந்தியத்திற்கு முதல் முறையாக உலகக்கிண்ணச் சுற்றினை நடாத்தும் வாய்ப்பு அளிக்கப்பட்டது. (தென்னாபிரிக்காவில் 2010 இல் நடைபெறவுள்ளது)


ஏழுநாடுகளுடன் ஆரம்பமாகிய சர்வதேச உதைபந்தாட்டச் சம்மேளனம் இன்று இருநூற்றி நாற்பத்தைந்து நாடுகளைத் தன்னகத்தே கொண்டுள்ளது (இறுதியாகச் சேர்ந்த நியூகலிடோனியா உட்பட) உதைபந்தாட்டத்தின் மேன்மையை மட்டுமே கருத்திற் கொண்டு செயற்படும் இந்தச் சம்மேளனம் பொருளாதார ரீதியாக நொடிந்துபோன எத்தனையோ நாடுகளிற்கு உதைபந்தாட்ட வளர்ச்சியை மையப்படுத்தி நிதியுதவி அளித்து வருவதோடு, ஐ.நா. சபையின் சிறுவர் பராமரிப்பு நிதியத்திலும் பங்குகொண்டுவருகிறது. அத்தோடு வீரர்களினதும், நாடுகளினதும் தனித்துவத்திற்கும் மதிப்பளித்துவருகிறது.

நம்மவர்களும் இவர்களுடன் கைகோர்த்துச் செல்லும் காலம் விரைவில் வரவேண்டும் என வாழ்த்துக்கூறுவோம்.

**ரெனிஸ்**


## மீண்டும் களமிறங்கும் நவரத்திலோவா

**1994**ம் ஆண்டு முதல் ரெனிசில் இருந்து ஓய்வு பெறுவதாக அறிவித்திருந்த முன்னாள் உலகதரம் 1 வீராங்கனை அடுத்த வாரம் ஆரம்பமாகும் பிரான்சின் றோலண்ட் கறோஸ் சுற்றில் கலந்துகொள்ள உள்ளார். 47 வயதுடைய இவர் இருபது ஆண்டுகளிற்கு முன்னர் தனது இறுதி வெற்றியை இச்சுற்றில் பெற்றிருந்தார். இவ்வாண்டு அமெலியா ஐலண்ட், சால்ஸ்ரொன் ஆகிய சுற்றுக்களில், முதற் சுற்றிலேயே வெளியேற்றப்பட்டார். ரெனிஸ் மீது கொண்ட தணியாத காதலால் மீண்டும் பாரிஸ் மண்ணை முத்தமிட முன்வந்துள்ளார். கடந்த ஆண்டு இரட்டையர் (கலப்பு) ஆட்டத்திலும் நவரத்திலோவா பங்குபற்றியிருந்தார்.



## முப்பதாவது ஒலிம்பிக் போட்டிகளை நடாத்த ஐந்து நகரங்கள் முன்னணியில்

பாரிஸ், மட்றிட், இலண்டன், நியூயோர்க், மொஸ்கோ ஆகிய நகரங்கள் 2012ம் ஆண்டு நடைபெறவுள்ள முப்பதாவது கோடைகால ஒலிம்பிக்போட்டிகளை நடாத்துவதற்கான, இறுதிச் சுற்றிற்குத் தெரிவாகியுள்ளன. கடந்த 18.05.2004 அன்று சுவிஸ் நாட்டின் லவ்சான் நகரில் நடைபெற்ற சர்வதேச ஒலிம்பிக் சபையின் உயர்மட்டக்குழுக் கூட்டத்தில் மேற்கண்ட நகரங்கள் ஒருமனதாகத் தெரிவாகின. முதல் விண்ணப்ப முடிவு நாளான 15 - ஜனவரி 2004 வரை பாரிஸ், மட்றிட், இலண்டன், நியூயோர்க், மொஸ்கோ, லெப்சிக், ஸ்தம்புல், கவானா, றியோடு ஜெனறியோ ஆகிய ஒன்பது நகரங்கள் விண்ணப்பித்திருந்தன. இவ்வொன்பது நகரங்களிற்கும் மார்ச், ஏப்பிரல் மாதங்களில் விஜயத்தினை மேற்கொண்ட சர்வதேச ஒலிம்பிக் சபையின் மதிப்பீட்டுக் குழுவினர் தமது அறிக்கையினைச்



சமர்ப்பித்திருந்தனர். அதனடிப்படையில் லெப்சிக், ஸ்தம்புல், கவானா, றியோடு, ஜெனறியோ என்பனவற்றின் மதிப்பீட்டுப் பெறுபேறுகள் திருப்திகரமாக இல்லாமையால் அவை தவிர்ந்த ஏனைய ஐந்து நகரங்களின் விண்ணப்பங்களும் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளன.

தெரிவான இந்த ஐந்து நகரங்களும் தமது இறுதி விண்ணப்பத்தினை எதிர்வரும் 15.11.2004 இற்கு முன்னதாகச் சமர்ப்பிக்கவேண்டும். அவ்விண்ணப்பத்தில் உள்ள இருபத்தைந்து வினாக்கொத்துக்களும் பதிலளித்தல் வேண்டும். இவற்றில் போட்டியினை நடாத்துவதற்கு அரசாங்கம் வழங்கும் ஆதரவு, விளையாட்டு இடங்கள், ஒலிம்பிக் நகரம் அமைய இருக்கும் இடம், சுற்றாடல் தரம், இருப்பிடவசதிகள், போக்குவரத்து, பாதுகாப்பு, விளையாட்டுக்களை நடாத்தியதில் கடந்தகால அனுபவம், போட்டியினை நடாத்துவதற்கு செலவிட உத்தேசித்துள்ள நிதி விபரம், மக்களின் ஆதரவு போன்றன முக்கிய வினாக்களாக அமையும். இவ்விண்ணப்பதாரர்களுக்கு இவ்வாண்டு எதென்ஸ் நகரில் நடைபெறும் இருபத்தெட்டாவது கோடைகால ஒலிம்பிக்போட்டிகள் நன்மை பயக்கும். அவர்களது தயார்ப்படுத்தல் முறை நல்ல பலனை அளிக்கலாம் என்பதே அதன் பொருள். இவ்விண்ணப்பங்களைச் சர்வதேச ஒலிம்பிக் சபையின் மதிப்பீட்டுக்குழு அறிந்துகொள்ளும் அதே சமயம், நகரங்களிற்கும் நேரடியாகச் சென்று தகவல்களைப் பெற்று தமது அறிக்கையினை 2005ம் ஆண்டு யூன் மாதம் முதல்வாரத்தில் சர்வதேச ஒலிம்பிக் சபையிடம் சமர்ப்பிக்கும். யூலை மாதம் 2005ம் ஆண்டு சிங்கப்பூரில் நடைபெறும் சர்வதேச ஒலிம்பிக் சபையின் 117வது கூட்டத்தொடரில், தகுதிவாய்ந்த அங்கத்தவர்களிடையே நடைபெறும் வாக்கெடுப்பில் முப்பதாவது கோடைகால ஒலிம்பிக் போட்டியினை நடாத்தும் நாடு தெரிவாகும்.

# மண்ணின் பெருமதி

திரலோன்

கடந்த இரண்டு வருடத்துக்கு மேலாகத் தொடரும் சமாதான காலத்தில் நமது தாயகத்தில் காணியின் விலை எக்கச்சக்கமாக ஏறிவிட்டது.

முன்பு யாழ்ப்பாணத்தில் சராசரியாக ஒரு இலட்சம் முதல் இரண்டு இலட்சம் வரை இருந்த ஒருபரப்புக் காணி இப்போது, 15 இலட்சம் 20 இலட்சம் என்று திடீரென்று விலையேறிவிட்டுது.

அதேபோல வன்னியில் குறிப்பாகக் கிளிநொச்சியில் ஒரு ஏக்கர் ஒரு இலட்சமாக இருந்த காணியின் விலை இப்போது ஒரு பரப்பு ஒரு இலட்சமாகிவிட்டது.

நமது மக்கள் இப்போது அதிகளவுக்கு நிலவுடமையாளர்களாக மாறத்தலைப்பட்டதே இதற்குக் காரணமாகும்.

நிலம் இல்லாத ஒருவன் நில உடமையாளனாக மாறுவது ஒரு வகை. ஏற்கனவே நிலம் உள்ளவன் மேலும் மேலும் நிலத்தை வாங்கிச் சொத்துச் சேர்ப்பது இன்னொரு வகை.

இந்த இரண்டாவது வகைச் செயற்பாடு தான் இப்பொழுது நமது தாயகத்திலே நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

அதிலும் அக்கம் பக்கத்திலுள்ள காணிகளை எல்லாம் வாங்குவதன் மூலம் ஊரில், சமூகத்தில் தங்களது அந்தஸ்தை உயர்த்திக் காட்டுவதற்குப் பலர் முயல்கின்றனர்.

இன்னும் சிலர் தங்கள் பாட்டன், பூட்டன், முப்பாட்டன் காலத்திலிருந்து வழ்ந்துவந்த பாரம்பரிய



நிலத்தைக் கிராமத்தை விட்டுவிட்டு, நகரங்களில் குடியேற விரும்புகின்றனர். இதற்காக நகரப் பகுதிகளில் இருக்கும் காணிகளுக்கு எவ்வளவு விலை கொடுத்தும் வாங்குவதற்கு அவர்கள் தயாராக இருக்கின்றனர்.

இங்கே புலம் பெயர்ந்த நாடுகளில் இருப்பவர்கள் கூட, யாழ்ப்பாணம் போன்ற நகரங்களில் காணி வாங்கி வீடு கட்டிவிடுவதை அல்லது வசதியான வீட்டுடன் காணி வாங்கிவிடுவதை இப்போது ஒரு வழக்கமாகக் கொண்டிருக்கிறார்கள்.

இவை தான் காணி விலை எக்கச்சக்கமாக ஏறியதற்கான காரணங்களாகும்.

இந்தக் காணி விடயம் யாழ்ப்பாணக் குடாநாட்டின் சமூக அமைப்பைப் பொறுத்த வரை அதன் அசைவியக்கத்தில்- இருப்பில் சில தாக்கங்களை ஏற்படுத்தியிருப்பதும் உண்மை.

சாதியக் கட்டமைப்பு இறுக்கமாக இருக்கும் யாழ்ப்பாணக் குடாநாட்டில் முன்பு எல்லோரும் எல்லா இடத்திலும் காணி வாங்க முடியாது. எந்தெந்தச் சாதிகளுக்கு எந்தெந்த இடம் ஒதுக்கப்பட்டிருந்ததோ அந்தந்த இடத்தில்தான் அவர்கள் காணி வாங்க முடியும்.

ஆனால், இப்போது பெரும்பாலான நகரப் பகுதிகளில் பணம் இருந்தால் எவரும் எங்கேயும் காணி வாங்க முடியும்.

இந்த விடயத்தில் இது வரவேற்கத்தக்க மாற்றம் என்று பாராட்டலாம்.

மறுபுறத்தில் பணத்தை அள்ளி வீசி, காணிகளை விலையேற்றிவிடும்போது, அங்கே அது ஒரு 'பாரிய சமூக ஏற்றத்தாழ்வை' உருவாக்கி விட்டிருப்பதையும் கவனத்தில் கொள்ள வேண்டும்.

அதாவது பணம் இல்லாவிட்டால் அவர்கள் பிணம் என்ற நிலை தான் இன்று யாழ். குடாநாட்டில் உள்ளது. வெளிநாட்டுத் தொடர்பு இல்லாதவர்கள் இருக்கிற காணியை விற்கவேண்டிய நிலைக்குத் தள்ளப்படுவுதும்,போர் அனர்த்தங்கள் மற்றும் சிறீலங்கா படையினரின் அதியுயர் பாதுகாப்பு வலையங்களால் தமது வீடுகளை இழந்த ஏழை மக்கள் இன்னும் இரவல் காணியில், இரவல் வீட்டில் ஒண்டி வாழ வேண்டியவர்களாகவே இருக்கிறார்கள். காணிகளைப் பொய் சொல்லி ஏமாற்றி விற்கும் தரகர் கூட்டம் ஒன்றும் இப்போது உருவாகிவிட்டது. கிராமப்புறங்களில் காணித் தகராறுகளும் எல்லைச் சண்டைகளும் அதிகரித்துவிட்டன.

குடாநாட்டு மக்கள் பழையபடி காணிச் சண்டைகளுக்காக நீதிமன்றப் படியேற ஆரம்பித்து விட்டனர்.

தற்போது கிளிநொச்சிக்கும் இந்த நோய் தொற்ற ஆரம்பித்துவிட்டது.

காணி வாங்குவது ஒன்றும் பிழையான விடயம் இல்லை. ஆனால் சொத்துச் சேர்ப்பதற்குக் காணி வாங்குகின்றோம் என்று சொல்லிக் கொண்டு, எமது தாய் மண்ணை பணத்தை வைத்து அளவிடுவதும் அந்த மண்ணை கையகப்படுத்துவதற்குப் பணத்தை விளையாடவிடுவதும் விரும்பத்தக்க ஒருவிடயமல்ல.

அண்மையில் கிளிநொச்சி கரடிப்போக்குச் சந்தியில் நடந்த மாலதி படையணியினரின் 'வேராகி விழுதுமாகி' நூல் வெளியீட்டு விழாவுக்குச் சென்றிருந்தபோது, அங்கு வந்திருந்த பெண் போராளிகள் சில தகவல்களை வெளியிட்டார்கள்.

1998ம் ஆண்டு கிளிநொச்சி நகரை மீட்பதற்கான ஓயாத அலைகள் இரண்டு சமர் நடந்து கொண்டிருந்த வேளை...

கரடிப்போக்குச் சந்திப்பகுதியில் நிலைகொண்டிருந்த படையிரை விரட்டியடிப்பதற்காக மகளிர் படையணி ஒன்று, உருத்திரபுரம் பகுதியிருந்து முன்னேறி வந்து கொண்டிருக்கிறது...

எதிரிப்படையினரின் எண்ணிக்கை பல்லாயிரக் கணக்கில்...

போராளிகளின் எண்ணிக்கையோ நூற்றுக் கணக்கில்...



எதிரி ஆட்லெறிகள், மோட்டார்கள், டாங்கிகள் என்று கனரக ஆயுதங்களைப் பயன்படுத்திக் குண்டு மழை பொழிந்து கொண்டிருக்கிறான். சண்டையோ மிகப் பெரிய சண்டை... அந்தக் கரடிப்போக்குச் சாலையில் முன்னேறிச் சென்ற பெண் போராளிகள், எதிரியின் குண்டு மழையில் சிக்கிச் சாவைத் தழுவிக்கொள்கிறார்கள்...

பின்னால் சென்ற போராளிகள் தங்களுக்கு முன்னால் சென்றவர்கள் சாவைத் தழுவி மண்ணை முத்தமிட, அதைப் பார்த்துப் பார்த்து அவர்களது உடல்களைக் கூட அப்புறப்படுத்த நேரமில்லாமல்

*மறுபுறத்தில் பணத்தை அள்ளி வீசி, காணிகளை விலையேற்றிவிடும்போது, அங்கே அது ஒரு 'பாரிய சமூக ஏற்றத்தாழ்வை' உருவாக்கி விட்டிருப்பதையும் கவனத்தில் கொள்ள வேண்டும்.*

முன்னேறுகின்றார்கள்...

சண்டை ஓய்வின்றித் தொடர்கிறது...

ஒரு கட்டத்தில் விரல் விட்டு எண்ணக் கூடிய பெண் போராளிகளே அந்த முன்னேறிச் சென்ற அணியில் எஞ்சுகிறார்கள்...

அவர்களுக்குப் பின்னால் ஒரு முன்னூறு நானூறு மீட்டர்களில் போராளிகளின் இன்னொரு தாக்குதல் அணி மோட்டார்கள், இன்னும் கனரக ஆயுதங்களுடன் முன்னேறத் தயாராகிக் கொண்டிருக்கிறது..

முன்னேறிச் சென்ற போராளிகளுக்கு இரண்டு வழிகள் தான் இருந்தன.



ஒன்று, தொடர்ந்து போரிட்டுச் சாவை அணைத்துக் கொள்வது... மற்றது, பின்வாங்கித் தப்பிச் செல்வது...


அந்த அணிக்குத் தலைமை தாங்கிய பெண்பேராளி இது பற்றி மற்றவர்களைக் கேட்கிறாள்...

எல்லோரும் ஒருமித்த குரலில் சொல்கிறார்கள்...

'நாங்கள் பின்வாங்கக் கூடாது...'

(தொடர்ச்சி 24ம் பக்கம்)


நேசன் Cash and Carry



இலங்கை, இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட உணவுப் பொருட்கள் கடலுணவு வகைகள் உடன் மரக்கறிவகைகள் தொலைபேசி அட்டைகள் மற்றும் தமிழ் மக்களுக்குத் தேவையான அனைத்துப் பொருட்களையும் மிக மலிவான விலையில் பெற்றுக் கொள்ளலாம்.

இலங்கை இந்தியா பசுமையான மரக்கறி வகைகள், கடல் உணவு வகைகள், பதப்படுத்தப்பட்டுள்ள உணவுகள், பழவகைகள்,

V.D.O C.D க்கள் விற்பனைக்கும், வாடகைக்கும் மற்றும் உங்களுக்கு தேவையான பொருட்களையும் ஒரே கூரையின் கீழ் பெற்றுக்கொள்ளலாம்.


217, The Broadway, Southall, Middiesex, UB1 1NB - Tel: 020 3574 4018 Fax: 020 8574 4035 Mobile: 07904100201

# பிச்சை வேண்டாம்..!

இலங்கையின் பாதுகாப்பு, மனித உரிமை, பன்முகத்தன்மை, ஜனநாயகம் முதலானவற்றைப் பாதுகாப்பதற்கான உதவிகளைத் தொடர்ந்தும் வழங்கப் போவதாக அமெரிக்கா அறிவித்துள்ளது. அண்மையில் சிறீலங்காவின் வெளிவிவகார அமைச்சர் லக்ஸ்மன் கதிர்காமருடன் வாசிங்டனில் இடம்பெற்ற சந்திப்பின் போது அமெரிக்காவின் தேசிய படைத்துறை ஆலோசகர் கொண்டலீனா ரைஸ் இதனைக் கூறியுள்ளார்.

இதேவேளை, அமெரிக்காவிடமிருந்து நேரடியாக உதவி பெறும் நாடுகளின் பட்டியலில் சிறீலங்காவும் தெரிவு செய்யப்பட்டிருப்பது குறித்து அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ் சிறீலங்கா ஜனாதிபதிக்கும், வெளிவிவகார அமைச்சர் லக்ஸ்மன் கதிர்காமருக்கும் தனது வாழ்த்துக்களை வேறு அனுப்பி வைத்துள்ளார். அமெரிக்க நிதியுதவி பெறவுள்ள 16 நாடுகளின் பட்டியலில் இலங்கையும் சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளதால் சுமார் நூறு மில்லியன் அமெரிக்க டொலர் நிதியுதவி சிறீலங்காவிற்குக் கிடைக்கவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

உலகத்தில் எத்தனையோ நாடுகள் வறுமைக்கோட்டிற்குக் கீழே, வாழ்வதற்கான அடிப்படை வசதிகள் கூட இல்லாமல் இருக்கின்றன. அந்நாடுகள் குறித்தெல்லாம் அக்கறைகொள்ளாத அமெரிக்கா, சிறீலங்காவிற்கு உதவுவதற்கு முன்னிற்கின்றது. தன்னுடைய நலன்களுக்காக அமெரிக்கா எதை வேண்டுமானாலும் செய்யும் என்பதற்கு, வியட்நாம்... ஆப்கானிஸ்தான்... ஈராக்... என வெளிப்படையான அதன் வரலாற்றுப் பட்டியல் நீள்கின்றது. இவற்றைத் தெரிந்திருந்தும், ஒட்டகத்திற்கு இடம்கொடுத்து, எஞ்சியிருப்பதையும் இழக்க நினைக்கிறது சிறீலங்கா அரசு. ஒருநாள்... பிச்சை வேண்டாம் நாயை பிடித்தாலே போதும் என்று அலறும்போது பார்ப்போம்.


கதிர்காமர்

# ஆகவே, காகம் கறுப்பாயின் கிளி பச்சை

விடுதலைப் புலிகளைத் தமிழ் மக்கள் தமது உண்மையான, ஏக பிரதிநிதிகளாக ஏற்றுக்கொண்டதைக் கடந்த மாதம் நடைபெற்ற சிறீலங்கா நடாளுமன்றத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பெற்ற பெரு வெற்றியும், புலம்பெயர் நாடுகளில் நடைபெற்றுவரும் பொங்கு தமிழ் எழுச்சி நிகழ்வுகளும் உறுதிப்படுத்தப்போதுமானவை. அவற்றை எல்லாம் விடச் சர்வதேசப் பிரமுகர்கள் இப்போது வன்னியின் வாசல்வரைச் சென்று விடுதலைப் புலிகளுக்குத் தமது அங்கீகாரத்தை வழங்கிவருகின்றார்கள். ஆனால், சிங்களத் தலைமைகளுக்கு அதை ஏற்றுக்கொள்வதில் இன்னும் உடன்பாடில்லை.



கதிர்காமர் என்னவென்றால், மேசையிலை மட்டும் தான் விடுதலைப் புலிகள் பிரதிநிதிகள் என்று புதிதாக ஒரு கதை புனைந்திருக்கிறார். சந்திரிகாவின் கடந்த ஆட்சியில் வெளிவிவகார அமைச்சராக இருந்து நாடு நாடாகச் சென்று புலிகளுக்கு எதிராக கதை கட்டியவருக்கு இது ஒன்றும் புதிதில்லை தான். ஆனால், தற்போதைய தனது பாத்திரத்தை அறிந்து என்றாலும் கதைத்திருக்கலாம், அதுவுமில்லை. என்ன செய்வது பழக்க தோசம். வாலை நிமிர்த்த முடியுமா..?

ஜே.வி.பி. இன்னும் ஒருபடி மேலை ஏறி, விடுதலைப் புலிகள் தமிழ் மக்களின் ஏகப்பிரதிநிதிகள் அல்லர். அவர்களை அப்படி ஏற்க முடியாது. தமிழர் தரப்பில் வேறு குழுக்களும் உள்ளன. அவர்களோடும் பேசவேண்டும் என்று கூறுகிறது. 'குழுக்கள் எல்லாம் தமிழ் மக்களின் ஏக பிரதிநிதிகள் ஆகிவிட முடியாது என்பதை எப்படித்தான் ஜே.வி.பி.க்கு விளங்க வைக்கிறதென்றுதான் புரியவில்லை. அந்தக் குழுக்களிடம் தமிழ் மக்களைப் பாதுகாக்கிறதுக்கு.... தங்களையே பாதுகாக்க முடியாமல் எதிரியிடம் போய்ச் சரணடைந்து கிடக்கிறதுகளாலை எப்படி மக்களைப் பாதுகாக்க முடியும்?' என்று நீங்கள் முணுமுணுக்கிறது சரிதான். பலம் இல்லாத வீச்சும், பல் இல்லாத பேச்சும் எதற்கும் பிரயோசனமில்லை.

வேண்டும் என்றால், இவர்களை தமிழ் மக்களின் பிரதிநிதிகள் என்று சொல்லுறதைவிட ஜே.வி.பி. தங்களின் பிரதிநிதிகளோடையும் பேசவேணும் என்று சொல்லியிருக்கலாம். ஜே.வி.பி. இவ்வாறு சொல்கிறதென்றால் அதற்கு ஈ.பி.டி.பி.யும் அறிக்கை வேறு விட்டு ஏக பிரதிநிதிகளாக ஏற்கமுடியாது என்று ஆலாபனை பாடியிருக்கு. ஜே.வி.பி.க்கும் – ஈ.பி.டி.பி.க்கும் அப்படி என்ன உறவு..!


*'காகம் கறுப்பாயின் கொக்கு வெள்ளை*
*கொக்கு வெள்ளையாயின் கிளி பச்சை*
*ஆகவே, காகம் கறுப்பாயின் கிளி பச்சை – என்ற தர்க்க நியாயப்படிப் பார்த்தால்*
*டக்ளசின் உறவு சந்திரிகா*
*சந்திரிகாவின் உறவு ஜே.வி.பி.*
*ஆகவே, ஜே.வி.பி.யின் உறவு டக்ளஸ் – என்று சொல்லிக்கொள்ளலாம்.*

## கருத்துக்களம்

# ஈ.பி.டி.பி.யின் நீலிக்கண்ணீர்


யாழ்ப்பாணத்தைச் சிங்கள இராணுவம் ஆக்கிரமித்ததன் பின்னர், தமிழர்கள் மத்தியில் போராட்ட குணத்தை மழுங்கடிக்கிற வேலையை முழுமூச்சாகச் செய்யத் தொடங்கியது. அதுவும் குறிப்பாக இளைஞர்கள், யுவதிகளை இந்தப் போராட்டத்தைப் பற்றிச் சிந்திக்க விடாமல் செய்வதில் பல்வேறு வழிகளையும் கையாண்டது. சமூகச் சீர்கேடுகளை அவர்களுக்கு அறிமுகப்படுத்திவைத்தது. இந்திய சினிமாக்களின் பாணியில் இளைஞர்கள் தங்களை 'வளர்த்துக்கொள்ள' சிங்களப்படைகள் உற்சாகமும், உதவிகளும் அளித்தன. குழுக்கள், குழுக்களாக இணைந்து இளைஞர்கள் மோதித் தங்கள் வீரதாபங்களையும் காட்டினார்கள். இதனை எட்ட நின்று சிங்களப்படை வேடிக்கை பார்த்து மகிழ்ந்தது. இவ்வாறான இளைஞர்களால் பெற்றோர்கள் தமது பெண் பிள்ளைகளுடன் வீதியில் செல்வதற்குக் கூடப் பயந்தார்கள். பாடசாலைகள், தனியார் வகுப்புகளுக்குப் போவதற்கே மாணவிகள் தயங்கினார்கள். பூனையில்லாத வீட்டில் எலி துள்ளி விளையாடுவது போல, இந்தச் சமூகச் சீர்கேடுகளைத் தட்டிக்கேட்க யாருமில்லை என்ற துணிவில் (போராட்டத்தின் பெறுமதியை உணர மறந்த இளைஞர்கள் சிலர்) துள்ளி விளையாடினார்கள். ஆனால் இவற்றுக்கெல்லாம் விடுதலைப் புலிகள் சிறீலங்கா அரசுடன் செய்துகொண்ட ஒப்பந்தம் ஆப்பு வைத்துவிட்டது.

தற்போது யாழ். குடாவில் சமூக சீர்திருத்தக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. தவறான வழியில் செல்லும் இளைஞர்கள் நல்வழிப்படுத்தப்படுகின்றனர். இதனால் பெற்றோர், மாணவிகளுக்கு இருந்துவந்த அச்சுறுத்தல்கள் அகற்றப்பட்டுள்ளன. இப்போது இவ்வாறான சீர்திருத்த குழுக்கள் தங்கள் கிராமங்களிலும் அமைக்கப்பட்ட வேண்டும் என மக்கள் வேண்டுகோள் விடுக்கவும் தொடங்கியுள்ளனர்.


டக்ளஸ்

ஆனால், சமூகச் சீரழிவுகளை விளைவித்து அதன் மூலம் குளிர்காயும் ஈ.பி.டி.பி. போன்ற தேசவிரோதச் சக்திகளுக்கு இது அச்சத்தை ஏற்படுத்தியிருக்கின்றது. யாழ். தீவுப் பகுதிகளில் கோவில்களைக் கட்டிக்கொடுத்து மக்களைச் சாதிய ரீதியாகக் கூறு பிரித்து குளிர்காய்கின்றவர்கள், யாழ். குடாவில் இளைஞர்களின் தவறான வழியைப் பயன்படுத்தித் தமது சுயலாபங்களையும் தேடிக்கொண்டார்கள். இப்போது அந்த இளைஞர்கள் திருந்தித் தங்களது கைகளைவிட்டுப்போறது கவலை. அதனால்தான், இந்த இளைஞர்களைச் சீர்திருத்துவதை, ஈவிரக்கமற்ற செயல் என்றும் ஜனநாயகமற்ற தன்மை என்றும் ஈ.பி.டி.பி. 'ஜனநாயகவாதிகள்' நீலிக்கண்ணீர் வடிக்கின்றனர்.

**– நீயூட்டன்**

வீடுகள், நிலம் மற்றும் Appartements வாங்க
மிகக் குறைந்த வட்டி வீதத்தில் கடனுதவி பெற்றுத்தரப்படும்.

**சம்யுக்தா**

*Finance & Investements*

*La Chapelle - Tél. Port.: 06 68 24 61 61*



## ஜதீஸ்வரா இசைக்குழு



உங்கள் மங்களகரமான வைபவங்களுக்கு
இசைமழை பொழிந்து
சிறப்பித்திட என்றென்றும்

இன்றே தொடர்பு கொள்ளுங்கள்:
அருமை – 0664866681
மாறன் – 0664447207
குகானந்தன் – 0664819995

Pub-Fr-506

## வெளிவந்துவிட்டது!

# அம்மா நலமா?




DVD இல்
வெளிவந்துள்ளது!



## காளி கம்பா
## ஜோதிட நிலையம்
## GOOD NEWS



இந்தியாவில் இருந்து வருகை தந்துள்ள
சாஸ்த்திரி துளசிதாசமூர்த்தி அவர்கள்
கைரேகை, சாதகம், முகநாடி,
ஆகியவற்றைக்கொண்டு துல்லியமாக
நடந்தவை, நடக்கின்றவை,
நடக்கப்போகின்றவை பற்றிய விபரங்களையும்
உங்கள் விவாக யோகம், வியாபாரம், கல்வி,
ஆரோக்கியம், குடும்ப பிரச்சனைகள்
ஆகியவை பற்றி விபரமாக அறிந்துகொள்ள
இன்றே நாடுங்கள்.

**(விசா இமிகிரேசனுக்குச் சிறப்பு பூஜை
செய்து கொடுக்கப்படும்)**

**Port: 06 33 29 72 64**

*La Chapelle Cyber Café*
*70, rue Louis Blanc - 75010 Paris*
*Tél: 01 42 09 79 91*

**திறந்திருக்கும் நேரம் காலை 10 மணியிலிருந்து
மாலை 9 மணி வரை**

## பூபாளம் பொத்தகசாலை

**உங்களுக்குத் தேவையான அனைத்துவகையான
பொத்தகங்களையும் ஒரே இடத்தில் நியாயமான
விலையில் பெற்றுக்கொள்ள இன்றே நாடுங்கள்.**

உங்களுக்குத் தேவையான நூல்களை குறுகிய
நாட்களுக்குள் பெற்றுத் தருவோம்.

*தமிழீழ விடுதலைப் பாடல்கள் அடங்கிய CDக்கள்,
மற்றும் தமிழீழத்தில் வெளியாகும் நூல்களையும்
இங்கு பெற்றுக்கொள்ளலாம்.*

### நூலகம்! நூலகம்!! நூலகம்!!!

**தமிழ் மக்களுக்கோர் இனிய செய்தி!**

பூபாளம் பொத்தகசாலையுடன் இணைந்த புதிய சேவை.
பல்துறை சார்ந்த 2000 க்கும் மேற்பட்ட
பொத்தகங்களை வாசிப்பதற்கான அரியவாய்ப்பு.
பூபாளம் நூலகத்தில் இப்பொழுதே நீங்களும் ஒரு அங்கத்தவராகி
உங்களுக்குப் பிரியமான பொத்தகங்களை வாசித்துப்
பயன்பெறுங்கள்.

## பூபாளம் Informatique


**ORDINATEUR COMPLET**
*(OCCASSION)*

சிறப்பு மலிவு விற்பனை

**à partir de 150 Euro**

**Ecran 15"**
**u Centrale PII, PIII ou Celeron**
**Claviet**
**Souris**
**Haut Parleur (150 watts)**

விபரங்கட்கு
தொடர்புகொள்ளவும்.



## பூபாளம் பொத்தகசாலை

*22, Rue Perdonnet, 75010 Paris, France.*
*Tél: 01 40 05 95 15*

? திருமதி சோனியா காந்தி இந்தியப் பிரதமர் பதவியை ஏற்காமல் தவிர்த்துக்கொண்டமை குறித்து உங்கள் கருத்தென்ன?

*கலையரசன் —சென்ரனிஸ், பிரான்ஸ்.*

! சோனியா காந்தியின் மதிப்பு உயர்ந்துள்ளதுடன் அவரின் திடீர் முடிவு இந்துத்துவ வாதிகளுக்கும் எதிர்க்கட்சியினருக்கும் பெருத்த ஏமாற்றத்தையும் கொடுத்துள்ளது. இந்தியர் அல்லாத சோனியாகாந்தி நாட்டை ஆள தகுதியற்றவர் என கங்கணம் கட்டிநின்ற இந்து தீவிரவாதிகளுக்கு இந்திய வரலாற்றிலேயே இந்து அல்லாத ஒருவரை நாட்டின் பிரதமராக்கி அவர்கள் அனைவருக்கும் பலத்த அடி கொடுத்திருக்கிறார் சோனியா.

? சமாதான முயற்சிகள் குறித்து இதுவரை மௌனம் காத்துவந்த ஜே.வி.பி. தற்போது தனது மௌனத்தைக் கலைத்து நோர்வே மீதான தனது அதிருப்தியை வெளிப்படுத்தியுள்ளதே. இந்நிலையில் சமாதான முயற்சிகள் தொடருமா?

*குணபாலசிங்கம் — பாரிஸ், பிரான்ஸ்.*

! ஜனாதிபதி சந்திரிகாவின் முதுகெலும்பின் வலிமைதான் அதனைத் தற்போதைக்கு தீர்மானிக்கும் சக்தியாக இருக்கிறது. ஜே.வி.பியையும் அரவணைத்துக்கொண்டு சமாதானத்தையும் முன்னெடுப்பதென்பது நடைமுறைச் சாத்தியமற்றது.

? விடுதலைப்புலிகள் ஆயுதங்களை கைவிடவேண்டும் என அமெரிக்கா மீண்டும் அறிவித்துள்ளதே...?

*ச. சிவலிங்கம் — பாரிஸ், பிரான்ஸ்.*

! தமிழர் படையிடம் இருக்கின்ற ஆயுதம் என்பது தமிழர்களின் பாதுகாப்புடனும் பலத்துடனும் சம்பந்தப்பட்டது. இந்த யதார்த்த நிலையை புரிந்தும் புரியாததுபோல் 'புளிச்சுப்போன வாந்தியை' மீண்டும் கக்கியிருக்கிறது அமெரிக்கா. முதலில் அமெரிக்கா கைவிடவேண்டிய விடயங்கள் ஏராளமாகவே இருக்கிறது. மற்றவர்களுக்கு உபதேசிப்பதையும் பொலிஸ்காரன் வேலை பார்ப்பதையும் விடுத்து முதலில் தம்மை நெறிப்படுத்திக்கொள்ள அமெரிக்கா முன்வரவேண்டும்.

? சமாதான சூழலில் அரச படையினர் படுகொலை செய்யப்படுவதை பார்த்துக்கொண்டு சும்மா இருக்க முடியாதெனவும், இப்படியான சம்பவங்களை தாம் வன்மையாகக் கண்டிப்பதாகவும் அரசின் அமைச்சரவைப் பேச்சாளர் தெரிவித்துள்ளாரே...?

*சு. கவிந்திரன் — சூரிச், சுவிஸ்.*

! சமாதானத்தின் பெயரால் இச்சமாதானச் சூழலில் அரசாங்கத்துடன் ஒப்பிடும்போது விடுதலைப்புலிகள் கொடுத்தவிலை மிக மிக அதிகம். இதற்கு அரசாங்கம் என்ன பதில் வைத்திருக்கிறது.

? விடுதலைப்புலிகளின் உறுப்பினர்களின் பதவி நிலைகளை (Ranks) அறிக்கைகளில் வெளியிடக்கூடாது என இராணுவத் தளபதி பலகல்ல தெரிவித்துள்ளது குறித்து உங்கள் கருத்தென்ன,

*ச. சுந்தரலிங்கம் — பாரிஸ், பிரான்ஸ்.*

! இலங்கையில் இரண்டு இராணுவங்கள் இருக்கின்றன என்கின்ற யதார்த்தம் எப்போதோ எல்லோராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட நிலையில், பலகல்லவின் தற்போதைய அறிவிப்பு கேலிக்குரியது. தமிழர்களின் பாதுகாப்புப் படையான விடுதலைப் புலிகளின் பதவி நிலைகளை வெளிப்படுத்தக்கூடாது என்கின்ற பலகல்லவின் ஆதங்கம், அவரது மன உளைச்சல் சார்ந்த கருத்து வெளிப்பாடாகும். புலிகளின் இராணுவக் கட்டமைப்பின் ஒரு அங்கமான அவர்களது இராணுவப் பதவி நிலைகளை தவிர்த்துக்கொள்ளுமாறு கோருவதற்கு பலகல்லவுக்கு எந்த அருகதையும் இல்லை. அதைப் போர்க்களங்கள் தீர்மானிக்கும்.



## புத்திசிகாமணி பதில்கள்

? புதிதாக ஆட்சியமைத்துள்ள இந்திய அரசு விடுதலைப் புலிகள் மீதான தடையை மேலும் இருண்டு வருடங்களுக்கு நீடித்துள்ளமை எதனை வெளிப்படுத்துகிறது?

*த. சஞ்சயன் —பாரிஸ், பிரான்ஸ்.*

! இது ஏற்கனவே இருந்த அரசினால் எடுக்கப்பட்ட முடிவு தற்போது நிறைவேற்றப்பட்டிருக்கிறது. ஆனாலும் இலங்கை இனப்பிரச்சினை விவகாரத்தில் நேரடியாகத் தலையிடும் நோக்கம் புதிய காங்கிரஸ் கட்சியிடம் இல்லை என்பது மட்டும் தெளிவாகத் தெரிகிறது. ராஜீவின் கொலை விவகாரத்தை தமக்கு சாதகமாக்கி இந்தியாவை நேரடியாக இனப்பிரச்சினைக்குள் இழுத்துவிடுவதற்கு எதிர்காலத்தில் சிறீலங்கா அரசு முயற்சி எடுத்தாலும் அது பலனளிக்காது என்றெ நினைக்கிறேன். முன்பொருமுறை நிருபர் ஒருவர் ராஜீவின் மரணம் பற்றி சோனியாவிடம்
கேட்டபோது `அது முடிந்துபோன கதை. இனி நடப்பது நல்லதாக இருக்கட்டும்` எனப் பதிலளித்திருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது.

? புத்திசிகாமணியாரே! சங்கரியாரின் வீழ்ச்சிக்கு அவரது சாதகக் குறிப்பில் உச்சத்தில் அட்டமச்சனியும் பக்கத்தில் ஏழரைச் சனியும் இருந்ததுதான் காரணமென நண்பன் சொல்கிறான். ஆனால் உச்சத்தில் இனத்துரோகமும் பக்கத்தில் இந்தியாவின் அரவணைப்பும் இருந்ததுதான் காரணமென நான் சொல்கிறேன். இதில் யாருடைய வாதம் சரியானது?

*N. சரண் - Beckenham, London.*

! சந்தேகத்திற்கிடமின்றி உம்முடைய வாதமே சரியானதும் தர்க்க ரீதியானதுமாகும். ஆனாலும் உமது நண்பன் அட்டமத்து சனியென இனத்துரோகத்தையும் ஏழரைச் சனியென இந்தியாவின் அரவணைப்பையும் கொண்டால் அது கருத்தில்கொள்ளவேண்டிய விடயமாகும்.

? முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கிம் மீது குமாரி குரே என்ற பெண்ணுடன் தொடர்புபடுத்தி வந்திருக்கும் செய்திகள் உண்மைதானா?

*த. குகபாலன் — எவ்ரி, பிரான்ஸ்.*

! முஸ்லிம் காங்கிரஸ் கட்சியை உடைப்பதற்கும் அக்கட்சியின் தலைவர் மீது அவதூறுகளை ஏற்படுத்துவதற்கும் ஆளும் கட்சியினால் திட்டமிட்டுச் செய்யப்பட்ட சதியே இந்த விவகாரம் என அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் உறுதிப்படுத்துகின்றன. சிறுபான்மை இனத்தை நசுக்குவதற்காக பேரினவாதக் கட்சிகள் எதை வேண்டுமானாலும் செய்வார்கள் என்பதற்கு ஹக்கீம் விவகாரம் ஒரு நல்ல எடுத்துக்காட்டாகும். இனிமேலாவது முஸ்லிம் கட்சிகளும் அரசியல்வாதிகளும் பேரின வாதிகளுக்கு விலைபோகாமல் தமது தனித்துவத்தைக் காக்க முன்வரவேண்டும்.

? விடுதலைப்புலிகளின் `வான் புலிகள்` தொடர்பாக அரசு திடீரென கிலிகொண்டெழுந்து அறிக்கைகள் விட ஆரம்பித்துள்ளதே...?

*த.புவிந்திரன் — பாரிஸ், பிரான்ஸ்.*

! விடுதலைப் புலிகளிடம் வான்படை ஒன்று இருக்கின்றது என்ற செய்தி பழைய கதையாகும். ஏற்கனவே மாவீரர் தின நிகழ்வென்றின்போது புலிகளின் வானூர்தி ஒன்று மாவீரர் தூபிக்கு பூச்சொரிந்ததும், வன்னியில் விமான ஓடுபாதைகள் உண்டு என்பதும் ஏற்கனவே அறியப்பட்ட செய்தியாகும். தற்போது அரசு இவ்விவகாரத்தை ஊதிப் பெருக்க வைக்க முயல்வதன் உள்நோக்கம் சமாதான முயற்சிகளை குழப்பியடிப்பதற்கேயாகும். அரசமட்டத்திலான அண்மைக்கால நிகழ்வுகள் அரசின் மீது பலத்த சந்தேகங்களையே ஏற்படுத்தி வருகிறது.

## மண்ணின் பெறுமதி

(21ம் பக்கத் தொடர்ச்சி)

'நாங்கள் பின் வாங்கினால் எங்கள் மண்ணை மீட்க முடியாது..'

'எங்களுக்குப் பின்னால் இருக்கும் போராளிகளும் சாக வேண்டிவரும்..'

'அவர்களிடம் இருக்கும் பெறுமதி மிக்க ஆயுதங்களை எல்லாம் பறிகொடுக்க வேண்டிவரும்..'

'நாங்கள் தொடர்ந்து போராடுவோம். எங்கள் உயிரைக் கொடுத்து எங்கள் மண்ணை மீட்போம்...'

எல்லோரும் ஒருமித்த குரலில் கூறுகின்றார்கள்..

பொறுப்பாக இருந்த பெண் போராளி தொலைத் தொடர்புச் சாதனத்தை எடுத்துப் பின்னரங்கில் போராளிகளுக்கு அறிவிக்கின்றாள்...

'அடியுங்கோ? செல் அடியுங்கோ.. எங்களப் பார்க்கவேண்டாம்... எங்களைப் பற்றிக் கவலைப்பட வேண்டாம்.'

பின்னரங்கத் தளபதி தயங்குகிறார், பின்வாங்கி வரும்படி வற்புறுத்துகிறார், அவர்கள் கேட்பதாக இல்லை...

'அடியுங்கோ நாங்கள் வந்த திசையைக் குறிவைத்து அடியுங்கோ.. உடனே அடியுங்கோ...' அவர்கள் கத்துகிறார்கள்...

அடத்த கணம் எறிகணை மழை பொழிகிறது. ஏதிரியின் கோட்டை தகர்கிறது..

அவன் பின்வங்கி உயிரைக் கையில் பிடித்துக் கொண்டு ஓடுகிறான்.

அந்தப் பிரதேசம் மீட்கப்படுகிறது.

அந்தப் போராளிகளிற் பலர் வீரச்சாவைத் தழுவிக் கொண்டுவிட்டார்கள்...

இந்த வீரவரலாற்றை அது நடந்த இடத்திலேயே வைத்து எனக்குச் சொன்ன அந்தப் போராளிகள்.

இன்னொன்றையும் சொல்லிக் கவலைப்பட்டார்கள்...

'இப்ப எல்லாரும் இந்த மண்ணின் பெறுமதியை... நிலத்தின்ரை பெறுமதியை... பணத்தை வச்சுத்தான் அளவிடுகினம். இந்த மண்ணின் ஒவ்வொரு அங்குலமும் போரளிகளின் இரத்தத்தால் விலை குடுத்து மீட்கப்பட்டது.

இந்த மண்ணின் ஒவ்வொரு சதுர அடி நிலமும் ஒவ்வொரு போராளியின் உயிர் எண்டதை பலபேர் மறந்திட்டினம்...'

உண்மையில் நீங்கள் எங்கள் தாயகத்தில் ஒரு காணியை வாங்கவோ, விற்கவோ விரும்புகின்றீர்களா?

தயவு செய்து அதன் பெறுமதியைப் பணத்தைக் கொண்டு அளவிடுவதற்கு முன் இந்தப் போராளிகள் சொன்னதை ஒரு கணம், ஒரே ஒரு கணம், நினைத்துப் பாருங்கள்.

## தென்னங்காணி உரிமையாளர்களுக்கு விடுதலைப் புலிகளின் நிதிப் பிரிவு விடுக்கும் அறிவித்தல்

### தென்னங்காணிகளைக் கையளிக்கும் நடைமுறைகள்

01. வெளிநாட்டிலுள்ள ஒருவர் தமிழீழத்தில் உள்ள தமது தென்னங்காணியைத் தாம் குறிப்பிடுமொருவருக்கு வழங்குமாறு கோரும் வேண்டுகையை அந்நாட்டிலுள்ள எமது பொறுப்பாளருடைய உறுதிப்படுத்தலுடன் அவரூடாக எமக்கு அனுப்புமிடத்து அக்காணி இயக்கத் தேவைக்குப் பயன்படாதென இயக்கம் கருதுமாயின் குறித்துரைக்கப்படுபவரிடம் நிதித்துறைக் கட்டுப்பாடுகளுக்கமையக் கையளிக்கப்படும்.
02. காணியுரிமையாளர் வேண்டுகையெதனையும் விடுக்காத விடத்து நிதித்துறை பொருத்தமானவரெனக் கருதும் ஒருவருக்கு நிதித்துறைக் கட்டுப்பாடுகளுக்கமைய குத்தகைக்கு விடப்படும்.
03. நிதித்துறைக் கட்டுப்பாடுகள்
    - அ. காணி கையளிக்கப்படும் நாளிலிருந்து ஓராண்டுக்குட் காணிக்கு வேலியிடப்பட்டு அறுக்கைப் படுத்தப்பட வேண்டும்.
    - ஆ. ஆண்டுதோறும் துப்புரவுப்பணி மேற்கொள்ளப்படவேண்டும்.
    - இ. கையளிக்கப்படும் நாளிலிருந்து இரண்டாண்டுகளுக்குட் கீழ்நடுகை அல்லது மீள்நடுகை அல்லது புதுநடுகை செய்யப்படவேண்டும்.
    - ஈ. நடப்பட்ட பிள்ளைகளுக்கு மூன்றாண்டுகளுக்கு முறையாக நீரூற்ற வேண்டும்.
    - உ. இளம்பிள்ளைகளுக்கும் பயன்தரும் தென்னைகளுக்கும் ஆண்டு தோறும் அவற்றுக்கேற்ற உரமிடப்படவேண்டும்.
04. மேம்பாட்டு நடவடிக்கைகளை வருவாய்ப்பகுதி கண்காணிக்கும், பேணுகை நிறைவாகக் காணப்படாதவிடத்துப் பெருந்தோட்டப்பகுதி காணியைப் பொறுப்பேற்கும்.
05. கையளிக்கப்படும் நாளிலிருந்து மொத்த விளைவில் 20 நூற்றுக்கூறைக் காணியைப் பேணுபவர் வருவாய்ப்பகுதிக்குச் செலுத்தவேண்டும். இதன் மூலம் நிதித்துறை இழக்கும் வருவாயில் 37.65 நூற்றுக்கூறு ஈடுசெய்யப்படும். பறியலுக்கு 4.88 தேங்காய்கள் என்ற தற்போதைய விளைவு 10 தேங்காய்களாக அதிகரிக்கும் போது இயக்கத்தால் இழக்கப்படும் வருவாயில் 77.65 நூற்றுக்கூறு மீளப்பெறப்படும். விளைவு பறியலுக்குப் பதினைந்து தேங்காய்களாக அதிகரிக்கும் போது தொண்ணூற்றொன்பது இலட்சம் ரூபா வருவாயாகக் கிடைக்கும்.
06. காணியைப்பேணுபவர், மாதந்தோறும் பெறப்படும் தேங்காயை அவ்வப்போதைய சந்தை மொத்த விற்பனை விலையிற் பெருந்தோட்டப்பகுதிக்கு விற்பனை செய்ய வேண்டும். இதனால் இயக்கத்தில் தேங்காய்த் தேவை நிறைவு செய்யப்படும்.
07. காணியுரிமையாளராற் குறித்துரைக்கப்பட்டவரோ நிதித்துறையிடமிருந்து நேரிற் பேணுகைக்குப் பெற்றவரோ தாமோ தமது கண்காணிப்பின் கீழோ காணியைப் பேணவேண்டும். காணி தொடர்பாக எழும் எல்லாச்சிக்கல்களுக்கும் அவரே பொறுப்பாவார். பெருந்தோட்டப்பகுதியின் ஒப்புதலின்றி வேறு எவருக்கும் கைமாற்றிக் கொடுத்தலாகாது.

# இராவணன் வரலாறு நூலாக வெளியீடு

இராவணனின் வரலாற்றைக் கூறும் 'இராவணேஸ்வரன் இந்திர உலா' எனும் வரலாற்று நூல் கடந்த 21ம் திகதி வெள்ளியன்று திருகோணமலை முத்தமிழ் வளர் கலை மன்றத்தில் வெளியிட்டு வைக்கப்பட்டது. எழுத்தாளர் கந்தசாமி பாலசுப்பிரமணியம் எழுதிய இந்நூலை ஈழத்து இலக்கியச் சோலை தனது 17வது வெளியீடாக வெளியிட்டு வைத்துள்ளது. இந் நிகழ்வில் சிறீலங்கா நாடாளுமன்ற உறுப்பினர் சம்பந்தன் அவர்கள் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு உரை நிகழ்த்தினார்.

அவர் தனது உரையில், இராவணேஸ்வரனின் இந்நூலில் தமிழ் மக்கள் இம்மண்ணில் வாழ்ந்த வரலாற்று உண்மைகளை ஆராய்ந்து வெளியிட்டுள்ளது. தமிழ் மக்களுக்கு இன்று தேவையான விடயங்களை இந்நூல் உள்ளடக்கியுள்ளது எனவும் தெரிவித்தார். கம்பரால் எழுதப்பட்ட இராமாயணத்தில், இராமனை சிறந்தவனாகவும், ஒரு கடவுளின் அவதாரமாகவும் இதேவேளை, இராவணனை மிக மோசமானவனாகவும் சித்தரித்துள்ள நிலையில், இராவணனின் உண்மையான முகத்தை இந்நூல் வெளிக்கொண்டுவந்துள்ளது.






நூலின் ஆசிரியர் அதனை அறிமுகப்படுத்துகிறார். சம்பந்தன் உரையாற்றுகிறார்

## ஆலய வாசலில் இறந்த நாகபாம்பு இறுதிக் கிரியைகளுடன் அடக்கம்

(24.05.04)

முல்லைத்தீவு, ஒட்டுசுட்டான் கற்சிலைமடுப் பகுதியில் மிகவும் பழைமைவாய்ந்த நாகம்மாள் ஆலயம் உள்ளது. இவ்வாலயத்தை மக்கள் மிகுந்த நம்பிக்கையுடன் வழிபாடுசெய்து வருகின்றனர். அங்கு அடிக்கடி நாகபாம்பு ஒன்று வந்துபோவது வழமை. அண்மையில் திடீரென அந்த நாகபாம்பு ஆலய வாசலில் இறந்து காணப்பட்டதினால் இப்பகுதி மக்கள் பெரும் கவலையடைந்தனர்.

இறந்த நாகபாம்பினை மக்கள் ஆலய முன்றிலில் சடங்கு முறைகளுடன் அடக்கம் செய்திருக்கின்றனர். தமிழ்மக்களிடையே பாம்பு வழிபாடு முக்கியமானது. குறிப்பாக வன்னி மக்கள் நாகவழிபாட்டுக்கு முக்கியம் கொடுத்து வருகிறார்கள். புளியம்பொக்கணை நாகதம்பிரான் ஆலயம், புதூர் நாகதம்பிரான் ஆலயம் என்பன வன்னியில் முக்கியத்துவம் பெற்ற வழிபாட்டுத்தலங்கம் ஆகும். இந்த வகையில், ஒட்டுசுட்டான் கற்சிலைமடு நாகம்மாள் ஆலயத்தின் நாகபாம்பு இறந்துள்ளமை இப்பகுதி மக்களைக் கவலைகொள்ளச் செய்துள்ளது. நாகவழிபாட்டுக்கு முக்கியத்துவம் கொடுக்கும் மக்கள் இறந்த நாகபாம்பிற்கு மனிதர்கள் இறந்தவுடன் செய்யும் சடங்குகள் போன்று சடங்குகள் செய்து அதனை அடக்கம் செய்துள்ளமை நாக வழிபாட்டுக்கு மக்கள் கொடுக்கும் முக்கியத்துவத்தினை எடுத்துக்காட்டுகின்றது என்று அப்பகுதி மக்கள் தெரிவித்தனர்.

## காஷ்மீர் கண்ணிவெடி தாக்குதலில் படையினர் உட்பட 33 பேர் பலி

(24.05.04)

ஜம்மு - காஷ்மீரில் நடத்தப்பட்ட கண்ணிவெடித் தாக்குதலில் இந்திய எல்லைப் பாதுகாப்புப் படையினர் உட்பட 33 பேர் பலியாகியுள்ளனர். சிறீநகரிலிருந்து 100 கி.மீ. தொலைவில் சிறீநகர் - ம்மு தேசிய நெடுஞ்சாலை அருகே உள்ள உட்ஸா என்ற இடத்தில் நேற்று ஞாயிற்றுக்கிழமை இந்தச் சம்பவம் நடந்தது. இவர்கள் பயணம் செய்த பேருந்தே கண்ணிவெடித் தாக்குதலுக்க இலக்கானது.

இந்தக் கண்ணிவெடித் தாக்குதலில் கொல்லப்பட்டவர்களில் 16 பேர் இந்திய எல்லைப் பாதுகாப்பு படையினர் என்றும் மிகுதிப் பேர் இவர்களின் உறவினர்களெனவும் அங்கிருந் செய்திகள் தெரிவிக்கின்றன.



## தேசிய ஒற்றுமைக்கு சுயநிர்ணய உரிமை வேண்டும்

### – வாசுதேவ நாணயக்கார

இலங்கையில் வாழும் சகல இன மக்களும் சுயநிர்ணய உரிமையுடன் வாழும் நிலையேற்பட்டால் மாத்திரமே தேசிய ஒற்றுமை ஏற்படுமென்று புதிய இடதுசாரி ஐக்கிய முன்னணியின் தலைவர் வாசுதேவ நாணயக்கார கூறியுள்ளார். கடந்த ஞாயிற்றுக்கிழமை ஹற்றன் நகரில் நடைபெற்ற மலையக மக்கள் சமாதான சம்மேளனத்தின் சமாதான மாநாட்டில் உரையாற்றுகையில் அவர் இதனை தெரிவித்தார். சமாதானமென்பது ஒவ்வொருவர் மனதிலும் ஏற்பட வேண்டும். நாட்டில் வாழும் சிங்கள மக்கள், வடக்குக் கிழக்கு தமிழ் மக்கள், முஸ்லிம் மக்கள், மலையக தமிழ் மக்கள் ஆகியோர் அவரவர் பிரதேசங்களில் சுயநிர்ணய உரிமையுடன் வாழும் நிலையேற்படாத வரை இலங்கைத் தீவில் ஒற்றுமை மலராது என்றும் அங்கு தெரிவித்தார்.

## கோபுவின் மூன்று நூல்கள் கிளிநொச்சியில் அறிமுகவிழா

(24.05.04)

முதுபெரும் பத்திரிகையாளர் எஸ்.எம்.கோபாலரத்தினம் (கோபு) எழுதிய மூன்று நூல்களின் அறிமுக விழா எதிர்வரும் 27 ஆம் திகதி வியாழக்கிழமை பிற்பகல் 4.00 மணிக்கு கிளிநொச்சி கலாசார மண்டபத்தில் நடைபெறும். ஈழமண்ணில் ஓர் இந்திய சிறை, அந்த ஒரு உயிர் தானா உயிர், பத்திரிகைத்துறையில் அரை நூற்றாண்டு. ஆகிய நூல்களே ஒரே நேரத்தில் அறிமுகம் செய்துவைக்கப்படவுள்ளன. விழாவில் கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் தி.இராசநாயகம் மற்றும் விடுதலைப் புலிகளின் முக்கிய பிரமுகர்கள் கலந்து கொண்டு உரையாற்றுவர்கள். பத்திரிகை உலகில் வீரகேசரி மூலம் அறிமுகமான எஸ்.எம்.கோபாலரத்தினம் ஈழநாடு, ஈழமுரசு, செய்திக்கதிர், காலைக் கதிர், ஈழநாதம், தினக்கதிர், ஆகிய தின, வார இதழ்களின் பிரதம ஆசிரியராக பணியாற்றி வந்துள்ளார்.

### அகதிகளை விடுதலை செய்யுமாறு உத்தரவு

இந்தியாவிலிருந்து படகுகள் மூலம் தலைமன்னார் திரும்பும் போது சிறீலங்கா கடற்படையினரால் கைது செய்யப்பட்ட 25 இலங்கை அகதிகளை மன்னார் மாவட்ட நீதவான் என்.எம்.எம்.அப்துல்லா கடந்த திங்கட்கிழமை விடுதலை செய்யுமாறு உத்தரவிட்டுள்ளார். யாழ்ப்பாணம், மன்னார் மாவட்டங்களைச் சேர்ந்த அகதிகள் யுத்த சூழலின் போது இடம்பெயர்ந்து தமிழகம் சென்று சுமார் 14 வருடங்களின் பின்னர் தமது சொந்த இடங்களுக்கு திரும்பும் போதே, தலைமன்னரில் வைத்து சிறீலங்கா கடற்படையினரால் கைது செய்யப்பட்டு தடுத்தகைக்கப்பட்டிருந்தனர்.

## விடுதலைப்புலிகளின் விமான அச்சுறுத்தல்களை

### எதிர்கொள்ள சிறீலங்கா அரசு தயாராகின்றது

(24.05.04)

விடுதலைப் புலிகள் தமக்கென விமானப்படை ஒன்றை உருவாக்கி வருகின்றார்கள் எனப் புலனாய்வுத் தகவல்கள் வெளியாகி வருவதை அடுத்து, சிறீலங்கா அரசு பதில் நடவடிக்கைக்குத் தயாராகி வருவதாக கொழும்புச் செய்திகள் தெரிவித்துள்ளன. விடுதலைப் புலிகளின் விமானப் படையினரால் ஏற்படக் கூடிய அச்சுறுத்தல்களை முறியடிப்பதற்கு சிறீங்காவின் பாதுகாப்பு உயர் பீடம்பதில் நடவடிக்கைத் திட்டம் ஒன்றை அவசர அவசரமாகத் தயாரித்து வருவதாகவும் தெரியவருகிறது.

இன்று கொழும்பில் நடைபெற்ற உயர் பாதுகாப்பு மாநாடு ஒன்றில் இது குறித்து விவாதிக்கப்பட்டதாகவும் இத்திட்டத்தைச் செயற்படுத்துவதற்காகக் கொள்வனவு செய்யப்பட வேண்டிய கருவிகள், ஆயுதங்கள், தளபாடங்கள் ஆகியவை குறித்தும் படையினரைத் தயார் செய்வது குறித்தும் இக்கூட்டத்தில் விரிவாக ஆராயப்பட்டதாகவும் எமது கொழும்புச் செய்தியாளர் தெரிவித்துள்ளார். சிறீலங்கா விமானப் படையின் தேவைக்காக எம்.ஐ.17 ரக உலங்கு வானூர்திகளை கொள்வனவு செய்வதற்கும் அதிநவீன ராடர்கள் விமான எதிர்ப்பு பீரங்கிகள் என்பவற்றை உடனடியாக வாங்கவும் இந்த் கூட்டத்தில் தீர்மானித்திருப்பதாகத் தெரிகின்றது.

# மரண அறிவித்தல்

## சங்கீத பூஷணம் எம்.ஏ.குலசீலநாதன்

**தோற்றம்:** 02.07.1940

**மறைவு:** 21.05.2004



தமிழீழம், குலனை அராலி வடக்கு, வட்டுக்கோட்டையைப் பிறப்பிடமாகவும், பிரான்சைத் தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட பிரபல ஈழத்து மெல்லிசைக் கலைஞரும், ஈழத்து திரைப்படப் பாடகரும், இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் முன்னாள் இசைக் கட்டுப்பாட்டாளருமான சங்கீத பூஷணம் எம்.ஏ.குலசீலநாதன் அவர்கள் 21.05.2004 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற முத்துச்சாமி - அருளம்மாவின் அருமைப் புதல்வனும், காலஞ்சென்ற திரு. திருமதி நட்சேத்திரம் தம்பதிகளின் அன்பு மருமகனும், திருமதி சிவநாயகியின் (பிரான்ஸ்) பாசமிகு கணவரும் கோகிலவாணி (பிரான்ஸ்), செந்தூர்நாதன் (பிரான்ஸ்), கமலோத்பவநாதன் (பிரான்ஸ்), கணேசநாதன் (பிரான்ஸ்), தனுசிகா (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் திங்கள் முதல் வியாழன் வரை Chambre Funeraire, 106 Rue de Paris, 77220 Tournan en Brie- RER: E *(Gare du Nord இல் இருந்து புறப்படும்)* தரிப்பிடம் Tournan இல் காலை 9 மணியிலிருந்து 11.30 மணிவரையும், பிற்பகல் 13.45 மணியிலிருந்து 17 மணி வரையும் பார்வைக்கு வைக்கப்படும்.

இறுதிக் கிரியைகள் 27.05.2004 வியாழக்கிழமை காலை 9.45 மணிக்கு Chambre Funeraire, 106 Rue de Paris, 77220 Tournan en Brie இல் நடைபெற்று, பிற்பகல் இரண்டு மணிக்கு Pérelachaise - Gambetta - 75020 Paris. (M°: Gambetta) மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர் மற்றும் நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக் கொள்ளும்படிக் கேட்டுக்கொள்கின்றோம்.

தொடர்புகளுக்கு:
01 64 26 02 06 / 06 63 89 32 68
06 60 67 04 10 / 06 63 60 28 41

தகவல்: மனைவி, பிள்ளைகள்
33, Rue Auguste Meunier
77500 Chelles


"பொய்களையே ஆயுதமாகக்கொண்டு நடத்தப்படும் சிங்களத்தின் விசமத்தனமான கருத்துப்போரை முறியடிப்பதே இன்று நாம் எதிர்கொண்டு நிற்கும் முக்கிய சவாலாகும். எமது இயக்கத்தின் வெகுசன ஊடகங்களே இந்தப் பெரும்பணியைச் செய்யவேண்டும்" - **தமிழீழத் தேசியத் தலைவர் அவர்கள்**

# தமிழ்த் தேசிய ஊடகங்களிற்கான வளர்ச்சி நிதி

## தேசிய ஊடகங்களுக்கு வலுச்சேர்க்க சிறப்பு நல்வாய்ப்புச் சீட்டிழுப்புத்திட்டம் 2004

உலக விடுதலைப் போராட்டங்களின் முனைப்பான வளர்ச்சிப் போக்கில் தொடர்பூடகங்கள் பெரும் பங்காற்றி வருவது நாமறிந்ததே. இந்த வகையில் எமது தேசியத்தின் உண்மை நிலையை எமது மக்களின் உரிமைக் குமுறலை வெளிப்படுத்தவும், பேரினவாதம் எமது விடுதலைப் போராட்டத்தின் மீது அள்ளித் தெளித்துவரும் அவதூறுப் பரப்புகளை முறியடிக்கவும் ஊடகங்கள் அவசியமானவை.

சிறீலங்கா அதிகாரபீடத்தின் திட்டமிட்ட பரப்புரை நடவடிக்கைகளை உடனுக்குடன் ஆதாரங்களுடன் இனங்காட்டுகின்ற தேவை எமக்கு என்றும் உள்ளது. மாறிமாறி வரும் சிறீலங்கா அரசுகள் திட்டமிட்ட பொய்ப்பரப்புரைகளை மேற்கொள்வதற்கு எண்ணிறைந்த நிதியினை வாரியிறைத்து வருவது நீங்கள் அறிந்ததே. இவ்வாறு சிங்கள அரசுகள் மேற்கொள்ளும் பொய்பரப்புரையினை நம்பி மேற்குலகு கடந்த காலங்களில் எமது விடுதலைப் போராட்டத்திற்கு பங்கம் விளைவிக்கும் சில நடவடிக்கைகளை எடுத்திருந்தது.

அடக்கப்பட்ட மக்களின் உரிமைப் போராட்டமாய் இடம்பெற்றுவரும் தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் நியாயத் தன்மையை, சிறீலங்கா அரசுகளின் கபட நரித்தனத்தை வெளிப்படுத்துவதற்கு எமது தேசிய ஊடகங்களினை வலுப்படுத்த வேண்டியது உலகெங்கிலும் பரந்து வாழுகின்ற தமிழ் மக்களின் கடமையாகும்.




தேசிய ஊடகங்களின் வளர்ச்சிக்காக சிறப்பு நல்வாய்ப்புச் சீட்டிழுப்பு ஒன்றை நடாத்தவுள்ளோம். இச் சீட்டிழுப்பை தமிழர் திருநாளாம் தைப்பொங்கல் நாளான சனவரி பதினைந்தாம் நாள் தொடக்கம் மே முதலாம் நாள் வரைநடத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. எல்லா நாடுகளிலும் விசேடமாக நியமிக்கப்பட்ட தொண்டர்கள் ஊடாக இச்சீட்டுக்கள் வழங்கப்படவுள்ளன. உங்கள் இல்லங்கள் தோறும் நாடி வருகின்ற தொண்டர்ரகளுக்கு ஒத்துழைப்பு வழங்குவீர்கள் என எதிர்பார்க்கின்றோம்.

### இந்நல்வாய்ப்பு சீட்டிழுப்பிற்கான பரிசுகள்:

**முதலாவது பரிசு:** 5 நபர்களுக்கான ஒரு வாரகால தமிழீழச் சுற்றுலா *(விமானச் சீட்டுக்கள், தங்குமிட வசதி, போக்குவரத்து, உணவு என்பன உள்ளடங்கலாக)*

**இரண்டாவது பரிசு:** 3 நபர்களுக்கான ஒரு வாரகால தமிழீழச் சுற்றுலா. *(விமானச் சீட்டுக்கள், தங்குமிட வசதி, போக்குவரத்து, உணவு என்பன உள்ளடங்கலாக)*

**மூன்றாவது பரிசு:** 2 நபர்களுக்கான 5 நாள் தமிழீழச் சுற்றுலா *(விமானச் சீட்டுக்கள், தங்குமிட வசதி, போக்குவரத்து, உணவு என்பன உள்ளடங்கலாக)*

தாயக மண்மீட்புப் போரில் எம்மோடு தோளோடு தோள் நின்று கைகொடுத்த தமிழ் உறவுகளே! கருத்துப்போரிலும் வெற்றியை எமதாக்க கைகொடுத்திடுவீர் !!!

இது தவிர கவர்ச்சிகரமானதும் பயன்நிறைந்ததுமான 20 ஆறுதல் பரிசுகள் வழங்கப்படும்.

**ஊடகங்களின் வளர்ச்சி தாயக விடுதலைக்கு வலுச்சேர்க்கும்**

# உலக சாதனைகளை முறியடிக்கும் ஜோக்கிம் இனி பாரிசில்...!

சுரேஸ் ஜோக்கிம். அதுதான் அந்த இளைஞனுடைய பெயர். உலக சாதனைகளை முறியடிப்பதே தனது வாழ்நாள் இலக்காகக்கொண்டு அந்த இலக்கை நோக்கி இயந்திரமாய் இயங்கிக்கொண்டிருக்கிறார் சுரேஸ்! உலகின் பல நகரங்களுக்கும் சென்று பல உலக சாதனைகளை உலக சாதனைப் பதிவேட்டில் நிலைபெறச் செய்திருக்கும் சுரேஸ் மற்றொரு புதிய சாதனையை நிகழ்த்துவதற்காகப் பாரிஸ் நகருக்கு வந்திருக்கின்றார். 'யூன் மாத இறுதிப் பகுதியில் பாரிஸ் மாநகரசபை முன்னால் (Hotel de Ville) பல லட்சக்கணக்கான மக்களின் முன்னே 24 மணித்தியாலங்களும் தொடர்ந்து 7 நாட்களாக நின்ற இடத்தில் நின்று ஓடுகின்ற சாதனையை நிகழ்த்துவதற்கான முன்தயாரிப்புப் பணிகளில் சுறுசுறுப்பாக இயங்கிக்கொண்டிருக்கிறார் ஜோக்கிம்.



சிறு வயதிலேயே தனக்குள் பற்றியெரிந்துகொண்டிருந்த இந்த சாதனை வேட்கை தற்போது நிஜமாகி.. நனவாகி வருவதனையிட்டும் தனது எதிர்கால சாதனை இலக்குகள் குறித்தும் மிக இயல்பாக எடுத்துக்கூறுகிறார் அவர். 1992ல் கொழும்பு லியோ கழகத்தின் ஆதரவுடன் ஆரம்பமான அவரது சாதனை முயற்சிகள் இன்றுவரை தொடர்ந்த வண்ணமேயுள்ளன.

சி. என். என், ரொய்டர், மற்றும் பிரபல்யமான பத்திரிகைகள், வானொலிகள் எனப் பல்வேறு உலக ஊடகங்களும் சுரேஸ் ஜோக்கிம் சாதனை புரிகின்ற இடத்தை மொய்க்கின்றன. 'விசித்திரமான சாதனை வீரன்' என அவரை வியந்துரைக்கின்றன. அவரது செவ்விகளை ஆவலோடு பிரசுரிக்கின்றன. `The Mirror` என்கின்ற கனடிய ஆங்கிலப் பத்திரிகை, 'சுரேஸ் ஜோக்கிம் அவர்களால் முறியடிப்பதற்காகவே இந்த உலக சாதனைகள் இருக்கின்றனவே` என வியந்துரைக்கின்றது. இன்று உலகறிந்த சாதனை வீரனாக, ஈழத்தமிழ் வீரனாக, ஜோக்கிம் வலம் வந்துகொண்டிருக்கின்றார். தனது சாதனைகளுக்குப் பின்னால் சில இலட்சியக் கனவுகளையும் தன்னோடு சுமந்து திரிகிறார் சுரேஸ். உலகமெல்லாம் பல்வேறு காரணங்களாலும் வறுமைப்பட்டுத் துன்பப்பட்டுச் சீரழிக்கப்படும் சிறுவர்களின் வாழ்வில் சிறு ஒளியாவது ஏற்றிவிடவேண்டும் எனத் துடிக்கிறார் அவர். இது தனது நீண்டநாள் அவா எனக் குறிப்பிடும சுரேஸ், அன்னை தெரேசா, மைக்கல் ஜக்சன் போன்ற பிரபல்யங்களின் சமூக நலப்பணிகளையும் நினைவு கூருகின்றார்.

எதிர்காலத்தில் ஆங்கிலக் கால்வாயை நீந்திக் கடப்பது, மெக்சிக்கோ கால்வாயை நீந்திக் கடப்பது என்கின்ற சாதனைத் திட்டங்களுடன்

உலா வரும் சுரேஸ், 2005ம் ஆண்டு உலக நகரங்களை இணைத்து சமாதான ஒளியேந்திய நீண்ட மரதன் ஓட்டத்திற்கும் தயாராகிறார். அந்த மரதன் ஓட்டத்தை நிறைவு செய்கின்ற நாளை உலக சமாதான நாளாக அறிவிக்கவும் திட்டமிட்டு செயலாற்றி வருகிறார். இந்த சாதனை நிகழ்வின்போது உலகின் பிரபல்யமான வணிக நிறுவனங்களின் ஆதரவை இணைத்துப் பெரும் நிதியைத் திரட்டுவதற்கான முயற்சியிலும் அவர் இறங்கியிருக்கின்றார். அதில் ஒரு பகுதியையேனும் தாயகச் சிறுவர்களின் நலனுக்காகக் கிடைக்கச் செய்வதே தனது நோக்கம் எனவும், அதுவே தனக்கு நிறைந்த ஆத்ம திருப்தியை அளிக்கும் எனவும் தலைநிமிர்ந்து கூறுகிறார் சுரேஸ்.

பாரிஸ் நகரில் சுரேஸ் ஜோக்கிம் நிகழ்த்தவிருக்கும் சாதனைத் தொடரின்போது பிரான்ஸ் வாழ் தமிழர்கள் ஆகிய நாம் ஒன்றுகூடி அவரை ஊக்கப்படுத்துவோமாக. இவரது தொடர் சாதனை முறியடிப்புகளால் அவுஸ்திரேலியா, கனடா ஆகிய நாடுகளும் அவரைத் தமது நாட்டுப் பிரசையாக மனமுவந்து ஏற்றுக்கொண்டிருக்கின்றன. புலம் பெயர்ந்த நகரங்களில் பலவீதிகளிலும் எமது இளைஞர்கள் வாழ்வில் இடறிக்கொண்டிருக்கும் சூழலில், எதனையும் முயன்று முயற்சித்தால் முடிக்கலாம்' என்று கூறும் சுரேஸ், ஒரு கலங்கரை ஒளியாக புலம் பெயர்ந்த இளைஞர்களுக்கு விளங்குவாராக.

- மாநா.

# காலம் சென்றுவிட்ட கலைஞன் சங்கீத பூஷணம் எம்.ஏ. குலசீலநாதன்

*'நேற்று ஒரு நீருற்று கண்ணில் தெரிந்ததே*
*இன்று அது கானலாகி மறைந்து போனதே'*

1994இல் பாரீசில் 'இன்னும் ஒரு பெண்' சின்னத்திரைப் படத்தில் நெஞ்சைத் தொடுஞ்சோக கீதமாக அன்று நம் நெஞ்சங்களை நெகிழவைத்தவர் நம் சங்கீதபூஷணம் எம்.ஏ. குலசீலநாதன்.

இன்று அது நிதர்சனமாகிவிட்டது. ஈழத்து இசை உலகின் பூபாளம் இன்று முகாரியாகி நம் இதயங்களைக் கண்ணீர் சிந்தவைத்து விட்டது. இது இன்னுமோர் இரங்கலுரையல்ல. இதயம் குலுங்கவைக்கும் துன்ப இசை.

புலம்பெயர் மண்ணில் வாழ்ந்த இசைக் கடல் ஓய்ந்துவிட்டது. தன் கம்பீரக்குரலால் நம் இதயத்தில் தேன் நனைத்த அந்த இசைக் கலைஞன் இன்று நம்மை சோகக் கடலில் தவிக்கவிட்டு மறைந்து விட்டான். குறிப்பாகப் பாரீஸ் வாழ் தமிழ் நெஞ்சங்களுக்கு இது ஒரு பேரிழப்பு.

அவனை இளைஞனாகப் பார்த்த நாட்களும், அவன் நடந்து வந்த இசை நீரோடையும் கடந்த காலப் பின்னணியில் நெஞ்சை நிறைக்கிறது.

1968 ஆடிமாதம் ஆடிவேல் விழாவின் இரண்டாம் நாள் நிகழ்ச்சி தன் வழமையான பொலிவுடன் திரளான இரசிகர் கூட்டத்துடன் மலர்ந்து கிடந்தது.

வெள்ளவத்தை செம்மாங்கோட்டுப் பிள்ளையாரின் வாசலிலே தேனாக செவிப்பறைகளை நிறைத்துக்கொண்டிருந்தது ஒரு இளம் இசைக்குயில். ஈழத்தில் பூத்த ஓர் சுக சங்கீதம் தன் இதயத்தைப் பருவ மழையாக்கி பொழிந்தது காலிவீதியில் நடந்தவர்கள் கூட கால்கள் மகுடிமுன்பாம்பாக அந்தக் குரலால் ஈர்க்கப்பட்டு பிள்ளையாரைத் தரிசிக்க மறந்து அந்த இளைஞனின் கம்பீரமான குழுவில லயித்து கோவில் முன்றலை நிறைத்து நின்றனர்.



திடீரென ஒரு சலசலப்பு. விழாவிற்கெனத் தமிழ் நாட்டிலிருந்து தருவிக்கப்பட்டிருந்த நாதஸ்வரக் கலைஞர்கள் விழாமேடையை நோக்கி வந்துகொண்டிருந்தனர். அதைக் கண்டுவிட்ட விழா நிர்வாகிகளில் ஒருவர் பாய்ந்து சென்று அவர்களை வரவேற்கவும், பிறிதொருவர் இசைமழை பொழிந்து கொண்டிருந்த இளைஞனைக் கச்சேரியை உடன் முடிக்கும்படியும் பணித்தனர்.

மெய்மறந்து கிடந்த ரசிக மனங்கள் இச்செயல் கண்டு சினந்தன. பாதிகூட நடந்து முடியாத கச்சேரியை, அதுவும் மிக அற்புதமாக

அமைந்த அந்த சுக சங்கீதத்தை, பாதியில் நிறுத்தச் சொன்னதால் வெகுண்ட ரசிக மனங்கள் குரல்கொடுக்க ஆரம்பித்தன. அமரராகிவிட்ட சில்லையூர் தந்த பல்கலை வேந்தன் செல்வராசன் முன் மொழிய குரல்களின் சங்கமம் கோவிலை அசைத்தது. கோவில் நிர்வாகத்தினர் திகைத்து விருந்தாளிக் கலைஞர்கள் முகம் பார்க்க, கலை உணர்வும், ரசிக மனமும் அறிந்த அவர்கள் பெருமனத்துடன் கச்கேரி தொடரட்டும் எனத் தாமும் ரசிகர் குழாமுடன் அமர்ந்து ரசித்து, பிரமித்து, சிலாகிக்க-கச்சேரி களைகட்டிக் கவிந்தது காலம் மறக்க முடியாத கலையாக அமைந்தது.

இப்படி ஒரு நிகழ்வைத் தன் இருபதுகளிலேயே சாதித்த இசைஞர்தான் இன்று நம்மை கண்ணீரால் நனையவிட்டுப் போய்விட்ட சங்கீத பூஷணம் எம்.ஏ. குலசீலநாதன்.

1959-1964 அண்ணாமலை பல்கலைக்கழகத்தில் இசை பயின்று சங்கீதபூஷணம் பட்டம் பெற்று, அதுவும் முதற்பிரிவில் பெற்று, இசைமேதை பாலமுரளிகிருஷ்ணா என்ற மகா வித்வானின் அன்பு மாணாக்கானாகத் தன்னை நிறைவு செய்து, ஈழத்து இசைக்குழு ராஜபாட்டை அமைத்த கலைஞர்களில் குறிப்பிடத்தக்கவர் நம் குலசீலநாதன்.

இசைப் பயிற்சியை இந்தியாவில் முடிவு செய்து, நாடு திரும்பிய குலசீலநாதன் இலங்கையெங்கும் தன் இசையால் நிறைத்துப் பின்னர் இலங்கை வானொலியின் இசைக் கட்டுப்பாட்டாளராக நியமிக்கப்பட்டவர்.

கர்நாடக சங்கீதத்தைத் தமிழ் இசையாக, பண்டிதனும் பாமரனும் புரிந்து ரசிக்கும் வண்ணம் மெல்லிசையாக களம் அமைத்த ஈழத்து இசைஞர்களில் குலசீலநாதனும் குறிப்பிடத்தக்கவர்.

வானொலியில் லகு சங்கீதத்திலே, ஜனரஞ்சனி, வாத்ய மாதுரி, சப்தலாகிரி போன்ற நிகழ்ச்சிகளை நடாத்தி பிரமிக்கவைத்தவர்.

ஜீவ சுரங்களைப் பிரித்து மெல்லிசையாக்குதலும் ஒரு பெரிய யாகம்தான். ஈழத்து மெல்லிசை வளர்ச்சியில் குலசீலநாதன் விதைத்த நற்பயிர்கள் உருவாக, செழிக்க உரமாக அமைந்தது `இசை பிருந்தா` நிகழ்ச்சிகளாகும் எனலாம்.

இசைக்கு நாடுகள் என்ற எல்லைகள் இல்லை. ஓர்கனில் (organ) மேஜரில் சங்கராபரணத்தையும் மைனரில் சிம்மேந்திர மத்திமத்தையும் இசைக்க முடியும் என்பார் குலசீலநாதன் கர்னாடக சங்கீதத்தின் கீர்த்தனைகள் பெரும்பாலும் தெலுங்கில்தான் இருக்கின்றன. தமிழில் ஏன் உருவாகவில்லை, ஏன் உருவாக்கக்கூடாது, உருவாக்க வேண்டுமென முனைந்து சாதித்தவர் குலசீலநாதன்.

1965 -1983 வரை இலங்கை வானொலியில் பணியாற்றிக் காலத்தின் கட்டாயத்தால் புலம் பெயர்ந்து, 1983 முதல் 1985 வரை சிங்கப்பூர் ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்திலும், 1985 ஜூன் முதல் 1990 வரை ரேடியோ ரெலே மலேசியாவில் இசை ஆலோசகராகவும் பணியாற்றினார். அக்காலகட்டத்தில் மலேசியாவில் நடைபெற்ற சைவ மகாநாட்டில் 'அபிராமியின் மைந்தன்' இசை நாட்டிய நாடகத்தை எழுதியும் இசைகோர்த்தும் புகழ்பெற்றவர்.

இலகு சங்கீதமாக ஈழத்து 'குத்துவிளக்கு திரைப்படத்திலும் பாரிசின் இன்னும் ஒரு பெண்' 'முகத்தார் வீடு' சின்னத்திரைப் படங்களிலும் பாடியவர், பல நாடகங்களில் பாடியும், நடித்தும், பரதநாட்டிய அரங்கேற்றங்களுக்கும் பாடியும், இசைப் போட்டிகளுக்கு நடுவராகவும் திசையெல்லாம் இசை வார்த்தவர். பாரீஸ் சாயிபாபா மந்திர்ப் பஜனை வகுப்புக்கள் நடத்தியும், பன்மொழி பேசுவோருக்கும் தமிழிசை கற்பித்தவர். கர்நாடக இசையில் ஆங்கிலப் பாடல்களையும் தந்தவர்.

ஐரோப்பா நகரங்களெங்கும் பாராட்டுக்களும் பட்டங்களும் பெற்ற ஒரு மாபெரும் கலைஞன் இன்று மறைந்தது, ஒரு பேரிழப்பென்பதில் ஐயமில்லை. கம்பீரமான அந்தக் குரலும் அது வழங்கிவந்த இசை ஞானமும் காலத்தை வென்று நிலைத்திருக்கும் என்பது மட்டும் உறுதி.

ஏ.ரகுநாதன்.

## கொஞ்சம் சிரிக்கலாமே...

ஓர் உணவகத்தில் ரஷ்யத் தலைவர் புடின்னும், அமெரிக்கத் தலைவர் புஷ்சும் இலங்கைப் பிரதமரும் அமர்ந்திருந்து உணவருந்திக்கொண்டிருந்தனர். அப்பொழுது புடின் மற்ற இருவரையும் பார்த்து 'முதன் முதலின் அண்டவெளிக்குப் போனவர்கள் நாங்கள்தான்' என்று பெருமிதத்துடன் கூறினார். இதைக்கேட்ட புஷ், 'முதன் முதலில் சந்திரனில் கால்வைத்தவர்கள் நாங்கள்தானே' என்று அமெரிக்கர்களுக்கே உரித்தான பேராண்மைச் செருக்குடன் கூறினார். இவ்விரு தலைவர்களது கூற்றுக்களைக் கேட்டுக்கொண்டிருந்த இலங்கைப் பிரதமர், ஒரு நையாண்டிச்சிரிப்புடன் 'நாங்கள் மிக விரைவில் சூரியனில் கால்பதிப்போம்!' என்றார், தன் மேலங்கியின் கழுத்துப்பட்டியை உயர்த்திக்காட்டியபடி. இதைக்கேட்ட மற்ற இருவரும் வியப்புடன் ஒருவரை ஒருவர் பார்த்துத் தமது கண்புருவங்களை உயர்த்திக்கொண்டனர். பின்னர் அவ்விருவருள் ஒருவர் 'சூரியனில் கால்பதிப்பதா? அப்படித்தான் போய்க் கால்வைத்தாலும் உடனே பொசுங்கிப் போகவேண்டிவருமே!' என்றார் ஆச்சரியத்துடன். இதனை ஏற்று நமட்டுச் சிரிப்புடன் தலையாட்டிக்கொண்டு மற்றவர், 'முட்டாள்தனமான கற்பனையிது' என்றார்.

இதைக்கேட்ட இலங்கைப் பிரதமருக்குக் கொஞ்சம் ரோசங் கலந்த கோபம் வந்துவிட்டது. உடனே அவர், 'நாங்களா முட்டாள்கள்? எங்களைச் சரியாகப் புரியாத மற்றவர்கள்தான் முட்டாள்கள். உங்களுக்குத் தெரியாது எங்களது இரகசியத்திட்டம். நாங்கள் இரவில்தான் சூரியனுக்குப்போவோம்!' என்றார், தனது புத்திசாலித்தனத்தைத்தானே மெச்சும் வீறாப்புடன்!

இதனைச் செவிமடுத்த மற்றவர்கள் இருவரும் சொல்வது என்ன என்று புரியாது, தலைகுனிந்து மௌனமானார்கள்.

இது இந்தியாவில் வெளிவரும் 'தினகரனின்' வேலை

மாறியது நெஞ்சம்...மாற்றியது யாரோ?



## என் மீது கோபமா?

### வைகோவை கட்டியணைத்து வருந்திய வாஜ்பாய்!

'என் மீது கோபமாக இருக்கிறீர்களா?' என்று ம.தி.மு.க பொதுச் செயலர் வைகோவிடம் மனம் உருகினார் முன்னாள் பிரதமர் வாஜ்பாய்.

குடியரசுத் தலைவர் மாளிகையில் மன்மோகன் சிங் தலைமையிலான புதிய அமைச்சரவை சனிக்கிழமை மாலை பதவியேற்றது. விழா முடிந்து தேநீர் விருந்த நடைபெறும் அரங்கிற்கு முக்கிய பிரமுகர்கள் சென்றனர்.

அங்குள்ள சோபாவில் அமர்ந்திருந்தார் வாஜ்பாய். வைகோ வந்ததைப் பார்த்ததும் உடனே எழுந்து, அவரைக் கட்டி அணைத்துக்கொண்டார். அப்போது அவர்கள் இருவருக்கும் நடந்த உரையாடல்.

**வாஜ்பாய்:** என்மீது கோபமாக இருக்கிறீர்களா?

**வைகோ:** எனக்கு என்ன கோபம்? எப்போதும் போல் உங்கள் மீது அன்பு வைத்திருக்கிறேன். தேர்தல் பிரச்சாரக் கூட்டங்களில் பேசும்போது கூட, வாஜ்பாய் மீது அளவுகடந்த அன்பும் மரியாதையும் வைத்திருக்கிறேன் என்றுதான் சொன்னேன்.

**வாஜ்பாய்:** அதுபற்றி நானும் கேள்விப்பட்டேன். நீங்கள் சிறையில் இருக்கும்போது நான் நேரில் வந்து பார்க்க ஆசைப்பட்டேன். ஆனால் மரபும் விதியும் அனுமதிக்கவில்லை. தொலைபேசியிலாவது பேச விரும்பினேன். அதற்கு வாய்ப்பு இல்லை என்று அதிகாரிகள் கூறிவிட்டார்கள்.

**வைகோ:** ஜோர்ஜ் பெர்னாண்டஸ் இதுபற்றி என்னிடம் சொன்னார்.

**வாஜ்பாய்:** என்றைக்குமே நான் நினைவில் வைத்துக்கொள்ள வேண்டிய நபர் வைகோ.

**வைகோ:** கடைசியாக நான் சிறையில் இருந்து எழுதிய கடிதம் உங்களுக்கு நினைவிருக்கிறதா?

**வாஜ்பாய்:** அந்தக் கடிதத்தை இன்றைக்கும் பத்திரமாக வைத்திருக்கிறேன்.

**வைகோ:** கடந்த 2002ம் ஆண்டு அமைச்சரவை விரிவாக்கத்தின் போது இதே சோபாவில் நீங்கள் அமர்ந்திருந்தபோது உங்களுடன் பேசினேன். அதன்பிறகு நேரடியாக அமெரிக்கா சென்றேன். என்னைக் கைது செய்யத் தமிழகப் பொலிசார் தயாராக இருக்கிறார்கள் என்று கேள்விப்பட்டேன். உடனே சென்னை திரும்பியதும் கைது செய்யப்பட்டேன். இப்போது இரண்டு ஆண்டுகள் கழித்து அதே இடத்தில் உங்களைச் சந்திக்கிறேன். அநேகமாக இந்த முறை சிறைக்குப் போகமாட்டேன் என்று நினைக்கிறேன்.

*(இருவரும் சிரித்துக்கொண்டிருக்கும்போது குடியரசுத் தலைவர் அப்துல் கலாம் அங்கு வந்தார். வைகோ வணக்கம் சொல்ல, அவரும் நலம் விசாரித்தார்)*

அப்போது பிரதமர் மன்மோகன் சிங்கும், பிரணவ முகர்ஜியும் வந்தனர். வைகோவைப் பார்த்த பிரணவ முகர்ஜி, 'உங்கள் கோரிக்கைப்படி, ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசின் குறைந்தபட்ச செயல் திட்டத்தில் சேதுசமுத்திரம் திட்டத்தையும் சேர்த்துவிட்டேன்' என்றார் அதற்கு நன்றி தெரிவித்தார் வைகோ.

## ஒழிந்த சிறகுகள்

(14ம் பக்கத் தொடர்ச்சி)

இரண்டாவது மகன் நாதன், தன் இரு குழந்தைகளோடு மனைவி நந்தினியையும் அழைத்து வந்திருந்தான். நீண்ட நாட்களின் பின் தகப்பனாரைக் கண்டதும், எல்லோரும் சந்தோசமாகவே அன்று பகற் பொழுதை ஒருவாறு களித்தார்கள். மாலையானதும் எல்லோரும் தகப்பனாரிடம் சொல்லிக்கொண்டு, தங்கள் வீடுகளுக்குப் புறப்பட்டார்கள். ஐயா சேதுவின் வீட்டிலேயே தங்கிவிட்டார். அவருக்கென்று தனியான அறை ஒதுக்கப்பட்டு சகல வசதிகளையும் செய்து கொடுத்திருந்தான். வேலைக்குப் போகும் நேரத்தைத் தவிர, மற்றும்படி தன் தகப்பனோடுதான் தன் நேரத்தைப் போக்கினான். மாலை நேரங்களில் கடைத்தெருவுக்குப் போய்வர அழைப்பான். ஆடம்பரப் பிரியையான இவன் மனைவி மேகலாவுக்கு இவரது தோற்றமும், நடை உடை பாவனையும் தரக்குறைவைத் தந்துவிடும் என எண்ணி, 'ஏனப்பா அவரைக் கரைச்சல் கொடுக்கிறியள். நாங்கள் போய் வேண்டிக் கொண்டு வரலாம்தானே' என்று ஏதோ சாக்குப் போக்குச் சொல்லி அதைத் தடுத்துவிடுவாள். பேரப்பிள்ளைகளும் சந்திக்கநேரும்போது மட்டும் 'ஹலோ' என்பதோடு மறைந்துவிடுவார்கள். தனி அறையில் வாழ்ந்து வேண்டா வெறுப்பாக ஒரு கிழமை கழிந்துவிட்டது. அடுத்த ஞாயிற்றுக் கிழமையும் வந்தது, வழமைபோல் ஒரே கும்மாளமும் குதூகலிப்பும்தான். மாமனாரின் சலிப்புத் தன்மையைக் கதைகளூடாகப் புரிந்து கொண்ட நந்தினி, 'மாமா எங்கு எங்கெல்லாம் போய் பார்த்தனீங்கள்? எனக் கதையைப் போடவே,' 'இந்த அறையை விட்டு நான் எங்கும் போகவில்லை அம்மா' எனக் கூறியது கேட்டு, 'வாங்க மாமா எங்கள் வீட்டிலும் ஒரு கிழமை நிற்கலாம் தானே' என்று கட்டாயப்படுத்திக் கூட்டிக் கொண்டே போய்விட்டாள். நந்தினி மாமனாரைத் தன் தந்தையைப் போல் உபசரித்தாள். நாதனது வேலைத் தலத்தில் கடுமையாக உழைப்பதனால், வேலையால் வந்ததும், தகப்பனாரிடம் சிறிது கதைப்பதும் மிகுதி நேரத்தில் படுத்துக்கொள்வான், இது தெரிந்த நந்தினி தன் இரு பிள்ளைகளையும் அழைத்துக் கொண்டு மாமனாரோடு கடைத் தெருக்களைச் சுற்றிக்காட்டி வருவாள். பிள்ளைகளும் தாத்தா தாத்தா என்று அன்போடு கதைப்பதும், அவருடைய கைகளைப் பிடித்துக் கொண்டு திரிவதும் அவர் மனதுக்கும் ஒரு ஆறுதலைத் தந்தது. நாதன் வீட்டில் இரண்டு கிழமைகள் தங்கியிருந்தாலும், நாதனது கடுமையான உழைப்பின் போக்கு பாசத்தைப் பகிர்ந்து கொள்ளக்கூட நேரமற்றவனாய் காணப்பட்டான். இளையவன் காந்தனோ ஞாயிற்றுக்கிழமைகளில் மனைவியுடன் வருவான். கதைத்துவிட்டுப் போய்விடுவான். தம் வீட்டுக்கு வாங்கோ என்று ஒரு தடவையேனும் கேட்கவில்லை. இந்த வெறுப்பான வாழ்விலிருந்து விடுபட எண்ணி, அன்று ஒரு ஞாயிற்றுக்கிழமை சேது வந்தபோது, மேனை நான் வாறகிழமை ஊருக்குப் போகப்போறன். நான் இங்கை நிண்டால், தோட்டம் வயல் எல்லாம், தரவு பிடித்திடும். இப்ப உழுகிற நேரம். அதோடை வீடும் ஆட்களின்றேல் பாழடைந்திடும். என்னை அடுத்த கிழமை அனுப்பி விடு' என்று விடாப்பிடியாக நின்றபடியால் அதற்குரிய ஒழுங்குகளைச் செய்வதாக சேது உறுதியளித்தான்.

நாளும் வந்தது. பிராங்போட்டில் விமானம் ஏறினார். அத்தோடு கனகசபைக்கும், தந்தையை விமான நிலையத்தில் கூட்டிச் செல்லுமாறு தகவலைச் சேது அனுப்பிவைத்தான். ஒரு மாதங்களைக் கடந்த நிலையில், தன் வீட்டில் காலடி எடுத்து வைத்தார். கனகசபையின் பிள்ளைகளுக்கு நிறையவே இனிப்பு வகைகளும், உடுப்புகளும் வாங்கி வந்திருந்தார். இப்பொழுதெல்லாம் தம்பையா ஜேர்மனியைப் பற்றி சிந்திப்பதையே குறைத்துக்கொண்டார். ஊரவர்கள் 'எப்படி ஐயா உங்கள் பிள்ளைகள் ஜேர்மனியில் இருக்கிறார்கள்' என்று கேட்டால், 'எல்லோரும் சிறப்பாகவும் சந்தோசமாகவும் இருக்கிறார்கள்' என்பதை மட்டுமே சொல்லிக்கொள்வார்.

கடிதங்கள் வரும், பதில் போடுவார். அதற்கு மேல் ஏதும் தொடர்புகள் வைத்துக்கொள்வது இல்லை. இப்பொழுதெல்லாம் கனகசபையின் பிள்ளைகளைத் தன் பிள்ளைகளாக நினைத்து, அவர்கள் தான் வீட்டில் உலா வலம் வந்து கொண்டிருப்பார்கள். அதைப் பார்த்து பூரித்துக்கொள்ளுவார். தொலைந்து விட்ட நிம்மதியை இப்போது தேடி அந்த ஆனந்தத்தில் அவரது வாழ்வு மீண்டும் தொடர்கிறது.

## எதிரியின் கைகளில்...

(16ம் பக்கத் தொடர்ச்சி)

றது. பொருட்களை கவனமாகக் கரைசேர்க்க வேண்டும் என்பதற்காக இந்தக் கடற்சமரைத் தவிர்க்கவே நாவரசன் விரும்பினான். ஆனால், விடயத்தை அறிந்த எதிரி தனது கலங்களின் பலத்தைப் பன்மடங்காகப் பெருக்கினான். இதனைப் புரிந்துகொண்ட நாவரசன் தற்காப்புக் கடற்சமரில் ஈடுபட முடிவு எடுத்தான். திட்டத்தினை மற்றையபடகுக் கட்டளை அதிகாரியான கப்டன் கானகனுக்குத் தொலைத்தொடர்பு மூலம் விளக்கினான். திட்டத்தின் படி தற்காப்புச்சமர் நடைபெற்றது. எதிரி தன் பலத்தை மெலும் பெருக்கினான். விமானங்களையும் உடன் உதவிக்கு அழைத்திருந்தான். இதனால் எம்மவர்களின் பகுதிகளில் இருந்த ரவைகள் அனைத்தும் தீர்ந்தன. இந்நிலையில் நாவரசன் இப்பொருட்களுடன் எதிரியிடம் அகப்படக்கூடாது என முடிவெடுத்தான். அந்தக் கணப்பொழுதிலே இரு படகுகளையும் அந்த ஆழ்கடலிலே மூழ்க வைத்து அவர்களும் கடலன்னையை முத்தமிட்டார்கள்.

கடலன்னை அரவணைப்பில்
உறங்குகின்ற நண்பர்களே – எம்
இதயத்தில் மையம் கொண்டு சீறுகின்ற புயல்களே
நீர் விட்டுச்சென்ற பாதையில்
பகைவனை அழித்திடப் பொங்கிடும்
அலைமேலே தொடர்ந்து செல்கின்றோம்...
'நிச்சயம் வெல்வோம்
தமிழீழம் காண்பதற்காய்
கடலிலே காவியம் படைப்போம்'

**- கடற்புலி போராளி க.அலன்**

# விடுதலைப் புலிகளின் விமானம் முல்லைக் கடற்பரப்பில் பறந்தது!

## பாதுகாப்பு உயரதிகாரிகளுடன் சந்திரிகா அவசர ஆலோசனை!

தமிழீழ விடுதலைப் புலிகளின் விமானம் ஒன்று கடந்த திங்கட்கிழமை முல்லைத்தீவுக் கடற்பரப்பில் பறந்ததைத் தாம் கண்டதாகச் சிறீலங்காக் கடற்படையினர் தமது தலைமையகத்துக்கு அறிவித்துள்ளனர்.

கடந்த திங்கட்கிழமை இரவு 8 மணியளவில் முல்லைத்தீவுக் கடலிலிருந்து சுமார் 12 கடல் மைல் தொலைவில் பறந்து கொண்டிருந்த இந்த விமானத்தை ரேடார் கருவிகள் மூலம் தாம் அவதானித்ததாகவும், சில மணி நேரத்தின் பின் இந்த விமானம் தரையிறங்கியதாகவும் சிறீலங்கா விமானப் படையினரும் தமது தலைமையகத்துக்கு அறிவித்துள்ளனர்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியிலேயே இந்த விமானம் பறந்து கொண்டிருந்ததாகவும், இந்த விமானம் உலங்கு வானூர்தி ஒன்றின் வேகத்திற்குச் சமமான வேகத்தைக் கொண்டிருந்ததாகவும் சிறீலங்கா விமானப் படைத் தரப்பு தெரிவித்துள்ளது.

இந்த விமானம் பறந்து கொண்டிருந்த போது சிறீலங்கா விமானப் படைக்குச் சொந்தமான விமானங்கள் எவையும் இவ்வான் பரப்பில் பறக்கவில்லை எனவும் தெரிவித்துள்ள சிறீலங்கா விமானப் படை வட்டாரங்கள், இந்த விமானம், தமிழீழ விடுதலைப் புலிகளுக்குச் சொந்தமானதாகவே இருக்கவேண்டுமெனவும் தெரிவித்துள்ளன. இந்தத் தகவல்களை அடுத்து சிறீலங்கா அரசின் பாதுகாப்பு உயர் மட்டங்களில் இது தொடர்பாகக் கலக்கம் ஏற்பட்டிருப்பதாகத் தெரியவருகின்றது.

சிலங்காவின் அரசுத்தலைவர் சந்திரிகா குமாரதுங்க கடந்த வாரம் விமானப் படையின் உயரதிகாரிகளை அவசரஅவசரமாக அழைத்து நிலைமைகளை ஆய்வு செய்திருக்கின்றார். விடுதலைப்புலிகள் வைத்திருக்கக்கூடிய விமானங்கள், வான ஊர்திகள் அவற்றின் உத்தேச செயற்திறன், அதனால் சிறீலங்காவின் பாதுகாப்பு நிலைகளுக்கு ஏற்படக் கூடிய ஆபத்து ஆகியவை குறித்தும் ஆராயப்பட்டதாகத் தெரிகிறது.

விடுதலைப் புலிகள் இத்தகைய வசதியைப் கொண்டிருப்பதால் எழக்கூடிய ஆபத்தை எதிர்கொள்வதற்காகச் சிறீலங்காப் பாதுகாப்புத்துறை செய்யவேண்டிய முன்னேற்பாட்டு நடவடிக்கைகள் குறித்தும் இக்கூட்டத்தில் ஆலோசிக்கப்பட்டதாகத் தெரியவருகிறது. இந்த ஆபத்தைச் சமாளிப்பதற்குத் தேவையான கருவிகள், ஆயுதங்கள் முன்னெச்சரிக்கைத் திட்டங்கள் ஆகியவற்றைப் பெறுவதற்கு விரைந்து நடவடிக்கை எடுக்கவும் இக்கூட்டத்தில் முடிவுசெய்யப்பட்டதகவும் கொழும்புச் செய்திகள் தெரிவித்தன. விடுதலைப் புலிகள் தரப்பிலிருந்து இந்தச் செய்தி இதுவரை உறுதிப்படுத்தப்படவில்லை.

ஆனால் தம்மிடம் வன்னியில் ஒரு விமானத் தளம் இருப்பதாக தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் அண்மையில் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## சமாதானப் பேச்சுவார்த்தையைப் பொறுத்தே அடுத்த கட்ட நிதியுதவி

சிறீலங்கா அரசாங்கத்துக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையிலான பேச்சுவார்த்தை சாதகமான திசையில் சென்றாலேயே டோக்கியோவில் உறுதியளிக்கப்பட்ட சர்வதேச நிதி உதவி சிறப்பான முறையில் வழங்கப்படுமென்பதை உறுதியாக எதிர்பார்க்கலாமென்று ஜப்பானின் சமாதானத்திற்கான விசேட தூதுவர் யசூசி அகாசி தெரிவித்துள்ளார், புதிய அரசும் விடுதலைப் புலிகளும் சமாதான நடவடிக்கைகளை முன்னெடுப்பதில் உறுதிப்பாட்டுடன் இருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.



இலங்கைக்கு நான்கு நாள் அரசமுறைப்பயணத்தை மேற்கொண்டிருந்த யசூசி அகாசி கொழும்பில் சிறீலங்காவின் அரசுத் தலைவர் தலைமை அமைச்சர், மற்றும் எதிர்க்கட்சித் தலைவர், அரசியல் பிரமுகர்களையும் சந்தித்தார்.

வன்னியில் விடுதலைப் புலிகளின் முக்கியஸ்தர்களையும் சந்தித்துக் கலந்துரையாடிய அவர் கடந்த 18 ம் திகதி செவ்வாய்க்கிழமை கொழும்பு ஹில்டன் ஹோட்டலில் நடத்திய செய்தியாளர் மாநாட்டிலேயே இந்தக் கருத்தக்களைத் தெரிவித்தார். இந்தியாவில் ஏற்பட்டுள்ள அரசியல் மாற்றம் இலங்கையின் சமாதான முன்னெடுப்பு தொடர்பாகப் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தப் போவதில்லையென்றும் இந்தியத் தூதுவருடன் தான் இதுபற்றிக் கலந்துரையாடியதாகவும், இந்தியாவின் பழைய கொள்கைகளில் பெரிய வேறுபாடு எதுவும் இருக்காது என்றும் அவர் குறிப்பிட்டதாகவும் அகாசி கூறினார்.

## கடல் நடவடிக்கை ஒன்றில் 4 கடற்கரும்புலிகள் வீரச்சாவு

தமிழீழக் கடற்பரப்பில் கடந்த 2002ம் ஆண்டு மே மாதம் முதலாம் திகதி இடம்பெற்ற கடல் நடவடிக்கை ஒன்றின் போது நான்கு கடற் கரும்புலிகள் வீரச்சாவடைந்துள்ளதாகத் தமிழீழ விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளனர்.

கடற்கரும்புலி மேஜர் பாண்டியன் என்று அழைக்கப்படும் முத்துக்குமார் கணபதிப்பிள்ளை கரடியனாறு கொலனி மட்டக்களப்பு, கடற் கரும்புலி மேஜர் சூரியன் என்று அழைக்கப்படும் சூரி நாகேந்திரன் கமலேந்திரன் கொழும்புத்துறை யாழ்ப்பாணம், கடற் கரும்புலி மேஜர் அச்சுதன் என்று அழைக்கப்படும் வாதீசன் கணேசன் ஜெயக்குமார் சொந்த முகவரி: கொக்குவில் கிழக்கு யாழ்ப்பாணம் தற்காலிக முகவரி: விஜி வீதி மன்னார் வீதி முழங்காவில் யாழ்ப்பாணம், கடற் கரும்புலி மேஜர் அறிவுச் செல்வன் என்று அழைக்கப்படும் வசந்தன் வைரமுத்து வினோகரன் சொந்த முகவரி: கிளிநொச்சி தற்காலிக முகவரி: வடிசாலை அருகில் ஆனைவிழுந்தான் வன்னேரி கிளிநொச்சி, ஆகிய கடற்கரும்புலிகள் வீரச்சாவைத் தழுவிக்கொண்டனர். இவர்களுக்குத் தமிழீழ விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துள்ளனர்.

## நோர்வேத் தூதுவர் இல்லத்திற்கு கல்வீச்சு!

கொழும்பில் உள்ள நோர்வேத் தூதுவரின் இல்லத்தின் மீது கடந்த 17ம் திகதி திங்கட்கிழமை கல்வீச்சுத் தாக்குதல் இடம்பெற்றுள்ளது. நோர்வே அரசியலமைப்புத் தினம் கொண்டாடப்பட்ட வேளையில் இந்தக் கல்லெறி இடம்பெற்றுள்ளது. திங்கள் இரவு நோர்வேத் தூதுவர் ஹன்ஸ் பிரட்ஸ்கர் இல்லத்தில் பாண்ட் வாத்தியக் குழுவினர் இசை விருந்தளித்துக் கொண்டிருந்த வேளையில் கற்கள் வந்துவிழுந்ததாகச் சிறீலங்கா காவல்துறையினர் தெரிவித்தனர். உடனடியாக அப்பகுதியில் தேடுதல் நடத்திய போதிலும் எவரும் பிடிபடவில்லை. தூதுவர் இச்சம்பவத்தைப் பெரிதுபடுத்த விரும்பவில்லை. யாரோ சிறு பிள்ளைகள் விளையாடியிருக்கிறார்கள் என்று அவர் கூறியுள்ளார்.

## தொண்டைமானாற்றில் ஆணின் சடலம் மீட்பு


தொண்டைமானாறு செல்வச் சந்நிதி நீர் ஏரியில் இருந்து ஓர் ஆணின் சடலம், கடந்த 18ம் திகதி செவ்வாய்க்கிழமை மீட்கப்பட்டது. இச்சடலம், சந்நிதி ஏரியில் நீராடிய சமயம், நீரில் மூழ்கி உயிரிழந்தவருடையதாக இருக்கலாம் எனச் சந்தேகிக்கப்படுகிறது. ஏரிக்கரையில் பை ஒன்று காணப்பட்டது. அப்பையில் இருந்த தேசிய அடையாள அட்டையில், யாழ். இராசசிங்கம் வீதியைச் சேர்ந்த சிதம்பரநாதன் என்பவருடைய பெயர் இருந்தது. ஆனால் இறந்தவர் அவர்தானா என்ற அடையாளம் காணப்படவில்லை. அவரது சடலம் தற்போது வல்வெட்டித்துறை ஊரணி மருத்துவமனையில் வைக்கப்பட்டுள்ளது.

## தேசியத் தலைவருடனான முக்கிய சந்திப்புக்காக மட்டு. தளபதிகள் வன்னிக்குப் பயணம்

மட்டக்களப்பு - அம்பாறை மாவட்டச் சிறப்புத் தளபதி ரமேஷ் மற்றும் தளபதிகளான ராம், ஜனார்த்தனன், ஜெகாத்தன் ஆகியோர் தேசியத் தலைவருடனான விசேட சந்திப்பை மேற்கொள்வதற்காகக் கடந்த 19 ம் திகதி புதன்கிழமை வன்னிக்குப் பயணமானார்கள்.

போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் வழித்துணையுடனும், இராணுவத்தினரின் விசேட பாதுகாப்புடனும் இவர்கள் செங்கலடிக் கறுத்தப் பாலம் இராணுவ சோதனைச் சாவடியூடாக வன்னி சென்றுள்ளனர்.

இதேவேளை, இரு தினங்களுக்கு முன்னர் மட்டக்களப்புச் சென்றிருந்த விடுதலைப் புலிகளின் துணை அரசியல்துறைப் பொறுப்பாளர் சோ.தங்கன், விடுதலைப் புலிகளின் மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர் தமிழினி, தமிழர் புனர்வாழ்வுக் கழகப் பணிப்பாளர் கே.பி.றெஜி, அரச அரசசார்பற்ற நிறுவனங்களின் இணைப்பாளர் தியாகராஜா மற்றும் நரேன், தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தைச் சேர்ந்த சந்துரு ஆகியோரும் இவர்களுடன் வன்னி திரும்பியுள்ளனர்.



## ஐ.நா. பொதுக் கூட்டத்துக்கு சந்திரிகாவுக்கு அழைப்பு

சிறீலங்காவின் அரசுத்தலைவர் சந்திரிக்கா குமாரதுங்கவுக்கு ஐக்கிய நாடுகள் சபையின் பொதுக் கூட்டத்தில் கலந்து கொள்வதற்கான அழைப்பு இம்முறை அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. இவ்வழைப்பை ஏற்று ஐக்கிய நாடுகள் சபையின் பொதுக் கூட்டத்தில் கலந்து கொள்வதற்காக எதிர்வரும் செப்டெம்பர் மாத நடுப்பகுதியளவில் அவர் நியூயோர்க் செல்லவுள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் ஆட்சிக்காலத்தில் ஐக்கிய நாடுகள் சபையின் பொதுக் கூட்டத்துக்கான அழைப்பு அப்போதைய தலைமை அமைச்சராக இருந்த ரணில் விக்கிரமசிங்கவுக்கு மட்டுமே அனுப்பப்பட்டிருந்தது. இதனையடுத்து, இவ்வழைப்பு தனக்கு அனுப்பப்படாமைக்கு, இலங்கைக்கான ஐக்கிய நாடுகள் சபையின் பிரதிநிதி சார்லி மகேந்திரனே காரணமெனச் சந்திரிக்கா குமாரதுங்க குற்றஞ்சாட்டியிருந்தார். ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி ஆட்சிக்கு வந்ததும், சாலி மகேந்திரனை ஐக்கிய நாடுகள் சபையின் இலங்கைக்கான பிரதிநிதிப் பதவியிலிருந்து உடனடியாக நீக்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## சிறீலங்கா புலனாய்வுத்துறை உறுப்பினர் சுட்டுக் கொலை

மட்டக்களப்பு மாவட்டத்தில் கடந்த 19 ம் திகதி புதன்கிழமை காலை 11.15 மணியளவில் சிறீலங்காவின் புலனாய்வுப் பிரிவைச் சேர்ந்த ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார். இந்தத் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு அருகில் இடம்பெற்றுள்ளது. புலனாய்வு பிரிவு உறுப்பினர் உந்துருளியில் சென்று கொண்டிருந்த வேளையிலேயே அவர் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. கிழக்குப் பிராந்தியத்துக்குப் பொறுப்பான சிறீலங்காவின் பிரதிக் காவல்துறை மாஅதிபர் நெவில் விஜயசிங்க இந்த தகவலைத் தெரிவித்துள்ளார்.


# தமிழீழ நீதி, நிர்வாகப் பொறுப்பாளரை இயன் மார்ட்டின் வன்னியில் சந்திப்பு

தமிழீழ நீதி, நிர்வாகப் பொறுப்பாளர் இ.பராவை மனித உரிமைகள் ஆலோசகரும் சர்வதேச மன்னிப்புச் சபையின் முன்னாள் தலைவருமான இயன் மார்ட்டின் கடந்த 18 ம் திகதி செவ்வாய்க்கிழமை சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார். இந்தச் சந்திப்பு, கிளிநொச்சியிலுள்ள தமிழீழ நீதி, நிர்வாகத்துறை நடுவப் பணியகத்தில் இடம்பெற்றது.

இச்சந்திப்பில், தமிழீழ நீதிமன்ற செயற்பாடுகள் தொடர்பாகவும், தமிழீழச் சட்ட ஒழுங்குகள் தொடர்பாகவும் இயன் மார்ட்டினுக்கு விளக்கமளிக்கப்பட்டது. இச்சந்திப்பில் தமிழீழ நீதி, நிர்வாகத்துறைப் பொறுப்பாளர் இ.பராவுடன் தலைமை நீதியாளர் சி.ஒப்பிலானும் கலந்து கொண்டார். தமிழீழ நீதி, நிர்வாகத்துறை எந்தவிதத் தலையீடும் இன்றி இயங்கி வருவதனை கேட்டறிந்த இயன் மார்ட்டின் தனது பூரண மகிழ்ச்சியையும் வெளிப்படுத்திக்கொண்டார் எனத்தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை, இயன் மார்ட்டினை அவர்கள் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கடந்த வியாழக்கிழமை சந்தித்துக் கலந்துரையாடியதாக வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் கிஷோர் சிவநாதன் தெரிவித்தார்.

இந்தச் சந்திப்பில் வடக்கு கிழக்கு பிரதேசத்தில் சமாதான முன்னகர்வுகள் எவ்வாறு இருக்கின்றன என்பது தொடர்பாகவும் இனிவரும் காலத்தில் எவ்வாறு முன்னகர்த்த வேண்டுமென்பதும் ஆராயப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. அத்துடன் தமிழ் அரசியற் கைதிகள் தொடர்பாகவும் அவர்களின் விடுதலை தொடர்பாகவும் வடக்கு கிழக்கு பிரதேசத்தில் இடம்பெற்று வரும் கொலைகள் தொடர்பாகவும் ஆராயப்பட்டதாக சிவநாதன் கிஷோர் தெரிவித்துள்ளார். இந்த சந்திப்பில் இரா.சம்பந்தன், யோசப் பரராஜசிங்கம், கஜேந்திரகுமார் பொன்னம்பலம், எஸ். கனகரட்ணம், எம்.கே.சிவாஜிலிங்கம், சிவநாதன் கிஷோர், ஈழவேந்தன் ஆகியோர் கலந்து கொண்டனர்.



இயன் மார்ட்டின் வன்னி சென்று கடந்த 11ம் திகதி தமிழீழத் தேசியத் தலைவரை சந்தித்தபோது

## இலங்கைக்கு அண்மித்த கடற்பரப்பில் ஸ்பானியக் கப்பல் காணமல் போயுள்ளது !

இந்து சமுத்திரத்தில் தனது கன்னிப் பயணத்தை ஸ்பெயின் நோக்கி மேற்கொண்ட ஸ்பெயின் அரசிற்குச் சொந்தமான புதிய கப்பலொன்று இலங்கைக்கு அண்மித்த கடற்பரப்பில் காணமற் போயுள்ளது. 12 மாலுமிகளுடன் சென்று கொண்டிருந்த இக்கப்பல் சிங்கப்பூருக்கும் இலங்கைக்கும் இடைப்பட்ட கடற்பரப்பில் வைத்தே காணமற் போயுள்ளது. கடந்த 17ம் திகதி திங்கட்கிழமை காலித்துறை முகத்தையடைய வேண்டிய இக் கப்பல் இன்று புதன்கிழமை வரை எந்த வித வானொலித் தொடர்பையும் மேற்கொள்ளாததாலேயே இது காணாமற்போனதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இறுதியாக இக்கப்பல் இந்திய சமுத்திரமும் பசுபிக் சமுத்திரமும் சங்கமிக்கும் மலாக்கா நீரிணையில் வைத்தே வானொலித் தொடர்பை மேற்கொண்டிருந்தது எனவும் இக் கப்பலில் இருந்த மாலுமிகளில் 10 பேர் ஸ்பானியர்கள் என்றும் ஏனைய இருவரும் பிறநாட்டவர்கள் என்றும் தெரியவருகிறது.

ஸ்பெயினிற்கும் மொராக்காவிற்கும் இடையிலான போக்குவரத்திற்கென ஸ்பானிய அபிவிருத்தி அமைச்சகத்தால் புதிதாக வடிவமைக்கப்பட்ட இக் கப்பல் 500 இருக்கைகளைக் கொண்டது எனவும், சிங்கப்பூரில் வடிவமைக்கப்பட்ட இடத்திலிருந்து ஸ்பெயினிற்கான தனது கன்னிப் பயணத்தை இது மேற்கொண்டிருந்த வேளையிலேயே காணாமல் போயுள்ளது. இக்கப்பலைத் தேடும் பொருட்டு ஸ்பெயின் அரசு ஒரு மீட்புக் குழுவை அனுப்பியுள்ளதுடன் இக் கப்பலின் பயணப்பாதைக்கு அருகிலுள்ள நாடுகளை இக்கப்பலைப் பற்றிய விசாரணைகளை மேற்கொள்ளுமாறு இராஜதந்திர ரீதியாகக் கோரியுள்ளது.

## அரசு சமாதானச் செயலகம் மாற்றியமைப்பு

சிறீலங்கா அரசின் சமாதானச் செயலகம் பரந்துபட்ட அதிகாரங்களுடன் மாற்றியமைக்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இந்தச்செயலகத்தின் தலைவராக ஜயந்த தனபால என்பவரைச் சிறீலங்காவின் அரசுத்தலைவர் சந்திரிகா நியிமித்ததைத் தொடர்ந்தே இம்மாற்றங்கள் ஏற்படவுள்ளதாகத் தெரிய வந்துள்ளது.

இதன்படி, கடந்த இரண்டு வருடங்களாகச் செயலகத்தில் பணியாற்றி வந்தவர்கள் இம்மாத இறுதியுடன் பணி நீக்கம் செய்யப்படுவதுடன், அவர்களுக்குப் பதிலாகப் புதியவர்களைச் சேவையில் ஈடுபடுத்துவதற்கும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கம் முடிவெடுத்துள்ளது.

இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளைக் கையாளுதல், நோர்வேயின் சமாதானச் செயற்பாடுகளை ஒருங்கிணைத்தல் போன்ற செயற்பாடுகள் சமாதானச் செயலகத்தின் ஊடாகவே மேற்கொள்ளப்படவுள்ளதாவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## திருக்கேதீஸ்வர திருவழா நாளை மறுதினம் ஆரம்பம்

சரித்திரப் பிரசித்திபெற்ற சிவாலங்களில் ஒன்றான மன்னார் திருக்கேதீஸ்வர ஆலயத்தில் 13வருட இடைவெளியின் பின் வருடாந்தத் திருவிழா இடம்பெறவுள்ளது. கடந்த 12 ஆண்டுகளாகப் போர்ச் சூழல் காரணமாக நித்திய, பூசைகள் மற்றும் விழாக்கள் இன்றி திருக்கேதீஸ்வராலயம் வெறிச்சோடிக் கிடந்தது. கடந்த ஆண்டு ஆடி மாதத்தில் இவ்வாலயத்தில் நித்திய பூசைகள், பெரும்சாந்தி விழாக்கள் இடம்பெற்று ஆலய வழிபாட்டுச் சூழல் பழைய நிலைக்குத் திரும்பியது.

இவ்வாலயத்தின் திருவிழாவுக்கான கொடியேற்றம் கடந்த ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10மணிக்கும் 11மணிக்கும் இடையில் சுபநேரத்தில் இடம்பெற்றது. இந்த ஆலயத்தின் பஞ்சரதபவனி எதிர்வரும் 31ஆம் திகதி திங்கட்கிழமை இடம்பெறவுள்ளது.

தீர்த்தோற்சவம் அடுத்த நாள் பாலாவியில் இடம்பெறும். ஜூன் மூன்றாம் திகதி வரை உற்சவ விழாக்கள் பக்திபூர்வமாக நடைபெறவுள்ளன.

## மூன்று அமைச்சர்கள் மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம்

புதிய அரசின் மூன்று அமைச்சர்கள் மீது நம்பிக்கையில்லாத் தீர்மானங்கள் கொண்டுவருவதற்கு ஐ.தே.கட்சி முடிவு செய்துள்ளது. சபாநாயகர் தெரிவுதொடர்பாக அமைச்சர்கள் சுசில் பிரேமஜயந்த, மைத்திரிபால சிறிசேன, றெஜினோல்ட் கூரே ஆகியோர் அரச ஊடகங்கள் மூலம் வெளியிட்டுள்ள கருத்துக்கள் தொடர்பாகவே இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானங்கள் கொண்டு வரப்படவிருக்கின்றன.

நாடாளுமன்றக் கட்டடத்தில் ஐ.தே.கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் நடைபெற்ற கட்சி நாடாளுமன்ற குழுக் கூட்டத்தில் இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைக் கொண்டுவர வேண்டும் என்ற கருத்தை கம்பஹா மாவட்ட எம்.பி.ஜோசப் மைக்கல் பெரேரா முன்மொழிந்தார். அது ஒருமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது. முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீமை அவதூறு படுத்தும் வகையில் அரச ஊடகங்கள் பயன்படுத்தப்படுவதாகக் கூறி அதனைக் கண்டிக்கும் தீர்மானம் ஒன்றும் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது.

## சிறீலங்கா நாடாளுமன்றக் கூட்டம் அடுத்த மாதத்துக்கு ஒத்திவைப்பு !

சிறீலங்கா நாடாளுமன்றம் கடந்தவாரம் கூடியபோது ஆளும் கட்சியினர், குறிப்பாக ஜே.வி.பியினர் மேற்கொண்ட குழப்ப நடவடிக்கைகளால் நாடாளுமன்றத்தை ஜூன் எட்டாம் திகதி வரை ஒத்தி வைப்பதாகச் சபாநாயகர் ஜே.எம்.லொக்கு பண்டார அறிவித்துள்ளார். சபையில் கந்தப்பொலை கலவரம் தொடர்பான விவாதம் நடைபெற்றுக் கொண்டிருந்த போது மக்கள் விடுதலை முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச ஆற்றிய உரை விவாதத்துடன் தொடர்புடையதல்ல என்று தெரிவித்த சபாநாயகர் அவரது உரையை ஹன்சார்ட்டிலிருந்து நீக்குமாறு உத்தரவிட்டார். இதற்கு ஆளும் கட்சி உறுப்பினர்கள் எதிர்ப்பு தெரிவித்து சபையின் நடுவே வந்து கூச்சல் குழப்பங்களில் ஈடுபட்டனர். சபாநாயகர் ஜே.எம்.லொக்கு பண்டார கட்சி சார்பாக நடந்து கொள்கிறாரென்று இவர்கள் குற்றஞ்சாட்டினர். இதனையடுத்து சபை ஜூன் எட்டாம் திகதி வரை ஒத்தி வைக்கப்பட்டது. கந்தப்பொலை இனக்கலவர விவாதத்தை குழப்புவதற்காகவே ஜே.வி.பியினர் இவ்வாறு நடச்து கொண்டதாக தமிழ்க் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

## ஜாதிக ஹெல உறுமயவின் உறுப்பினர் பதவி விலகல்

நாடாளுமன்ற உறுப்பினர் கதலுவே ரதனசீக தேரர் தனது உறுப்பினர் பதவியிலிருந்து கடந்த 21ம் திகதி விலகியுள்ளார். இவருடைய இடத்திற்கு அக்கீமன தயாரட்ன தேரர் என்பவரைக் கட்சியின் செயற்குழு கூடி நியமித்தது. ஆனால் பதவிவிலகிய ரதனசீகா தேரரின் இடத்திற்கு நியமிக்கப்பட்ட அக்கீமன தயாரட்ன தேரர் தனக்கான பதவியை ஏற்க மறுத்துள்ளார்.

இக்கட்சியின் உறுப்பினர் ரஜரட்ட வப்பா தேரரை நாடாளுமன்றத்திற்கு அனுப்பும் முகமாகவே தனது பதவியை தான் ஏற்க மறுத்துள்ளதாக அக்கீமன தயாரட்ன தேரர் தெரிவித்துள்ளார். அத்துடன், இப்பதவிக்கு ரஜரட்ட வப்பா தேரரே பொருத்தமானவர் எனவும் அவர் கூறியுள்ளார்.

# வங்கதேசம் மேக்னா ஆற்றில் படகு கவிழ்ந்ததில் 200 பேர் பலி

(24.05.04)

வங்கதேசத்தின் தெற்கு மதாரிப்பூர் பகுதியிலிருந்து மேக்னா ஆற்றில் சுமார் 300 பேரை ஏற்றிச் சென்ற படகு நேற்று ஞாயிற்றுக்கிழமை சந்த்பூர் அருகே கவிழ்ந்ததில், அதில் இருந்து சுமார் 200 பேர் கொல்லப்பட்டிருக்கலாம் என்று அஞ்சப்படுகிறது. இதுவரை ஆற்றிலிருந்து சுமார் 10 உடல்கள் மீட்கப்பட்டிருப்பதாக காவல்துறையினர் டாக்காவில் தெரிவித்தனர்.

இரட்டை அடுக்கு கொண்ட எம்.வி.லைட்டிங்சன் என்னும் படகு டாக்கா நோக்கி சென்று கொண்டிருந்த போதே இந்த விபத்து ஏற்பட்டது. திடீரென்று ஏற்பட்ட புயல் காற்றில் இந்தப் படகு கவிழ்ந்ததாகவும், பெண்கள், குழந்தைகள் உள்ளிட்ட 10 உடல்கள் மீட்கப்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது. சுமார் 200 பேரைக் காணவில்லை என்றும், அவர்கள் அநேகமாக உயிரிழந்திருக்கக் கூடும் என்றும் காவல்துறையினர் தெரிவிக்கிறார்கள்.

## அமைதி முயற்சி...

(32ம் பக்கத் தொடர்ச்சி)

சுவார்த்தைகளை மீண்டும் ஆரம்பிப்பதற்கு அடிப்படையாக தாம் முன்வைத்த நான்கு விடயங்கள் குறித்து சந்தரிகாவின் உறுதிமொழியை எழுத்தில் பெற்றுக் கொண்ட பின்னரே பேச்சுவார்த்தை குறித்து முடிவு செய்யலாம் என்பதில் தமிழீழ தேசியத் தலைவர் உறுதியாக இருப்பதாக தெரிவிக்கப்பட்டிருந்தது. ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசில் அங்கம் வகிப்பவர்கள் முரணான கருத்துக்களை தெரிவித்து வரும் நிலையில் சமாதானப் பேச்சுவார்த்தைகள் குறித்த எழுத்து மூல உறுதிப்பாடு அவசியம் என்பதை நோர்வே தரப்பும் ஏற்றுக் கொண்டிருந்தது.

இத்தகையதொரு சூழ்நிலையில் கடந்த திங்கட்கிழமை கொழும்புக்குச் சென்ற நோர்வேயின் சமாதானத் தூதுவர் எரிக் சூல்ஹைம் சிறிலங்காவின் அரசுத் தலைவர் சந்திரிக்கா குமாரதுங்க, மற்றும் லைமை அமைச்சர் மஹ்ந்த ராஜபக்ஸ ஆகியோருடன் சமாதானப் பேச்சுவார்த்தைகளை மீண்டும் ஆரம்பிப்பதில் உள்ள சிக்கல்கள் குறித்து பேச்சுவார்த்தை நடாத்தியுள்ளார். இதேவேளை,நாளை புதன்கிழமை வன்னி செல்லும் அவர் தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைமைப்பீடத்தை சந்தித்து பேச்சுவார்த்தை நடாத்தவுள்ளார்.

## புஷ்சிற்கு எதிரான...

(32ம் பக்கத் தொடர்ச்சி)

சனம் செய்து இத்திரைப்படம் உருவாக்கப்பட்டிருந்தது.

இதேவேளை, ஜப்பானியப் படமான 'நோவொடி நோ'வில் நடித்த 14 வயதேயான யாகிரு யயூயா சிறந்த நடிகராகவும், கிளீன் படத்தில் நடித்த சீன நடிகை மாகி சியூங் சிறந்த நடிகையாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். சிறந்த இயக்குநராக 'எக்சசையிஸ்' என்ற படத்தை இயக்கிய பிரான்ஸ் நாட்டை சேர்ந்த டொனி காட்லிப் தேர்ந்தெடுக்கப்பட்டார். 1956ம் ஆண்டுக்கு பின்னர் இவ்வருடமே ஒரு செய்தித் திரைப்படத்திற்கு முதன்மை விருது வழங்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.


## மட்டக்களப்பில் ஆயுதங்களுடன் ஒருவர் கைது

மட்டக்களப்பு மாமாங்கம் கூழாவடி எட்டாம் குறுக்கு வீதியில் வைத்து ஆயுதங்களோடு சந்தேக நபரொருவரை சிறீலங்கா காவல்துறையினர் கைது செய்துள்ளார்கள். சந்தேக நபரிடமிருந்து ரி-56 ரக துப்பாக்கியொன்றும், 50க்கும் மேற்பட்ட துப்பாக்கி ரவைகளும் மகசீன்களும் கைப்பற்றப்பட்டுள்ளன. கடந்த திங்கட்கிழமை மாலை 2 மணியளவில் கைது செய்யப்பட்ட இச்சந்தேக நபர், இயக்கமொன்றின் முன்னாள் உறுப்பினரென்று மட்டக்களப்பிலுள்ள சிறீலங்கா காவல்துறை தலைமையக அதிகாரி ஹரிச்சந்திர பண்டார தெரிவித்தார்.


LA CHAPELLE
இறைச்சிக் கடை
சுவையான, சுத்தமான, தரமான ஆடு, மாடு, உயிர் கோழி மற்றும் கோழிக் கால்களுடன் அனைத்து வகையான இறைச்சி வகைகளையும் பெற்றுக் கொள்ளலாம்
34 Rue Philippe Girard
Paris 75010, M° : La chapelle
Tel : 01 42 05 00 95

அதிசயம் ஆனால் உண்மை
உங்கள் அனைத்துக் கொண்டாட்டங்களுக்கும் தேவையான பேப்பர் பிளேட்ஸ், கப், மேசை விரிப்பு, கரண்டி, பாயாசக்கப், கை துடைக்கும் பேப்பர் மற்றும் உங்களுக்குத் தேவையானவற்றை ஒரே இடத்தில் பெற்றுக்கொள்ள
விமல் விநியோக நிலையம்
VIMAL DISTRIBUTION
1 Bis , Rue Chemain Vert
93800 Epiny Sur Saine
Port 0616812200 Ou 0666795689
Tel.et Fax - 01 42 35 24 98
குறிப்பு - மிகுதிப் பொருட்கள் திரும்பப் பெறப்படும்.

Asha Video Movies
உங்கள் இல்லத்தின் திருமணம், பூப்புனித நீராட்டுவிழா பிறந்தநாள் மற்றும் அனைத்து மங்கலகரமான நிகழ்வுகளைச் சிறந்த முறையில் (Digital - DV Camera) மூலம் வீடியோவில் படம் பிடித்து, நவீன முறையில் கணினி (Computer) மூலம் பதிவுசெய்து தருகின்றோம். அத்துடன் புகைப்படமும் எடுத்துக் கொடுக்கப்படும்.
தொடர்புகளுக்கு: 01 48593429 / 0615737073
Pub-Fr-39

CEFT FORMATION
Organisme de Formation
Ceft Formation
Juin 5
Français Langue Etrangère FLE
** பிரெஞ்சு ஆரம்ப வகுப்பு
** இடைநிலை வகுப்பு
** உயர்தர வகுப்பு
கற்பிக்கப்படவுள்ள பாடங்கள்
Français orale - écrit ( Conversation )...
Vie pratique et vie quotidienne...
Connaissance de l'environnement...
socioprofessionnel Relations sociales
3h30 5h30
SPECIAL COMPUTER வகுப்புகள் ஆரம்பம்!!
Computer JUIN 5
(Certificat de Formation)
Course : A Windows XP & 98 (ஆரம்பவகுப்பு 30h)
Introduction to System Components and Operating Systems
Introduction to Networking Technology
Basic DOS Commands
Operating System : Windows 98, Windows XP
Introduction to Internet and Usages of Browsers

PC Computer
Course : B Word (30h) | Course : C Excel (30h) (25h)
Introduction to Windows ... Introduction to Windows
Microsoft Word ( Office ) ... Microsoft Excel ( Office )
Course : D Power Point | Course: E Hardware
Introduction to Windows ... System Assembling ( Hardware )
Microsoft Powerpoint ... Software Installations
81 rue de la Plaine 75020 PARIS • METRO : MARAICHERS
Tel : 01 41 14 94 21 Site internet : www.ceftformation.com
www.microceft.com



ஈழமுரசு
POOBALAM WEEKLY
"POOBALAM"
JOURNAL TAMOUL HEBDOMADAIRE
Siege Social
18 à 26, Rue Perdonnet,
75010 Paris, France.
RCS PARIS
B 452 164 817 (2004B03079)
Directeur de la publication:
A.F. Santiogu
Redacteur: K. Jeisanthar
Impression:
IMPRIMERIES SAGITTAIRE
157 BD Davout 75020 Paris
Via - Imprimé chez I.C.T
Z.A. de L'EPI d'Or
94800 Villejuif
FRANCE.
நிர்வாகி: அ.பி. சந்தியோகு
ஆசிரியர்: கி.ஜெய்சந்தர்

தபால் தொடர்புகளுக்கு:
POOBALAM
22, Rue Perdonnet,
75010 Paris, France
E.Mail-
Poobalam_murasu@hotmail.com

விளம்பர விநியோக தொடர்புகட்கு:
பிரான்ஸ்:
Tel: 01 40 05 95 15
Fax: 01 40 05 95 16
ஜேர்மனி:
T C C (வெளியீட்டுப் பிரிவு)
POSTFACH 101 613
46016 OBERHAUSEN
GERMANEY
TEL: 0208 205 99 103
FAX: 0208 205 99 104
HAND: 0170 2173152
சுவிஸ்:
MEDIA HOUSE
POSTFACH 6707, 3001 BERN.
TEL: 031 381 75 72
டென்மார்க்:
அன்பு
P.O.Box 65
7400 Herning, Denmark.
Tel: 86336352 - Fax: 65302588
பிரித்தானியா:
பரணி : - Tel: 07958675021
மோகன் : - Tel: 07961582285
இத்தாலி: மக்கள்கடை
VIA DANTE - 218A, PALERMO
Tel: 091-6824056
நோர்வே:
JAFFNA FOOD
Tel: 22425527



குறிப்பு:
இவ்விதழில் பிரசுரிக்கப்படும் விளம்பரங்களுக்கு அந்தந்த விளம்பரதாரர்களே பொறுப்பு. ஈழமுரசில் வெளிவரும் ஆக்கங்களை மறுபதிப்புச் செய்பவர்கள் முன்னனுமதி பெறவேண்டும்.



Restaurant Tharsana's
* இலங்கை, இந்திய உணவுவகைகளை உங்கள் குடும்பத்தோடு வந்து சுவைத்து மகிழ்ந்திடவும்
* உங்கள் இல்லத்தின் இனிய விழாக்களை கொண்டாடி மகிழ்ந்திடவும், அனைத்து உணவு வகைகளையும் முன்கூட்டியே பதிவு செய்து பெற்றுக்கொள்வதற்கும் லாச்சப்பலில் நீங்கள் நாடவேண்டியது.
Restaurant Prassah
Gastronomiques Indiennes
தர்ஷனாஸ் உணவகம்
23, Rue Perdonnet, 75010 Paris
Tél: 01 40 05 08 36- 06 80 02 93 41
M°: La Chapelle *ou* Stalingrad

தர்ஷனா & பிரஷா உணவகங்கள்
இங்கு சாப்பாடுகளை ஓடருக்குப் பெற்றுக் கொள்வதுடன், உங்கள் விழாக்களையும் இங்கு மகிழ்வுடன் கொண்டாடலாம்

பிரஷா உணவகம்
54 Rue Louis Blanc, 75010 Paris
Mo: La Chapelle *ou* Louis Blanc
Tel: 01 53 26 39 41

ஈழமுரசு ஐரோப்பா
POOBALAM WEEKLY
அனைத்துத் தொடர்புகளுக்கும்:
"POOBALAM"
22, Rue Perdonnet
75010 Paris
Tél: 01 40 05 95 15
Fax: 01 40 05 95 16

மேற்கு லண்டன் மாநகரில்
புதிய நிர்வாகத்தில்... புதுப்பொலிவுடன்...
துவாரகா Cash & Carry
இல்லை என்பது இங்கில்லை
N°: 199, The Broadway, Southall, Middx. T.P: 020 8813 9126 Pub

## அமைதி முயற்சி

# தொடர்ந்து குழப்ப நிலையில் சந்திரிகா

அமைதிப் பேச்சுவார்த்தைகளை மீண்டும் ஆரம்பிப்பது குறித்து சிறீலங்காவின் அரசுத் தலைவி சந்திரிகா குமாரதுங்கா தொடர்ந்தும் ஊசலாட்டமான நிலைப்பாட்டையே கொண்டிருப்பதாக கொழும்பு ஊடக வட்டாரங்கள் தெரிவித்தன. தற்போது தடைப்பட்டுள்ள அமைதிப் பேச்சுவார்த்தைகள் யூன் மாத இறுதிக்குள் மீண்டும் ஆரம்பிக்கப்படலாம் என ஊகங்கள் வெளிவந்த போதிலும் பேச்சுவார்த்தையை ஆரம்பிப்பது குறித்து சந்திரிகா உறுதித் தன்மையற்ற போக்கையே கடைப்பிடித்து வருவதாக கூறப்படுகிறது. சமாதான முயற்சிகள் குறித்து ஐக்கிய முன்னணி அரசுக்குள் முரண்பாடான



கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டு வரும் நிலையில், சந்திரிகாவின் அடிக்கடி மாறுகின்ற குழப்பமான போக்கு சமாதான முயற்சிகளுக்கு ஆரோக்கியமாக அமையாது என இராஜந்திர வட்டரங்கள் சுட்டிக்காட்டியுள்ளன.

இலங்கையின் சமாதானப் பேச்சுவார்த்தைகளை மீண்டும் ஆரம்பிப்பதற்கு அடிப்படையாக தமிழீழ விடுதலைப் புலிகள் நான்கு விடயங்களை ஜனாதிபதிக்கு முன் வைத்திருந்தனர். இந்நிலையில், வடக்கு, கிழக்கு இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபை குறித்து முதலில் பேச்சுவார்த்தை நடாத்துவதற்கு சந்திரிகா தயாரில்லாத நிலையிலே இருப்பதாக அவருக்கு நெருங்கிய வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இதேவேளை, சமாதானப் பேச்


(தொடர்ச்சி 31ம் பக்கம்)

## புஷ்சிற்கு எதிரான திரைப்படம் கான் திரைப்பட விழாவில் வெற்றி

(24.05.04)

பிரான்சின் கான் நகரில் நடைபெற்ற 57வது உலகத் திரைப்பட விழாவில் அமெரிக்க இயக்குநர் மைக்கேல் மோர் இயக்கிய 'பாரன்ஹிட் 9/11' (Fahrenheit 9/11) என்ற திரைப்படத்திற்கு முதன்மை விருதான 'தங்கப் பனை' விருது வழங்கப்பட்டுள்ளது. 2001ம் ஆண்டு 9ம் மாதம் 11ம் திகதி அமெரிக்க நியூயோர்க் இரட்டைக் கோபுரங்கள் தகர்க்கப்பட்டதற்கு பின்னரான அமெரிக்க அதிபர் ஜோர்ஷ் புஷ்சின் நடவடிக்கைகளை விமர்

(தொடர்ச்சி 31ம் பக்கம்)




தங்கப்பனை வென்ற இயக்குநர்

## மேஜர் சூரியனின் நினைவுக்கல் திறப்பு

2002ம் ஆண்டு மே மாதம் முதலாம் திகதி முல்லைத்தீவுக் கடற் பரப்பில் நடந்த கடல் நடவடிக்கை ஒன்றின்போது வீரச்சாவடைந்த மேஜர் சூரியன் அல்லது சூரி (நாவேந்திரன் கமலேந்திரன் - கொழும்புத்துறை) என்ற மாவீரரின் நினைவுக்கல் நேற்றுத் திறந்து வைக்கப்பட்டது.

கோப்பாய் மாவீரர் துயிலும் இல்லத்தில் கடந்த ஞாயிற்றுக் கிழமை மாலை 5.30 மணியளவில் இடம்பெற்ற இந்தநிகழ்வில் முன்னதாக, மாவீரர் சூரியனின் திருவுருவப்படத்துக்கு வீரவணக்கம் செலுத்தும் நிகழ்வு இடம்பெற்றது. மேஜர் சூரியனின் பெற்றோர் ஈகச் சுடரை ஏற்றி, திருவுருவப்படத்துக்கு மலர்மாலை அணிவித்தனர். தொடர்ந்து ஏனையோர் மலர் வணக்கம் செலுத்தினர்.

PHONE 2000
LES PROFESSIONELS DE LA TELEPHONIE A VOTRE SERVICE
Réparation - Abonnements -Téléphones Mobiles - Vente en Gros et Détail - Déblocage
Internet - Installation Cybercafé - Abonnement ADSL - Création de Site Web.


Pour plus d'information visitez: www.phone2000.net - Tél: SFR Siva : 06 20 21 11 11